கல்கி

...ஜிட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



சபாஷ் கனிமொழி!

ALKI | 14.11.2010 | ₹ 10.00 | 96 பக்கங்கள் | www.kalkionline.com



- காவல்துறை கற்குமா?
  - ஞாநி

கார்த்தி சிதம்பரம் ஸ்பெஷல் பேஜஸ்!

நடிப்பும் ஒரு வேலைதான்!

சர்க்கரை என்பது நேற்று! தீர்வு என்பது இன்று!! நோபல் என்பது நாளை!!!



ஹெர்பாலயாஸ் இருக்க சர்க்கரை நோயால் பாதிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை...

இனிமேல் சர்க்கரை நோயாளிகளுக்கு உணவு கட்டுப்பாடு தேவையில்லை !

- காய்கறிகள், கீரைகள் போன்ற தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
- இன்சுலினை இயற்கையாகவே சுரக்க வைக்கிறது.
- பக்க விளைவுகள் ஏதும் இல்லாதது.
- இன்சுலின் ஊசியின் கொடுமையிலிருந்து விடுபடலாம்.
- கால் எரிச்சல், மதமதப்பு மற்றும் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி அளிக்கிறது.
- ஆயுள் முழுவதும் ஹெர்பாலயாஸ் மூலிகை மருந்துகளை சாப்பிட தேவையில்லை.
- ஹெர்பாலயாஸ் மூலிகை மருந்துகள் சாப்பிடும் போது தாழ்நிலை சர்க்கரை ஏற்படாது.
- மற்ற எவ்வித சிகிச்சை முறையுடனும் சேர்த்து எடுத்துகொள்ளலாம்.
- அரசு அங்கீகாரம் பெற்ற மூலிகை மருந்துகள் கேப்சூல்ஸ் வடிவத்தில்.
- ஹெர்பாலயாஸ் சிகிச்சைக்கு பின்பு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சர்க்கரை நோய் இருந்ததையே மறந்து சந்தோஷமாக வாழ்கின்றார்கள்.
- அதிநவீன இரத்தப் பரிசோதனை நிலையம் கொண்டது.

Hb A1c என்ற சராசரி சர்க்கரை அளவு 16, 15, 14, 13 என்ற அளவிலிருந்து நூற்றுக்கணக்கானவர்களின் சராசரி சர்க்கரை அளவு கடந்த 6 மாதங்களுக்குள் Hb A1c Level 6 க்கும் குறைவாக எட்டியுள்ளது.

சிகிச்சை நேரம் :
8 a.m. to 7 p.m

முன்பதிவு செய்யும் நேரம் :
8 a.m. to 6 p.m

முன்பதிவு அவசியம்

ஈரோடு
0424 3200707, 93454 55866
93618 55866, 93447 55866
93618 66066, 96297 85245

மேட்டூர்
04298 325866
97155 38663
99407 80099

ஹெர்பாலயாஸ்-க்கு வரும் போது நன்றாகவும், திருப்தியாகவும் சாப்பிட்டு விட்டு வரவும்

ஹெர்பாலயாஸ் டயாபடீஸ் கேர் பவுண்டேஷன் இந்தியா (பி) லிமிடெட்
பெருந்துறை ரோடு, சக்திநகர் பஸ் ஸ்டாப், செங்கோடம்பள்ளம், திண்டல் (P.O), ஈரோடு - 12

கிளை : பவானி மெயின் ரோடு, மேட்டூர் அணை - 1.

www.herbalayasdiabeticcure.com e-mail : info@herbalayasdiabeticcure.com



கல்கி ஆன்லைன்
புதிய பொலிவுடன் கல்கி ஆன்லைன்:
இலவசமாகப் பதிவு செய்யுங்கள்
இலவசப் பதிவு!
கல்கி, மங்கையர் மலர், கோகுலம், Gokulam எல்லா இதழ்களையும் உடனடியாகப் படிக்கலாம்!
http://www.kalkionline.com
Username
Password
Login
மங்கையர் மலரின் திருமண மலர்
வார ராசிபலன்
நடக்குமென்பார்: நடக்கும்!
புதிய கல்கி ஆன்லைன் பற்றி
உங்கள் மேலான கருத்துக்களை தெரிவியுங்கள்
CLICK HERE



தாடியால ஹீரோவானேன்!

இப்போதெல்லாம் 'களவாணி பய', மீனாட்சி சுந்தரம், எத்தன்... இப்படி யாராவது சொல்லிக் கேட்டால் உடனே நமக்கு நினைவுக்கு வந்து விடுகிறது நடிகர் விமலின் திரு(?)முகம்! சினிமாக் கோட்டையின் கதவைத் தட்டியும் பிறகு முட்டியும் தான் திறந்த கதையைத் தோளோடு கை போட்டுப் பேசும் எளிமையோடு குறும்பு கொப்பளிக்கும் வார்த்தைகளோடும் சொல்கிறார் விமல்...

"வீட்டுக்கு அடங்காத பிள்ளை. நண்பர்களுடன் சேர்க்கை சேர்ந்து ஒரு சினிமா விடறதில்லே. மனசு முழுக்க சினிமா... சினிமா! படிப்பு ஏறலை. பத்தாவது ஃபெயில். சினிமா பைத்தியம் முத்தி உருப்படாம போயிடுவேன்னு அப்பா வெச்சிருந்த மணல் அள்ற லாரியை என்னைப் பார்த்துக்க சொன்னார். எனக்கு அதிலே உடன்பாடு இல்லாததாலே மூன்று லாரி ஒரு லாரியா மாறிப்போச்சு. வேற வழியில்லாமதான் என் அப்பா என்னை சென்னைக்கு அனுப்பி வச்சார்!

சினிமாவிலே நுழைய கலா மாஸ்டரோட டான்ஸ் கிளாஸ்லே சேர்ந்தேன். நிறைய உதவி இயக்குநர்களை நண்பராக்கினேன். அவர்கள் கொடுத்த ஐடியாபடி நடிக்கக் கத்துக்கணும்னு முடிவு எடுத்து பாலு மகேந்திராவோட 'கூத்துப்பட்டறை'யில் சேர்ந்து நடிப்புன்னா என்னன்னு கத்துக்கிட்டேன். கூத்துப் பட்டறைக்கு வந்த தரணி ஸார் என்னை விஜய் நடிச்ச 'கில்லி' படத்திலே நடிக்க வச்சார். அப்பதான் கிழக்கு வெளுக்க ஆரம்பிச்சுச்சு. அது பத்தோட பதினொன்னாவது வேடம். களவாணி இயக்குநர் சற்குணம் அப்ப



ன்னோட நண்பர். நான் சின்ன வேடத்தில் நடிக்கிறதைப் பார்த்துட்டு ''விமல் இப்படிச் சின்ன வேடத்தில் நடிச்சு வைக்காதே. பெரிய லெவலுக்கு ஆசைப்படு... நிச்சயம் நடக்கும்''னு தைரியம் கொடுத்தார். அதன் பிறகு பல படங்களில் எனக்குச் சின்னச் சின்ன வேடங்கள் தேடி வந்தன. எப்படியும் பெரிய வேடம் கிடைக்கும் என்ற மன உறுதியோடு காத்திருந்தேன். என் உறுதி வீண் போகவில்லை

அப்ப சசிகுமார் ஸார் ஆபிஸ்ல புதுமுகம் தேவைப்படுதுன்னு என் நண்பர்கள் சொல்ல அங்கே போனேன். பாண்டிராஜ் சார் தேர்வுக்காக என்னை அழைத்தார். நான் அப்போது தாடி மீசை இல்லாமல் மொழுமொழுன்னு இருந்தேன். அவருக்கு என்னை அவ்வளவா பிடிக்கலே. தாடி மீசை இல்லாததுதான் குறைன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. உடனே என்னோட செல்லில் ஒரு விளம்பரத்துக்காக மீசை வச்சு கிளிப்பிங்ஸ் எடுத்து வச்சிருந்தேன். அதை அவருகிட்டே காட்டினேன். ஒரு நிமிஷம் என்னை உற்றுப் பார்த்தார். சரி தாடி மீசையோடு ஒரு மாதம் கழித்து வந்து பார்னு. தாடி மீசை முளைத்தது; 'பசங்க' பட வாய்ப்பும் கிடைத்தது.

'பசங்க' படம்தான் என்னை 'களவாணி' ஆக்கியது. களவாணி பட இயக்குநர் சற்குணம் என் நண்பர்ங்கறதாலே அடிக்கடி சொல்லிட்டே இருப்பாரு! எனக்கு எப்ப படம் இயக்கும் வாய்ப்பு கிடைச்சாலும் நீதான் ஹீரோ என்று. 'பசங்க' படம் நடிச்சு ஓரளவுக்குப் பேர் வாங்கியிருந்த நேரம். அதனாலே சற்குணத்திடம், நான் நடிச்சா ஒத்து வராது. நீ வளர வேண்டியவன். நல்ல பெரிய ஹீரோவை போட்டு படம் எடுன்னு உரிமையா சொன்னேன். சற்குணம் இந்தக் கதைக்கு நீதான் பொருத்தமானவன்னு சொல்லி நடிக்க சம்மதிக்க வச்சாரு! தயக்கத்தோட தான் நடிச்சேன். களவாணி சற்குணத்தின் தன்னம்பிக்கைக்குக் கிடைச்ச வெற்றிதான்னு சொல்லுவேன்!

அடுத்து கலிங்கத்துப் பரணி. ரேணிகுண்டா படத்தோட நாயகி தனுஷா எனக்கு ஜோடி. இப்போ என் அப்பா என்னை மதிப்பா பார்க்கறார்!'' என வியக்கிறார் 'களவாணி' விமல்!

- விஜய்கோபால்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்

உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899

ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ₹ 500/-
வெளிநாடு : ₹ 3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

● ஜெயலட்சுமி சேஷாத்ரி, கும்பகோணம்

? காமன்வெல்த் போட்டி ஊழல் விசுவரூபம் எடுத்துள்ளதே - வருமான வரி அதிகாரிகள் அறுபது இடங்களில் அதிரடி சோதனை நடத்தியுள்ளனரே?

! ஐ.டி, சி.பி.ஐ, விஜிலன்ஸ், விசாரணைக் குழு - எல்லாம் தேடியும்கூட பலியாடுகள் தான் சிக்கும். ஓநாய்கள் ஒளிந்தும் நழுவியும் தப்பும்.

● ரேவதிப்ரியன், ஈரோடு

? நெய்வேலி வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டாரே முதல்வர்...?

! 'பவர் கட்'டை முடிவுக்குக் கொண்டு வர முடியலையே!

● சீனு சந்திரா, சென்னை - 4

? 'கண்ணதாசன் - கே.பி - எம்.எஸ்.வி கூட்டணி போல் இன்று யாரைச் சொல்ல முடியும்?


! தாமரை, ஹாரிஸ் ஜெயராஜ் (அல்லது ஏ.ஆர்.ரஹ்மான்) கௌதம் வாசுதேவ் மேனன் கூட்டணி அப்படித்தானே இருக்கிறது.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? "முதலில் இளைஞர்களை விவசாயம் பக்கம் திருப்ப ஏதாவது செய்யணும்னு எனக்குத் தோணுது." என்கிறாரே நடிகர் விஜய் - கவனித்தீர்களா?



✱ களத்துமேடு கிளாமர்!



✱... வெற்றிக்...

✱...கூட்டணி!

✱ வெள்ளித்திரையின்...

✱ காலி டப்பா கமெண்ட்!

! பாராட்ட வேண்டிய அக்கறை. எல்லாத் தொழில்களையும் போல, விவசாயத்துக்கும் கிளாமர் தேவையாக இருக்கிறது. ஆதாரத் தொழிலாக இருந்தாலும் அதில் ஈடுபடுவோரின் மன நிலை பெருமிதத்தோடு இருப்பதில்லை. கிளாமர் கிடைத்தால் கவனிப்பும் கௌரவமும் கிடைக்கும்.

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? "நாளை நமது ஆட்சி தோற்கடிக்கப்பட்டு, பார்ப்பனியத்தைப் பாதுகாக்கும் ஆட்சி ஏற்படுமானால் என்ன ஆகும்?" என்று முதல்வர் தரம் தாழ்ந்து கேட்டிருக்கிறாரே?

! இன உணர்வு அரசியல் என்ற பழைய



தி.மு.க.வில் உட்கட்சிப் பூசல் ஆரம்பித்து விட்டதே..?

பெருங்காய டப்பாவை மீண்டும் மீண்டும் தட்டிப் பார்க்கிறார் கலைஞர். அங்கே ஒன்றும் இல்லை என்பது அவருக்கு இன்னும் புரியவில்லை.

● என்.எஸ்.மணிமாறன், திருவண்ணாமலை

? 'அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்திய வருகை பற்றி?

! பாகிஸ்தானுக்கு அள்ளிக் கொடுத்தவர், அல்கொய்தா மீண்டும் அமெரிக்காவில் வாலாட்டுவதைப் பார்த்து அதிர்ந்திருக்கிறார். இந்த நிகழ்வு அவரது பயணத்தின் நோக்கங்கள் மீது ஒரு தாக்கம் ஏற்படுத்தினால் நல்லது.

● வி.எம்.செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? தி.மு.க.வில் உட்கட்சிப் பூசல் ஆரம்பமாகிவிட்டது போல் தெரிகிறதே?

! நன்றாகத் தெரிகிறது. கோஷ்டிகள் கூடாது மோதல் கூடாது என்று சொல்லி, தென்சென்னை மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் கலைஞரே இதை ஒத்துக்கொண்டு விட்டாரே. அவரையும் மீறி அது அவ்வப்போது தலையெடுக்கத்தான் செய்கிறது. லேட்டஸ்டாக வீரபாண்டி ஆறுமுகத்தின் 'கட்சிக்குள் சதி' குற்றச்சாட்டு!

● வி.விமல், சென்னை - 4

? 'இந்த ஆண்டு தீபாவளி தினத்தில் 300 கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் விற்பனை நடக்கும் என்று எதிர்பார்ப்பதாக 'டாஸ்மாக்' அதிகாரி கூறியுள்ளாரே?

! அரசுக்கு வருமானம் டாஸ்மாக் விற்பனை. குடும்பத்துக்கு வருமானம் 'குவாட்டர் கட்டிங்' ரிலீஸ்! தமிழ்ச் சமுதாயத்துக்கு வருமானம் சோகம்.

● லெஹரியன், திருவண்ணாமலை ★

? ஆணாதிக்கம் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியாவுக்கு ஐந்தாவது இடமாமே?

! பெண்கள் கண்டு வரும் வளர்ச்சி, பெற்று வரும் சமூக அங்கீகாரம் என்ற நோக்கில் பாஸிடிவ்வாக ஆய்வு நடத்தியிருந்தால் இந்தியா முதலிடம் பெற்றிருக்கும்.

● எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

? வரப்போகிற தேர்தல், தி.மு.க.வுக்குச்

நீங்கள் கேட்டவை

சோதனைக் காலமா அல்லது அ.தி.மு.க.வுக்குச் சோதனை காலமா?

! வாக்காளருக்குத்தான் கடும் சோதனைக் காலம்!

❐ ரூ.150/ பரிசு பெறுபவர்:
எஸ்.பக்கிரிசாமி, புதுச்சேரி

✱ ரூ. 75/ பரிசு பெறுபவர்:
லெமூரியன், திருவண்ணாமலை.

● எஸ்.அமிர்தம், சென்னை - 26

? ஸ்ரீபுரம் தங்கக் கோயிலை தரிசனம் செய்த ஸ்டாலின், ''சமூகத்துக்கு ஆன்மிகவாதிகளால் நடக்கும் நல்ல பணிகளுக்கு தி.மு.க. அரசு துணை நிற்கும்'' என்று சொல்லியிருக்கிறார். இது பற்றி...?

! ஆன்மிகப் பணிகூட சமூகப் பணிதான் என்று ஏற்காவிட்டாலும் ஆன்மிகவாதிகளின் சமூகப் பணியை இந்த அரசு ஏற்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், இந்தப் பாகுபாடு மூலம், ஆட்சியில் கட்சி சாயம் கலந்திருப்பது உறுதியாகிறது - இது மகிழ்ச்சி தரவில்லை.

✱ லேட்டஸ்ட் அதிர்ச்சி!



✱ ''கட்சிக்குள் சதி!''



✱ 'பிச்சை' பயமுறுத்தல்



● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? ''நான் அரசியலுக்கு வருவது ஆண்டவன் கையில் இருக்கிறது,'' என்கிறாரே ரஜினி?

! எந்திரத்தனமான டயலாக்!

● எஸ்.பக்கிரிசாமி, புதுச்சேரி ❐

? ''தமிழகத்தைப் பின்பற்றி இந்தியா முழுவதும் உழவர் சந்தைகள் திறக்க வேண்டும்'' என்று தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் கூட்டத்தில் தமிழகம் வலியுறுத்தியுள்ளது பற்றி...?

! தமிழகத்தைப் பின்பற்றி இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் நதிநீர் அனுபவ பாத்தியதையைப் பறிகொடுத்துவிட்டு நிற்காமலிருந்தால் சரி.

● மல்லிகை மன்னன், மதுரை

? ''யாரையும் இழித்தும் பழித்தும் பேசும் பழக்கம் எங்களுக்கு என்றைக்குமே இருந்ததில்லை,'' என்கிறாரே கருணாநிதி - நம்ப முடிகிறதா உங்களால்?

! ''இறைவா! முதிர்ந்த வயதில் மறதியாகப் பேசுகிறார்; அன்றுபோல் இன்றும் மன்னித்துவிடு'' என்று பிரார்த்தித்துக் கொள்ள முடிகிறது!

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? ''ஆன்மிகம் சிறிதும் இல்லாமல் ஒரு மனிதன் வாழ்ந்தால், கடைசி காலத்தில் அவன் பிச்சைக்காரன் மாதிரி ஆகிவிடுவான்...'' என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறியுள்ளாரே - அப்படியா?

! வாழ்வோ, தாழ்வோ - வாலிபமோ அந்திம காலமோ, மனிதனுக்கு எப்போதும் மன நிம்மதி அளிப்பது நேர்மை. அந்த நேர்மைக்கு உறுதுணை இறையுணர்வு. இதைத்தான் ஜக்கி, கவனத்தை ஈர்க்கும் விதமாகச் சற்று பயமுறுத்துவது போலப் பேசுகிறார்!

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.


கார்த்தி ப சிதம்பரம் தலைமையை ஏற்போம்
காங்கிரஸ் ஆட்சியை தமிழகத்தில் அமைப்போம்
நவம்பர் 16ல் பிறந்த நாள் காணும்
தமிழக காங்கிரசின் முதன்மைத் தலைவர்
திரு. கார்த்தி ப சிதம்பரம்
அவர்கள்
பல்லாண்டு வாழ
மனதார வாழ்த்தும்
C. துயாபரன்
மாவட்ட துணைத் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

கசக்காது காதல் வாழ்க்கை!

கௌசி

என்ன கார்த்தி... ஸ்ரீநிதியைக் காதலிக்கும்போது பைக்கில் ஊர் சுற்றிய அனுபவத்தைக் கொஞ்சம் சொல்லுங்களேன்...

''ஒரு விஷயம் தெரியுமா? எனக்கு பைக் ஓட்டவே தெரியாது. அப்புறம் எங்கே ஊர் சுற்றுவது?'' என்று சொல்லி சிரிக்கிறார் கார்த்தி சிதம்பரம்.

கார்த்தியின் பெரியம்மா டாக்டர் விமலா ராமலிங்கத்தின் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் ஸ்ரீநிதியின் வீடு. பெரியம்மா வீட்டுக்கு, கார்த்தி போகும்போது, முதல் பார்வையிலேயே இருவருக்கும் பற்றிக் கொண்டது காதல். ''நான் படிப்பை முடித்து விட்டு தொழிலைக் கவனிக்க இறங்கிய நேரம் அது. எங்கள் காதலை அவரவர் பெற்றோரிடம் சொன்னவுடன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். காதலர்களாக நாங்கள் இருந்த காலம் மிகக் குறைவு. இதில் உண்மை என்னன்னா எங்கள் காதல் வாழ்க்கை திருமணத்துக்குப் பிறகுதான் கலகலப்பாகத் தொடர்ந்தது,'' என்கிறார் கார்த்தி.

வெற்றிகரமான திருமண வாழ்க்கையின் ஃபார்முலா?

''வெரி ஸிம்பிள்... ஒரு பெண்ணுக்குப் பல விதத் திறமைகள் இருக்கக்கூடும். திருமணத்துக்குப்பின் அவர்கள் விருப்பப்படி அந்தத் திறமைகள் வெளிப்படத் தடையாக இராமல், கணவன் அவற்றை மதித்து ஆதரவாக இருக்க வேண்டும். ஆனால் திறமைகளை முடக்கும் வகையில் கட்டுப்பாடான சூழலில்



பெண்களை வைத்துக் கொள்ளும் நிலைமைதான் இன்று சமூகத்தில் இருக்கிறது. இதுவே பல குழப்பங்களுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. மருத்துவராகப் பணிபுரிந்து கொண்டே நாட்டிய மேடைகளிலும் பிரகாசிக்கிறார் ஸ்ரீநிதி. கணவன் - மனைவி இருவரும் அவரவர்களுக்கு உள்ள தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இது வாழ்கையை இனிப்பாக்கத் தேவைப்படும் ஓர் அவசியமான டிப்ஸ்.''

கார்த்திக்கும் ஸ்ரீநிதிக்கும் கருத்து மோதல் வருமா?

''ஐந்தாவது படிக்கும் என் மகள் அதிதி நளினி சிதம்பரத்துக்கு நான் அதிக செல்லம் கொடுக்கிறேன்; அவள் படிப்பு விஷயத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீநிதி சொல்லுவாள். இது தான் எங்களுக்குள்ள பிரச்னை.''

பரத நாட்டியத்தை ரசிப்பவரா கார்த்தி?


''ஸ்ரீநிதிக்கு எந்த அளவுக்கு டென்னிஸைப் பற்றித் தெரிகிறதோ அந்த அளவுக்கு எனக்குப் பரதநாட்டியத்தைப் பற்றித் தெரியும். அவளது பரத நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு முதல் வரிசையில் உட்கார்ந்து விடுவேன். அது ஒரு moral support... அவ்வளவு தான்.''



"அவளது பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கு முதல் வரிசையில் உட்கார்ந்து விடுவேன். அது ஒரு moral support அவ்வளவுதான்."

தீக் காயங்கள் பட்டால் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது?

- குமரன், மதுரை



* டாக்டர் ராஜா

டாக்டர் ராஜா, இயக்குனர், DMS:

''தீக்காயம் பட்டுவிட்டால், உடனடியாக வாழைச்சாறு, இங்க் மற்றும் எண்ணெயைத் தீக்காயம் பட்ட இடத்தின் மீது கட்டாயம் ஊற்றவே கூடாது. மாறாக, தீக்காயம் பட்ட இடத்தை உடனடியாக நல்ல குளிர்ந்த சுத்தமான நீரைக் கொண்டு கழுவி விட வேண்டும். தீக்காயம் பட்ட பகுதியான கைகளையோ அல்லது கால்களையோ உடனடியாக பக்கெட் தண்ணீரில் விட்டு எடுக்க வேண்டும். தண்ணீர் ஊற்றினால் செப்டிக் ஆகிவிடும் என்பது மூடநம்பிக்கை. தீக்காயம் பட்ட இடத்தை அப்படியே விட்டுவிட்டால், அதில் பலவிதமான நோய் தொற்றுக்கள் தொற்றிக் கொள்ளும். அதனால், ஒரு தேர்ந்த மருத்துவரிடம் சென்று, தீக்காயத்துக்கு உடனடியாகச் சிகிச்சை ஆரம்பித்து விடவேண்டும். சாதாரணத் தீக்காயம் தானே... அது தானாக சரியாகிவிடும் என அலட்சியப் போக்கை ஒருபோதும் தீக்காயத்தில் காட்டக் கூடாது.''

எனக்கு அடிக்கடி நகச்சுத்தி ஏற்படுகிறது... ஏன் அப்படி ஏற்படுகிறது? நகச்சுத்தி வராமல்



அதைத்தான் செய்யணும் முதலில்..!

கல்கி கிளினிக்

இருப்பதற்கு என்ன செய்யலாம்?

-எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

ஹோமியோபதி மருத்துவர், ஜாய்ஸ் திலகம்:

''நகச்சுத்தி ஏற்படுவதற்கான முக்கியமான காரணம், நகத்தில் தோன்றும் தொற்று. இந்த நகத்தொற்று தோன்றுவதற்குப் பல காரணங்கள் உண்டு. நகங்களைக் கையாலேயே பிய்த்து விடுவது, அல்லது வாயால் கடித்து எடுப்பது என்ற பழக்கம் இருந்தால் நகங்களில் தொற்று ஏற்படும். பாத்திரம் கழுவி விட்டு, அந்தக் கைகளைச் சுத்தமாகக் கழுவாமல் அப்படியே விட்டு விட்டாலும், நகச்சுத்தி ஏற்படும். முகத்தை நாம் எப்படி அவ்வப்போது கழுவி சுத்தமாக வைத்துக் கொள்கிறோமோ அதைப்போலவே தான் நாம், நம் நகங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பழைய டூத் பிரெஷ்ஷை சோப் கலந்த தண்ணீரில் நனைத்தெடுத்து அதைக் கொண்டு நகங்களைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். நம் பற்களுக்கு இடையில் உள்ள அழுக்குகள் எப்படி பிரெஷ் கொண்டு துலக்குவதால் தான் சுத்தமாகுமோ அப்படித்தான் நம் நகங்களும். அதைச் சுத்தமாக வைத்துக் கொள்வது ரொம்பவே அவசியம். சிலர், நகச்சுத்தி ஏற்பட்டால் உடனே அதன் மீது எலுமிச்சைப் பழத்தைக் கவிழ்த்து வைப்பார்கள். இது ரொம்பத் தவறான பழக்கம். நகச்சுத்தி ஏற்பட்டால், மருத்துவரிடம் சென்று நகத்தில் உள்ள அந்தக் கிருமி நீங்க மருந்து மாத்திரைகளை எடுத்துக் கொண்டு தகுந்த சிகிச்சை முறைகளைச் செய்துகொள்ள வேண்டும்'.

எனக்கு வயது 80 ஆகிறது. உடம்பெல்லாம் அப்படி ஓர் அரிப்பு ஏற்பட்டு என்னை மிகவும் சிரமத்துக்கு உள்ளாக்கி வருகிறது. இந்த உடல் அரிப்பு நீங்க எத்தனை எத்தனையோ மாத்திரைகளையும், களிம்புகளையும் பயன்படுத்தியும் எனக்கு எந்தவிதப் பலனும் கிடைக்கவில்லை. இதிலிருந்து நிவாரணம் பெற மருத்துவ ஆலோசனை தேவை.

- சகுந்தலா, பெங்களூரு


● டாக்டர் ஜாய்ஸ் திலகம்

''வயது ஆக ஆக, உடலில் சிலருக்கு இப்படி அரிப்பு வரலாம். முதலில் உங்களுக்குச் சர்க்கரை நோய் உள்ளதா என்று பரிசோதித்துக் கொள்ளுங்கள். ஒரு சிலருக்கு, உடலில் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே fungal infection இருக்கலாம், அதனாலும் அரிப்பு வரலாம். நாம் துணி துவைக்க உபயோகப்படுத்தும் சோப்பு பல சமயங்களில் துணி சரியாக அலசப்படாமல் நமது துணிகளிலேயே தங்கி விடுவதாலும், நாம் அந்தத் துணிகளை உடுத்துவதாலும் அரிப்பு ஏற்படும். அதனால், நீங்கள் உடுத்தும் துணிகளை ஒன்றுக்கு இரண்டு முறை நன்றாக அலசி சுத்தம் செய்து உடுத்திக் கொள்ளுங்கள். உடம்பில் உப்பின் அளவைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள், அதைப் போலவே, pile தொந்தரவு இருக்கிறதா என்பதையும் பார்த்துக் கொள்ளுங்கள். அரிப்பு இருக்கும் இடங்களில் ஈரத்துணி கொண்டு துடைத்துக் கொள்ளுங்கள்.''

தொகுப்பு : நளினி சம்பத்குமார்

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

ஏழு வீணைகளின் ஏகாந்தம்!



உலகமயமாதலின் பிரதிபலிப்புகள் வாழ்க்கையின் பல பரிமாணங்களில் இன்று வெளிப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. கர்நாடக இசை இன்று தென்னாட்டு எல்லைகளை மட்டுமல்ல; கடல் கடந்து பல மேற்கத்திய நாடுகளிடையே உலா வரத் தொடங்கி விட்டது. அங்குள்ள ரசிகர்களின் ரசனைக்கேற்ப நமது நளினம் வளர்ந்த இசை (Melody). ஒத்திசைக்கும் (Harmony) ஏற்ப மாற வேண்டிய அவசியங்களும், அதற்கான சாத்தியங்களும் பல கோணங்களில் நிகழ்ந்து வருகின்றன.

டாக்டர் ஜெயந்தி குமரேஷ் அசாத்தியமான வீணைக் கலைஞர். அவருடைய 'கமகம்' நிறைந்த வாசிப்பு பல உலக நாடுகளில் புகழ் பரப்பி இருக்கிறது. அவர் சமீபத்தில் ஒரு வித்தியாசமான பரிசோதனை செய்திருக்கிறார். 'விளக்க முடியாத இரு நிலை' (Mysterious Quality) என்ற தலைப்பில் கிட்டத்தட்ட 45 நிமிஷங்கள் ஒரு தனி இசையைத் தன் வீணை(கள்) மூலம் வழங்கி, குறுந்தகடாக வெளியிட்டு இருக்கிறார்.

இதன் தனித்தன்மைகள் பல: ஏழு ஸ்வரங்களில் அடங்கும் நமது இசையை ஏழு வித்தியாசமான வீணைகள் மூலம் இசைத்து அதையும் தான் ஒருவராகவே பல கோணங்களில் ஊடுருவி ஓர் இசை மயக்கத்தைத் தந்திருக்கிறார்.

எப்படி ஒரு மனிதனுக்குள் பல குணங்களும், பல தனி மனிதர்களும் கலந்துள்ளனரோ, அதேபோல் நானே இசையில் பல பாகங்களாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்கிறார் ஜெயந்தி.

நான்கு இசை வடிவங்கள் கொண்டுள்ள இந்தத் தொகுப்பு சந்தேகமில்லாமல் வித்தியாசமானது.

கர்நாடக இசையின் இலக்கணங்களிலிருந்து விலகாமல், அதேசமயம் மேற்கத்திய இசையின் ஆதாரமான Harmonyஐ நமது கர்நாடக இசையின் உயிர்மூச்சான Melody யில் கலந்து நம்மை வேறொரு நிலைக்குக் கொண்டு செல்கிறது ஜெயந்தியின் இந்த இசைத் தொகுப்பு.

குறிப்பாக ஷண்முகப்ரியாவில் அமைந்துள்ள Wandering Dimension கேட்போரைக் கட்டாயம் பிரமிக்க வைக்கும். இதில் கர்நாடக இசையின் ஆழமும், மேற்கத்திய இசையின் கவர்ச்சியும், எவரையும் சட்டென்று தொட்டிழுத்துக் கேட்க வைக்கும் காந்த சக்தியும் பதிவாகி இருக்கிறது. இதில் ஜெயந்தியுடன் இணைந்து செயல்பட்டிருப்பவர்கள் இளம் பாடகர் அபிஷேக் ரகுராம், வயலினிசை மேதை குமரேஷ், ஒலிப்பதிவு செய்துள்ள ப்ரமாத் கிரண், மிக்ஸிங் செய்துள்ள யோதம் அகம், ரமேஷ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலக்கணங்களை மீறாத ரசனையுடன்,

தேவவிரதன்

விவாதத்துக்கு ஆளாகாத வித்தியாசங்களுடன், நெருடல் இல்லாத நளினத்துடன் நடைபயிலும் இந்த இசைத் தகடை சத்தம், இரைச்சல் இல்லாத அமைதியான தனிமையில் அமர்ந்து கேளுங்கள்.

ஏழு வீணைகளின் ஒலிகளும் உங்களை ஒரே வீணையிலிருந்தே வருகிறதோ என்று வியக்க வைக்கும்; வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விளக்க முடியாத ஒரு (mysterious) பரவச நிலைக்குக் கொண்டு செல்லும்.

ஜெயந்தி குமரேஷிடம் சில கேள்விகளும், அவர் அளித்த விளக்கங்களும்.



Mysterious Qualityயின் உருவாக்கம் எப்படித் தொடங்கியது?

இந்தியாவின் பாரம்பரிய இசைக் கருவியான வீணையை உலகம் முழுவதும் உள்ள இசை அன்பர்களுக்கு முழுமையாக அறிமுகப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது இந்த ஆல்பம். பல நாடுகளில் நம் நாட்டு இசையினைக் கேட்டு ரசிக்கும் வெளிநாட்டு ரசிகர்களால் வீணையின் தனித்தன்மையையும், அதனுடைய எல்லையற்ற ஆழத்தையும் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. அதை நன்கு வெளிப்படுத்தி வீணையின் நாதத்தின் சிறப்பை உலக இசைக்கு அறிமுகம் செய்வதற்காகவே நான் மேற்கொண்ட முயற்சி இது.

அலெக்ஸாண்டர் ரூபினோவ் என்ற ஆஸ்திரேலியக் கணிதப் பேராசிரியரின் புத்தகத்துக்கு நன்றி தெரிவித்திருக்கிறீர்கள்... எதற்கு?

பௌதீக விதிகளின்படி ஒரு தந்தியை மீட்டினால் அதிலிருந்து உண்டாகும் அதிர்வு பலவிதமான ஒலி அலைகளை உருவாக்கும். அதேபோல் மனிதனின் மனத்தில் உண்டாகும் ஓர் எண்ணம், உண்டாக்கும் எண்ண அலைகள் பலவாறாகப் பிரதிபலிக்கும். இதை விஞ்ஞான ரீதியாக அறிய அவரது புத்தகத்தின் விளக்கங்கள் உதவின.

இந்த ஆல்பத்தை உருவாக்கும்போது உங்களுக்கு உண்டான அனுபவங்கள்...

நிச்சயமாக வித்தியாசமானவை. இதில் பாட்டு இல்லை; பக்க வாத்தியம் இல்லை. உப கலைஞர்கள் இல்லை. சாதாரணமான கச்சேரி வடிவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட இந்தத் தொகுப்பைச் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்யவும், உலக அளவில் வெளியிடவும் ஒரு நிறுவனம் தேவைப்பட்டது.

அப்போது எங்களுக்கு அறிமுகம் ஆனவர்தான் ஒலிப்பதிவாளர் யோதம் அகம் (Yotam Agam). வீணையின் மிகச் சிறந்த ரசிகரான அவரும், பன்னாட்டு நிறுவனமான எர்த் ஸிங்கும் இதை வெளியிட முன்வந்தது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டம்.



கல்கி



2010 நவம்பர் 14
விக்ருதி ஐப்பசி 28
மலர் : 69
இதழ் : 16


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

பெண் இனத்துக்கு அவமதிப்பு!

உயர் பொறுப்புகளில் பெண்கள் சிறப்பாகச் செயல்பட்டால் அனைவருமே பெருமிதம் கொள்வது நியாயம்தான். ஆனால், அவர்களை அப் பொறுப்புகளில் அமர்த்துவதற்கென்று எந்த ஓர் அரசும் தனிப் பெருமை கொள்ள முடியாது; கூடாது. அரசுப் பணியில் அமரவும் அமர்த்தப்படவும் பதவி உயர்வு பெறவும் வரையறுக்கப்பட்ட விதிகளும் நடைமுறைகளும் உள்ளன என்பது அனைவருக்குமே தெரியும். அவற்றுக்கு உட்பட்டு தேர்வாகி வருவதில், சம்பந்தப்பட்ட பெண்களுக்குத்தான் பெருமையேயொழிய அரசுக்கோ ஆளுங்கட்சிக்கோ அல்ல!

ஆனால், அதே நியமனங்களில் சர்ச்சைகள் எழும்போதும் விதிமீறல்கள் நிகழும்போதும் அரசுதான் பொறுப்பேற்றாக வேண்டும். அந்த விதி மீறலின் பின்புலமாகக் கட்சி அரசியல் இருப்பின், அதற்கான கண்டனத்தையும் எதிர்ப்பையும் சந்தித்தாக வேண்டும்.

தமிழக டி.ஜி.பி.யாக லதிகா சரண் நியமிக்கப்பட்டதில் இத்தகைய விதி மீறல் சர்ச்சைதான் எழுந்துள்ளது. இவ் விஷயத்தில் தமிழக அரசின் மேல்முறையீட்டை உச்சநீதி மன்றம் நிராகரித்துள்ளது. டி.ஜி.பி. நியமனத்துக்கான மாற்றுப் பட்டியல் மத்திய தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும்; டிசம்பர் 7க்குள் வேறு டி.ஜி.பி நியமிக்கப்படவேண்டும். இதை





ஏற்றுச் செயல்படுகையிலேயே முதல்வர், லதிகா சரண் நியமனத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்றவர்களைச் சாடியிருக்கிறார்! இது கண்டனத்துக்குரியது.

முதல்வர் பேசியது பெண்கள் சுய உதவிக் குழுக்கள் தொடர்பான ஒரு நிகழ்ச்சியில். அந்த மேடையை அவர் தமது செயலை நியாயப்படுத்துவதற்காகவோ அல்லது பிறரை விமர்சிப்பதற்காகவோ பயன்படுத்தியது நாகரிகம் அல்ல.

தவிரவும், உயர் பொறுப்புகளை அடைந்துள்ள பெண்கள், தமது அரசின் பெருந்தன்மையினால் தான் அந்நிலையை எய்தியுள்ளனர் என்ற தொனியில் பேசுவது, கடுமையாக உழைத்து, போராடி முன்னுக்கு வந்திருக்கும் பெண்களின் முயற்சியை அவமதிப்பதாக அமைந்திருக்கிறது. சமூக முன்னேற்றத்தின் அங்கமாக நிகழ்கின்ற பெண் இனத்தின் வெற்றிச் சிறப்புக்கு, தி.மு.க. அரசு எவ்வாறு சொந்தம் கொண்டாட முடியும்?!

''பெண்களின் உயர்வை விரும்பாதவர்கள்தான் நீதிமன்றம் செல்வார்கள்,'' என்று முதல்வர் கூறியிருப்பது, லதிகா சரண் நியமனம் குறித்த சர்ச்சையை முற்றிலும் திசை திருப்பும் முயற்சியும்கூட.

எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் நேரடியாகப் பதில் கூற வேண்டுமேயொழிய, குற்றம் சாட்டப்படுவதற்கு ஒரு உள்நோக்கத்தைக் கற்பித்துப் பேசுவது, உயர் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அழகல்ல.

அரசியலின் தந்திரப் பாதைகள் மூலமாகவும் குறுக்கு வழிகள் மூலமாகவும் முன்னேறி வெற்றி பெற பெண் இனம் அவசரம் காட்டுவதாகத் தெரியவில்லை. அந்த அபகீர்த்தியை அரசோ, முதல்வரோ பெண்கள் மீது திணிக்காமல் இருப்பதே நல்லது! பெண்களுக்கு ஏற்கெனவே உள்ள எதிர்ப்புகளும் சவால்களுமே ஏராளம்; அரசின் குளறுபடிகள் அல்லது தவறான நடவடிக்கைகள் மூலம் புதிய எதிர்ப்புகள் பெருகி, அவர்கள் மேலும் கஷ்டங்களுக்கு ஆளாகாமல் இருக்கட்டும்.



டாக்டர். சுதா சேஷய்யன்

அருட்பெருஞ்ஜோதி என்ற தாரக மந்திரத்தின் திருவடிவம் இராமலிங்க வள்ளலார். தூய்மையின் அவதாரமாக வெண்மை உடையில் காட்சி தந்த அவர், எப்போதும் கைகளைக் கட்டியபடியே நடப்பார். காரணம்...? கைகளை வீசி நடந்தால்கூட, காற்றிலுள்ள பிற உயிர்களுக்குத் துன்பம் நேர்ந்துவிடலாம்.

இரகுவம்சத்தைச் சேர்ந்தவர் இராகவனான இராமர். இந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். காரணம்...? கூடுதலான ஒரு சொல்கூட, ஒருவேளை, பொய் சொல்ல வைத்துவிடலாம்.

சாதுர்மாஸ்யம் என்று நான்கு மாதங்கள் (சந்நியாசிகளானால், இது நான்கு பட்சங்கள், அதாவது இரண்டு மாதங்கள் என்று குறையலாம்) விரதமிருப்பார்கள் மகான்கள். அது மழைக் காலம். புழு பூச்சிகள், தத்தம் வளைகளிலும் பொந்துகளிலும் இருந்து வெளியில் வந்து உலவும். அந்தக் காலக்கட்டத்தில் பயணம் சென்றால், அறியாமலே அவற்றுக்குத் தீங்கு இழைத்துவிடக்கூடும்.

நாம் செய்கிற செயல் நன்மையாக இருக்கலாம்; ஆனால், அறிந்தோ அறியாமலோ அதில் பிறருக்குத் துன்பம் நேர்ந்துவிடக்கூடும். கைகளாலும் கால்களாலும் மட்டுமில்லை, கண்ணாலும் காதாலும், ஏன் மனத்தாலும் கூட இப்படிப்பட்ட தவறுகள் நிகழ்ந்து விடலாம். என்ன செய்யலாம்? எளிதாக வழி சொல்கிறார் ஆதிசங்கரர். அறிந்தும் அறியாமலும் செய்பவற்றுக்கு ஆண்டவனிடம் மன்னிப்பு கேட்கலாம்.


கர சரண க்ருதம் வாக் காயஜம் கர்மஜம் வா
ஸ்ரவண நயனஜம் வா மானஸம் வ அபராதம்
விஹிதம் அவிஹிதம் வா ஸர்வமேதத் க்ஷமஸ்வ
ஜய ஜய கருணாப்தே ஸ்ரீ மஹாதேவ ஷம்போ
(ஆதிசங்கரர் - சிவ அபராத க்ஷமாபண ஸ்தோத்திரம் - 17)

கைகளாலும், கால்களாலும், வாக்கினாலும், உடலாலும் செய்த தவறுகளுக்கும், செவியால், நயனங்களால், மனத்தால் இழைத்த தவறுகளுக்கும் என்னை மன்னித்துவிடு

மன்னித்துவிடு

கருணைக் கடலே; மஹா தேவனே, சம்புவே, போற்றி... போற்றி!

செய்த செயல்கள் சரி; ஒன்றுமே செய்யாவிட்டாலும்கூட பாவம் வருமா? மரவுரி அணிந்து தவம் செய்வதற்காகத்தானே கானகம் புறப்பட்டார் இராமபிரான்? பின்னர் எதற்கு அவருக்கு வில்லும் அம்பும்? செய்யக்கூடாததைச் செய்தாலும் தவறு; செய்யவேண்டியதைச் செய்யாவிட்டாலும் தவறு! காடானாலும் நாடானாலும் அதர்மத்தை அழிக்கவேண்டியது அந்த அவதாரத்தின் கடமை. அதனால்தான், (செங்)கோலைத் துறந்தாலும், இராமர் கோதண்டத்தைத் துறக்கவில்லை. அவிஹிதமானவற்றைச் (செய்யக்கூடாதவை என்று



மஹாதேவா!

ஒதுக்கப்பட்டவற்றை) செய்த தவறுக்காக மாத்திரம் இல்லை, விஹிதமானவற்றைச் (செய்யவேண்டியவை என்று வகுக்கப்பட்டவற்றை) செய்யாததற்காகவும் மன்னிப்பை வேண்டுகிறேன் மஹாதேவா! - விஹிதம் அவிஹிதம் ஸர்வமேதத் க்ஷமஸ்வ...

ஏற்கெனவே செய்தவை மட்டுமல்ல, இனிமேல் செய்ய இருப்பவை... தெரிந்து ஏன் செய்யவேண்டும்? பாவம் என்று தெரியாமலே நான் ஏதாவது செய்யக்கூடும்; தெரிந்தாலும், என் சந்தர்ப்பச் சூழல் என்று சப்பைக்கட்டு கட்டவும் கூடும்... அனைத்துக்கும் ஆண்டவனிடம் மன்னிப்பு கோருகிறது இந்த சுலோகம்.

(மந்திரம் ஒலிக்கும்)

மாலினி புவனேஷ்



நவநீதகிருஷ்ணனின் காதல் கதை!

நவநீதகிருஷ்ணன் யாருடனும் அவ்வளவாகப் பேசமாட்டான். மரப்பாச்சியின் செதுக்கல்களையொத்த அவன் முகம் எப்போதும் இறுக்கமாகவே இருக்கும்.எனக்கென்னவோ அவன் அப்படி இருப்பதனாலேயே மிகவும் பிடித்துப் போய்விட்டது. சுவரில் சாய்ந்தபடி ஒரு கால் மடக்கி நிற்கும் அவன் முகம் ஒரு முதிர்ந்த யோகியின் முகம் போல அழகாக இருக்கும். நானும் அவனும் கணிப்பொறி தயாரிக்கும் நிறுவனமொன்றில் விற்பனைப் பிரிவில் வேலை பார்த்து வந்தோம். அலுவலகத்தில் ஒருமுறை மரியாவிடம் அவன் கோபமாக நடந்துகொண்டது முதல் எல்லோரும் அவனிடம் கொஞ்சம் இடைவெளி விட்டே பழகினார்கள். ஒரு சம்பள நாளின்போது ''கடுவன் பூனை இன்னும் வரவில்லையா?'' என தனலட்சுமி கேட்டபோது, அவள் நவநீத கிருஷ்ணனைத்தான் குறிப்பிடுகிறாள் என்று எல்லோருக்குமே தெரிந்தது. நான் அவளிடம் அப்படிச் சொன்னது நாகரிகமாகப் படவில்லை என்றேன் கொஞ்சம் கோபமாக. தனலட்சுமி எப்பொழுதும் பேசுவதைப் போல குழைந்தபடியே ''ஒரு கேளிக்கைக்காகக் கூறினேன். பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்'' என்றாள் எப்பொழுதும்போல்.

என்னை ஏனோ நவநீதகிருஷ் ணனுக்குப் பிடித்துப் போய் விட்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள்

12

டது. ஒருவேளை நானும் தஞ்சாவூர்க்காரன் என்பது காரணமாக இருக்கலாம். இருவரும் விக்டோரியா லேஅவுட் பக்கம் தனி வீடு எடுத்துத் தங்கியிருந்தோம். எங்களுடன் பணிபுரியும் காயத்ரி சந்திரசேகர் மூலமாக அந்த வீடு எங்களுக்குக் கிடைத்தது. அவள் வீட்டுக்கு இரண்டு தெரு தள்ளி இருந்தது அந்த வீடு. அவளும் தமிழ்தான். மூன்று தலைமுறைக்கு முன்பு பெங்களூரு வந்து தங்கிவிட்ட குடும்பம். கன்னட வாசனை வீசும் தமிழில் காயத்ரி பேசுவது ஒரு தனி அழகு. அவளும்கூட நல்ல அழகுதான். அந்த வீட்டை அவள் எங்களுக்குக் காட்டிய அன்று மெரூன் கலர் பருத்திப் புடைவை கட்டியிருந்தாள். மிகவும் அழகாக இருக்கிறது என்று சொன்னபோது, சந்தோஷப்பட்டு மிகவும் வெட்கம் அடைந்தவளாய் எனக்கு நன்றி கூறினாள்

பொதுவாகவே உடை விஷயத்தில் அதிக கவனம் எடுத்து, மற்றவர்களை ஈர்க்கும் அடர்ந்த வண்ண உடைகளை அணிவதில் எனக்கு விருப்பம் அதிகம். காயத்ரி அன்று உடுத்தியிருந்த புடைவையும் நல்ல அடர்ந்த நிறம். அதனாலேயே கூட எனக்கு அந்த உடை பிடித்திருக்கக் கூடும். நானும் அதைச் சாதாரணமாகச் சொல்லவில்லை. அவளுடன் தொடர்ந்து பேசுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்ளவே அப்படிச் சொன்னேன்.

எப்போதோ ஒருமுறை நவநீத கிருஷ்ணன் ''உன்னை மாதிரி கோமாளிகளை, பெண்களுக்கு மிகவும் பிடித்து விடுகிறது'' எனச் சொன்னது ஒரு வகையில் சரிதான். நான் எதைச் சொன்னாலும் சிரித்துக்கொண்டாள் காயத்ரி. என் மூளை முழுவதும் நிரம்பியிருந்த, எதைச் சொன்னால் சிரிக்க வைக்க முடியும் என்ற கோமாளியின் உபாயங்கள் அன்று வெகு இயல்பாகச் சரியான தருணங்களில் வந்து விழுந்து கொண்டிருந்தது. என் கவனம் முழுதும் காயத்ரி பக்கம் சாய்ந்த ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நவநீத கிருஷ்ணன் வெளியே சென்றிருக்க வேண்டும். அவனை அங்கு காணவில்லை. நான் வெகு நேரம் காயத்ரியுடன் பேசிக்கொண்டிருந்தேன். நான் திரும்பும்பொழுது அவள் வீட்டில் சாப்பிட அழைத்தாள். நவநீதகிருஷ்ணனின் முகம் நினைவுக்கு வர அவளை மறுத்துவிட்டு, வீட்டுக்காக நன்றி சொல்லிவிட்டு நடந்தேன். நவநீதகிருஷ்ணன் தெரு முனையில் நின்றுகொண்டிருந்தான். நவநீத கிருஷ்ணன் அதிகம் பேசாமல் நடந்தான். காயத்ரிக்கு இன்று தூக்கம் பிடிக்காது என்றேன் சிரித்துக்கொண்டே. நவநீதகிருஷ்ணன் ஒன்றும் பேசவில்லை.

பல சமயங்களில் நவநீதகிருஷ்ணன் அப்படித்தான் நடந்துகொள்வான். அமைதியாக இருந்து விடுவது. தான் என்ன நினைக்கிறோம் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாதபடிக்குச் செய்வதில் அவனுக்கு ஒரு சந்தோஷம் இருந்தது. சதுரங்கம் விளையாடுவது போல மூன்று நான்கு நகர்த்தலுக்குப் பின்னரே முதல் நகர்த்தலின் அர்த்தம் புரிபடும். பல சமயங்களில் அதுவும் கூட புரியாது. அவன் போக்கை எதிர்கொள்வது ஆரம்ப நாட்களில் கஷ்டமாகத்தான் இருந்தது. ஒருமுறை நான் அவனை 'அடைகோழி' எனக் கூப்பிட்டதுக்காக என்னோடு இரண்டு நாள் பேசாமல் இருந்தான். அலுவலகம் முடிந்தவுடன் நேராக அறைக்குத் திரும்பி விடும் அவன் பழக்கத்தைக் கிண்டல் செய்யும்



விதமாக நான் அப்படிக் கூப்பிட்டேன். எப்பொழுதாவது மிக அரிதாகவே அவன் வெளியே செல்வான். தொலைக்காட்சியோ, ரேடியோவோ இல்லாத அறையில் எப்படி வெறுமனே காலம் கழிக்க முடியும் என்பது எனக்கு ஆச்சர்ய மூட்டும் விஷயமாக இருந்தது. நவநீத கிருஷ்ணன் நிறைய புத்தகங்கள் படிப்பான். சாயங்காலப் பொழுதுகள் அவனுக்குப் புத்தகங்களுடனே கழிந்தது.

ஒரு சமயம் கமர்ஷியல் ரோட்டில் திரிந்துகொண்டிருக்கும் பொழுதுதான் பார்வதியைப் பார்த்தேன் அந்தச் சமயம் அவள் பெயர் கூட எனக்குத் தெரியாது. எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு அவள். ஒரு வயதான பாட்டியோடும் சின்னக் குழந்தையோடும் அவள் தங்கியிருந்தாள். துணி காயப்போடும் பொழுதோ அலுவலகத்துக்குப் புறப்படும் நேரத்திலோ அவளைப் பார்ப்பேன். ஒரு முறை பக்கத்து மளிகைக் கடையில் அவளைப் பார்க்க நேர்ந்தது. லேசாகப் புன்னகைத்து வைத்தேன். அவளும் சிரித்தமாதிரிதான் தோன்றியது. கமர்ஷியல் ரோட்டில் அவளைப் பார்த்த பொழுது முகமன் செய்தேன். பதிலுக்கு அவள் சிரித்தாள். வரும் மாதத்தில் தன் குழந்தைக்குப் பிறந்தநாள் வருவதாகவும் அதற்காக 'ஷாப்பிங்' வந்ததாகவும் கூறினாள். மெல்ல நடந்தோம். அவள் பேசிய ஆங்கிலத்தில் மலையாள வாடை வீசியது. ''நாடு எவிட''? என்றேன் திடீரென. அவளுக்கு அவ்வளவு சந்தோஷம் நான் அப்படிக் கேட்டதில். ஏதோ ஓர் ஊரின் பெயரைச் சொன்னாள். தக்கலை அருகே இருக்கும் ஊர். அவள் காரைத் தெரு முனையில் நிறுத்தியிருந்தாள். அவள் கணவன் ஒரு மத்திய அரசு நிறுவனத்தில் பொறியாளராக வேலை பார்த்துக்கொண்டிருந்த பொழுது இறந்துவிட்டதாகக் கூறினாள். அதே நிறுவனத்தில் நிர்வாகப் பிரிவில் இப்பொழுது அவளுக்கு வேலை.

நான் எவ்வளவோ மறுத்தும் என்னை காரில் வரச் சொன்னாள். நான் இடையிடையே பேசின மலையாள வார்த்தைகளின் உச்சரிப்புகளுக்குச் சிரித்துக்கொண்டே பதிலளித்தாள். பழைய ஹிந்திப் படக் கதாநாயகிகள் மாதிரி பெரிய கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொள்வது அவள் வழக்கம். அது அவளுடைய வயதை மேலும் கூட்டிக் காட்டுவதாக இருந்தது. அவளின் முகவடிவுக்குச் சிறிய சட்டம் கொண்ட கண்ணாடி மிகவும் பொருத்தமாக இருக்கும் எனச் சொன்னேன். அப்படியா என்றாள்... மிகவும் சிந்தனை வயப்பட்டவளாய். தெருவில் நான் இறங்கியபோது, நவநீதகிருஷ்ணன் வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

நான் கண்களைச் சிமிட்டி நவநீதகிருஷ்ணனைப் பார்த்து சிரித்தேன். அவன் கண்டுகொள்ளவேயில்லை. கையில் இருந்த புத்தகத்தைப் படிப்பதில் மும்முரமாக இருந்தான். உண்மையில் அவன் கவனம் அங்கில்லை எனத் தோன்றியது எனக்கு. அனேக



திருவையாறில் இளமை குன்றாத பேரிளம் பெண்ணாகச் செங்கோல் ஏந்தி, ஔவைக் கோட்டத்தில் தமிழ்க் கடவுளாக காட்சி தருகிறார் ஔவையார். ஔவைக்கு அபிஷேகமும் நடக்கிறது. கோட்டம் முழுதும் 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்', 'மூதுரை' என கல்வெட்டில் தமிழ் மணம். சமீபத்தில் ஔவைத் திருத்தேர் உலாவுடன் சொல்லரங்

மாகத் தெருவில் எல்லா வீடுகளும் அமைதியாகி விட்டிருந்தன. நான் படுக்கைக்குப் போகும் முன் நவநீதகிருஷ்ணனைப் பார்த்தேன். புத்தகம் வாசல் படியில் கவிழ்ந்து கிடந்தது. நவநீதகிருஷ்ணன் வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். முகம் இறுக்கமாக இருந்தது.


மறுநாள் திருநெல்வேலி ரெட்டியார் விடுதியில் சாப்பிடும் பொழுது நவநீதகிருஷ்ணன் ''மனகல பெரிய ரோமியோன்னு நெனப்பா'' என்றான். நான் சிரித்தேன். ''உதை பட்டா தெரியும்'' என்றான் தொடர்ந்து நவநீதகிருஷ்ணன் அப்படிச் சொல்வது முதல் முறையில்லை.

அலுவலகத்தில் கலாட்டாக்களுக்குப் பஞ்சமில்லை. நவநீதகிருஷ்ணன் பொதுவாக இந்தக் கலாட்டாக்களில் அதிகம் கலந்துகொள்ள மாட்டான். ஒருமுறை மரியாவிடம் அலுவலக வேலை நிமித்தமாக ஏதோ பேசிக்கொண்டிருக்கும்பொழுது எப்பொழுதும் போல கண்களைத் தாழ்த்தி மேஜையைப் பார்த்துக்கொண்டே அவன் பேசினான். மரியா அவன் தாடையில் கைவைத்து முகத்தை நிமிர்த்தி, ''இப்போது சொல்'' என்றாள். யாரோ பின்னால் சிரித்தார்கள். நவநீதகிருஷ்ணன் வேகமாக மரியாவின் கைகளைத் தட்டிவிட்டு நகர்ந்தான். அவன் அதிலிருந்து மரியாவிடம் பேசுவதில்லை. அதற்கு அவ்வளவு பெரிதாக நடந்துகொண்டிருக்க வேண்டாம் சாதாரண கேலியாக எடுத்துக்கொண்டிருக்கலாம் என நான் சொன்னபோது, என்னிடமும் கோபப் பட்டான் நவநீதகிருஷ்ணன்.

மரியா அதன் பின்னரும் நவநீதகிருஷ்ணனிடம் தன்னுடைய கேலியையும் கிண்டலையும் தொடர்ந்துகொண்டுதான் இருந்தாள்.

ஒரு சாயங்காலம் பார்வதியின் குழந்தைக்குக் காய்ச்சல் என்று அவளோடு பக்கத்து மருத்துவமனைக்குச் சென்றுவந்தேன். வீடு திரும்பியபோது வீடு பூட்டியிருந்தது. எனக்கு ஆச்சர்யம். நவநீதகிருஷ்ணன் வெளியே சென்றிருக்கிறான் என்பது புதிதான விஷயமாக இருந்தது. என்னிடம் ஒரு சாவி இருந்ததால் மழையில் நனையாமல் தப்பித்தேன். நவநீதகிருஷ்ணன் மழையில் நனைந்துகொண்டே வந்து சேர்ந்தான். ''நல்ல மழை'' என்றான். எங்கே சென்று வந்தான் என்று அவனாகச் சொல்வான் என எதிர்பார்த்தேன். அவன் ஒன்றும் சொல்லவில்லை. ''புத்தகக் கடைக்குப் போயிட்டு வர்றீயா?'' என்றேன். ஏதாவது சொன்னால் அவனிடமிருந்து பதில் வரும் எதிர்பார்ப்பில்... ''இல்லை சும்மா வெளியே போயிட்டு வந்தேன்'' என்றான் பொதுவாக.


அதன்பின் வந்த நாட்களில் யதார்த்தமாக நவநீதகிருஷ்ணனைக் கவனிக்கத் தொடங்கினேன். அவன் போக்கில் பெரிய மாறுதல்கள் தென்பட்டது. பெரும்பாலும் அவன் அலுவலகம் முடிந்து நேரே வீட்டுக்கு வருவதில்லை என்பதை கவனித்தேன். என்னிடம் சொல்லிக்கொண்டோ, சொல்லாமலோ திடீரென அலுவலகத்திலிருந்து அவன் காணாமல் போனான். இரவு அவன் வீடு திரும்புவதற்கு வெகுநேரமானது. ஒரு


ஔவையார் சிலை

பிஷேகம்!

கம், கவியரங்கம், பாராட்டரங்கம் என தமிழ் விழாவாக ஜொலித்தது. திருமணம் வேண்டி கன்னிப் பெண்களின் திருவிளக்கு வழிபாடும் சேர்த்துக் களைகட்டியது. ஔவைக் கோட்டம் இதுவரை 44 ஔவை பற்றி புத்தகத்தையும் வெளியிட்டுள்ளது. இசையோடு தமிழும் மதமும் சங்கமிக்கும் சந்தோஷ பூமியாகிறது திருவையாறு.

- சூர்யா



சனிக்கிழமை கெங்கம்மா வீடு பெருக்கும்பொழுது இரண்டு சினிமா டிக்கெட் குப்பையோடு குப்பையாகப் போனது. நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. நானும் காயத்ரியும் போன டிக்கெட்டாக இருக்கலாம் என நினைத்துக் கொண்டேன்.

ஆனால் மறுவாரமே மேஜையில் கசங்கிய நிலையில் இரண்டு டிக்கெட் கிடந்தது. நான் ஒரு தமிழ் திரைப் படத்தின் பெயரைச் சொல்லி அந்தப் படத்துக்குச் சென்றிருந்தாயா? என கேட்டபொழுது தலை யசைத்துக் கொண்டே நகர்ந்து கொண்டான் நவநீதகிருஷ்ணன். மேலும் நான் எதுவும் கேட்டு விடக் கூடும் என்று அவன் எண்ணியிருக்கலாம்.



ஒருமுறை தலை வாரிக் கொள்ளும் சமயம் அவன் சீழ்க்கை அடிப்பதை ஆச்சர்யத்துடன் பார்த்தேன். அப்படியெல்லாம் செய்யக் கூடிய ஆள் இல்லை. நவநீதகிருஷ்ணனை ஏதோ ஒன்று உள்ளிருந்து ஆட்டுவது போல இருந்தது எனக்கு. நான் பார்ப்பதைக் கண்ணாடியில் அவன் கவனித்திருக்க வேண்டும். உடனே நிறுத்திக் கொண்டான். அவன் வெளிர்நிற உடைகள் அணிவதைத் தவிர்த்ததை ரெட்டியார் கவனித்து, ''என்ன மாப்பிள்ளை கணக்கா உடுத்திரிய... ஏதும் விசேஷமா?'' என்றார் ஒருநாள். நவநீத கிருஷ்ணன் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்துக்கொண்டான். அவன் ஏதோ கனவு உலகில் மிதந்து கொண்டிருப்பதாக உணர்ந்தேன்.

> ''ஜனங்களுக்கு 'விழிப்புணர்வே' இல்லைன்னு தலைவர் வருத்தப்பட்டாராமே!''
> ''ஆமாம். நேற்று ராத்திரி அவரோட பேச்சைக் கேட்க வந்தவங்கலாம் தூங்கி வழிஞ்சாங்களாம்!''
> - அனன்யா

பொதுவாக ஊருக்குப் போகும்பொழுது நானும் நவநீதகிருஷ்ணனும் சேர்ந்துபோவது வழக்கம். அந்தமுறை கிருஸ்துமஸ் விடுமுறைக்கு நவநீதகிருஷ்ணன் வரவில்லை. நான் மட்டும் தஞ்சாவூருக்குப் போய் வந்தேன். நவநீதகிருஷ்ணன் வராததுக்குப் பெரிதாக ஒன்றும் காரணம் சொல்லவில்லை. ''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்றான். நான் விரிவாக ஒன்றும் கேட்டுக்கொள்ளவில்லை. நான் சில விஷயங்களை அனுமானித்திருந்தேன். நான் ஊரிலிருந்து வந்தபொழுது அவன் படுக்கையில் புக்கர் பரிசு பெற்ற இந்தியர் ஒருவரின் நாவலும் ''To KRISH'' என முகவரி இடப்பட்ட ஒரு வாழ்த்து அட்டையும் கிடந்ததை கவனித்தேன். என்ன வாழ்த்து அட்டை என்று தெரியவில்லை. கிருஸ்துமஸ் அல்லது புத்தாண்டு வாழ்த்துக்களாக இருக்கலாம். நான் யோசனையோடு குளிக்கச் சென்றேன். நான் திரும்பியபோது அது அங்கு இல்லை. நான் சிரித்துக்கொண்டேன் நானும் இது மாதிரியான திருட்டுத்தனங்களைச் செய்தவன்தானே. நவநீதகிருஷ்ணனிடம் நேரடியாகக் கேட்டு விடுவதற்கான நேரம் வந்துவிட்டதாக நினைத்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் எங்காவது வெளியே போகலாமா என்றேன் நவநீதகிருஷ்ணனிடம். அவன் தலையசைத்தான். கப்பன் பார்க் சாலையோரம் நடந்து சென்றோம். அவன் மௌனமாக நடந்து வந்தான். நான் என்ன கேட்கப் போகிறேன் என்பதை யூகித்து யோசனையோடு நடந்து வந்ததுபோல

இருந்தது. நானும் அதிகம் பேசவில்லை. எப்படித் தொடங்குவது என யோசித்தபடியே நடந்துகொண்டிருந்தேன். ஒரு சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தோம். நானும் காயத்ரியும் தேர்ந்தெடுத்த இடம் அது. வாகன சந்தடி அதிகம் இல்லாத இடம். எங்கிருந்தோ ஆரம்பித்தேன். பெங்களூருவில் நிலவும் புது வருட கொண்டாட்டம் பற்றியெல்லாம், தஞ்சாவூரில் இடிக்கப்பட்ட ஒரு பழைய தியேட்டர் பற்றி, விற்பனை இலக்கு கொடுக்கும் மன அழுத்தம் பற்றி என ஏதேதோ பேசிக்கொண்டே போனேன். கேள்வியைக் கேட்பதற்கான தருணம் நெருங்கிவிட்ட தாக மனது சொடுக்கிய ஒரு தருணத்தில் அவன் சாயங்கால வேளையில் வெளியே செல்வது எனக்கு ஆச்சர்யமாக இருப்பதாகக் கூறி நிதானித்தேன். நவநீதகிருஷ்ணன் தலைகுனிந்து கொண்டு மெல்ல சிரித்தான். நான் அவன் இடுப்பைக் கிள்ளினேன். ஒரு பெண் தன்னைக் காதலிப்பதாக மிகுந்த வெட்கத்தோடு சொன்னான் நவநீதகிருஷ்ணன். நான் ஆர்ப்பாட்டமாய் கத்தினேன். வழியே சென்ற ஒரு இளம்பெண் திரும்பிப் பார்த்துச் சென்றாள்.



அன்று இரவு திரும்பும் வழியில் நட்சத்திர அந்தஸ்து உள்ள ஓர் உணவகத்தில் உணவு சாப்பிட்டு அவன் காதலைக் கொண்டாடினோம். அவளை எனக்கு அறிமுகப்படுத்துவதாகக் கூறியபோது மணி ஒன்றைத் தாண்டியிருந்தது.

அதன் பின்னால் நாங்கள் தினமும் உறங்குவதற்குப் பின்னிரவாகிப் போனது. நவநீதகிருஷ்ணனுக்குப் பேசுவதற்கு நிறைய இருந்தது. சில சமயம் அவன் வேறு உலகத்தில் இருப்பது போல உணர்ந்தேன். அவள் பிறந்த நாளுக்கு எப்படி ஆச்சர்யப்படுத்தலாம் என என்னிடம் யோசனை கேட்டான். பொங்கலுக்குப் பின் வந்த ஒரு வாரத்தில் அவள் பிறந்த நாள் வந்தது.

அதிகாலையிலேயே கிளம்பிவிட்டான். அன்று அவர்கள் இருவரும் பிருந்தாவனம் போவதாகத் திட்டம். நவநீதகிருஷ்ணன் சென்றபின் நன்றாகத் தூங்கினேன். அன்று அலுவலகம் இல்லை. ஞாயிற்றுக்கிழமை என நினைவு. சாயங்காலமாக வெளியே கிளம்பினேன். காயத்ரியை எம்.ஜி. ரோட்டில் ஒரு ரெஸ்டாரண்டில் சந்திப்பதாகக் கூறியிருந்தேன். பேருந்தில் அதிக கூட்டமில்லை, விடுமுறையின் காரணமாக இருக்கலாம். பேருந்து எம்.ஜி.ரோட்டுக்குத் திரும்பும் நேரத்தில் தான் நான் பார்த்தேன். பேருந்து நிறுத்த பெஞ்சில் நவநீதகிருஷ்ணன் உட்கார்ந்திருந்தான். மிகவும் தளர்ந்து போயிருந்தான். எனக்குக் குழப்பமாக இருந்தது.

நவநீதகிருஷ்ணனுக்கு ஃபோன் செய்தேன். நவநீதகிருஷ்ணனின் குரல் உற்சாகமாக இருந்தது. அவனும் அவளும் மைசூரிலிருந்து புறப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அன்றைய பொழுது இனிமையாகச் சென்றதாகவும் சொன்னான். எனக்கு மெல்ல புரிபடத் தொடங்கியது. நவநீதகிருஷ்ணன் ஏதேதோ பேசிக்கொண்டே சென்றான். துக்கத்தின் வலி மிகவும் பாரமாக இருந்தது. பேருந்தின் பின்புறக் கண்ணாடி வழியாகப் பார்த்தேன். தூரத்தில் யாருமே அற்ற பெரிய வெளியில் நவநீதகிருஷ்ணன், அமர்ந்திருந்தான் மிகத் தனியாக. இருள் கவிழ்ந்துகொண்டிருந்தது. நவநீதகிருஷ்ணன், வீடு திரும்ப வெகு நேரமாகலாம். ●

தூரத்தில் யாருமே அற்ற பெரிய வெளியில் நவநீதகிருஷ்ணன் அமர்ந்திருந்தான். மிகத் தனியாக.

எனது தோல்விகளுக்கு நானே காரணம்!

—கார்த்தி சிதம்பரம்

ப்ரியன்

நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலை. வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மேல்தட்டு மக்களின் ஷாப்பிங் மால் ஆக இருக்கும் எல்டோராடா கட்டடத்தின் முன்பும், முதல் மாடியிலும் கூட்டம், கூட்டமாகக் கதர் சட்டை இளைஞர்கள். மூன்றாவது மாடியில் இருக்கிறது கார்த்தியின் வர்த்தக அலுவலகம். ''கேளுங்க... கேளுங்க!'' என்று பரபரத்த கார்த்தியுடன் சதாப்தி வேகத்தில் ஒரு பட் படார்!



படிக்கும்போது உங்கள் கனவு என்னவாக இருந்தது?

பத்து வயதுவரை நானும் மற்ற சிறுவர்களைப் போல 'பைலட்' ஆக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், டென்னிஸ் விளையாட்டு எனக்கு அறிமுகமான பின் உலகத்திலேயே மிகச் சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரராக வர வேண்டும் என்று விரும்பினேன். குறிப்பாகச் சொல்வதென்றால்

ஜான் மெக்கன்ரோ என் கதாநாயகர். டென்னிஸில் மாநில, தேசிய அளவில் இடம்பெற முடியவில்லையே என்ற வருத்தம் இன்றும் எனக்குண்டு. நான் ஒன்பதாவது படிக்கும்போது என் விருப்பம் பொது வாழ்க்கைக்கு வர வேண்டும் என்பதாக மாறியது. டென்னிஸையும் விடவில்லை. பொது வாழ்க்கை ஆசைக்குக் காரணம் என் தந்தையாகக்கூட இருக்கலாம். ஆனால், 24ஆம் வயதில், என் படிப்பையெல்லாம் முடித்து, தொழில் தொடங்கும் நேரத்தில்தான் எனது பொதுவாழ்க்கைப் பயணம் தொடங்கியது.

பெற்றோரிடம் அடி வாங்கியதுண்டா?

சே...சே... அப்படியெல்லாம் கிடையாது. அதுபோல நடந்து கொள்ளவும் மாட்டேன். ஆனால், எனக்குச் சிறு வயதிலேயே செய்தித் தாள்கள் படித்துக் காட்டி, படிக்கச் சொல்லி, அரசியல் ஆர்வம் ஊட்டியவர் என் அம்மா. அப்போது வாட்டர்கேட் ஊழல் நடந்த காலகட்டம். நிக்ஸனுக்கு ஏன் பதவி போச்சு என்று யாராவது கேட்டால், ''ஒட்டுக் கேட்டார்; அதுதான் போயிடுத்து'' என்று பதில் சொல்லும் அளவுக்கு அரசியல் விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் அம்மா. இதுபோல பல விஷயங்கள்.

யார் உங்கள் ரோல் மாடல்?

பல விஷயங்களில் பலரை ரோல் மாடலாக வைத்துக்கொண்டிருக்கிறேன். பொதுவாகப் பார்த்தால் சிங்கப்பூர் அதிபராக இருந்த லீகுவான்யூ. மற்றபடி பில் கிளிண்டன், நேரு, டென்னிஸுக்கு மெக்கன்ரோ, பீட் சாம்ப்ராஸ்.

உங்கள் விருப்பங்கள் ஏதாவது பெற்றோரால் மறுக்கப்பட்டிருக் கிறதா?

என் விருப்பங்கள் நியாயமானதாக இருந்ததால் மறுக்கப்பட்டதே கிடையாது. அதேசமயம் எனக்கு என் பெற்றோர் கொடுத்த சுதந்திரத்தை என் மனசாட்சிக்கு விரோதமாகப் பயன்படுத்தியதே கிடையாது. எனது தோல்விகளுக்கு நானே காரணம்.



"ஆக்ரோஷமான மத்திய அரசியல் தேவை இல்லை. தவிர, எனக்கு ஹிந்தி தெரியாது."

வி.வி.ஐ.பி. மகனாக இருப்பதால் சந்திக்கும் சந்தோஷங்கள், சங்கடங்கள்?

ஒரு சங்கடமும் இல்லை. சந்தோஷம்தான். நமது சிஸ்டம் காரணமாகத் தாமதிக்கப்படும் சில காரியங்கள் மிகச் சுலபமாக நடக்கும்.




"அடிக்கடி பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்காதே!"

அரசியலில் உங்கள் குறி மத்தியிலா, மாநிலத்திலா?

சந்தேகமே வேண்டாம், மாநில அரசியல்தான். ஆக்ரோஷமான மத்திய

அரசியல் தேவையில்லை. தவிர எனக்கு ஹிந்தி தெரியாது. (சிரிக்கிறார்) அடுத்து நான் தேர்தலில் நிற்க மாட்டேன். நல்லவர்கள், இளைஞர்கள் ஜனநாயக அமைப்புகளில் இடம்பெறப் பாடுபடுவேன்.



45 வயதுக்கு உட்பட்டவர்களிடையே மட்டும் தேர்தல் நடத்தி, மாவட்ட அளவில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முயற்சி செய்வேன்.

தைரியமாகக் கருத்துக்கள் சொல்கிறீர்களே! அப்பா பின்பலமாக இருப்பதாலா?

எனக்கு எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. எனவே மனத்தில் நியாயம் என்று பட்டதைப் பேசுகிறேன். அப்பா ஸ்டைல் வேறு; என் ஸ்டைல் வேறு. ஆனால், அவருடைய புகழுக்கும், நல்ல பெயருக்கும் பங்கம் வராத வகையில்தான் செயல்படுவேன்.

உங்களை மாநில காங்கிரஸ் தலைவர் ஆக்கினால் நீங்கள் செய்யும் முதல் காரியம்?

சான்ஸே இல்லை. அப்படிக் கிடைத்தால், முதல் காரியம்,

தமிழகத்தில் காங்கிரஸ் பலம் எது? பலவீனம் எது?

பலம்: வாக்கு வங்கி; பலவீனம்: நிர்வாகத் திறமை இல்லாதது.

அரசியலில் எதைப் பார்த்தால் கோபம் வருகிறது?

தொலைநோக்குப் பார்வையில்லாமல் அரசியல் செய்பவர்களைக் கண்டால் வருகிறதே கோபம்!

கலைஞர் ஆட்சியில் பிடித்தது: பிடிக்காதது?

பிடித்தது: கலைஞர் காப்பீடு திட்டம். பிடிக்காதது: அடிப்படைக் கட்டுமான விஷயங்களை மேம்படுத்துவதில் இன்னமும் முனைப்பு காட்டாத நிலை.



"தி.மு.க. ஆட்சியில் இன்னமும் முனைப்பு இல்லை!"

நீங்களும் கனிமொழியும் இணைந்து நடத்திய 'கருத்து' வலைத்தளம் என்ன ஆனது?

ஆரோக்கியமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

அப்பா உங்களுக்குச் சொல்லும் அட்வைஸ்!

பொறுமையாகச் செயல்படு; அடிக்கடி பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்காதே! o

டாக்டர் கருந்தேள் கண்ணாயிரம்



❒ பங்களாதேஷ் பெண்மணி வீட்டில் 3500 பாம்புகள் இருந்தனவாம்.

அவைகளை ஜாதிவாரியாக சென்ஸஸ் எடுத்திருக்கலாம்!

❒ பெங்களூருவில் சிசுக்களுக்குக் கழுதைப் பால் தருகிறார்களாம்.

பின்னால் புத்தகப் பொதியைச் சுமக்க வலு தரும்!

❒ கோல்டு மெடலிஸ்ட் செய்னா பிறந்தவுடன் அவர் பாட்டி வந்து பார்க்கவில்லையாம்.

இப்போதாவது பார்த்து என் தங்கம் என்று கொஞ்சினாரா?

❒ நியூயார்க்கில் மூட்டைப் பூச்சிகள் படையெடுப்பால் அவதி.

தீவிரவாதத்தைப் போல் இதையும் ஒபாமா நசுக்குவாரா?

❒ தாய்லாந்து பெண்கள் வெளிநாட்டுக் கணவர்களை விரும்புகிறார்களாம்.

தாய்-லாந்து மாமியார்-லாந்தாகவும் அமைவது பிடிக்கவில்லை போலிருக்கு.

❒ சந்திரனில் காய்கறிகள் விளைவிப்பது சாத்தியமாம்.

எடையில் புகுந்து விளையாட முடியாதே என்கிறார் ஒரு கறிகாய்க்காரர்

❒ மிக நீண்ட முடியுள்ள நடிகை என்று பெயர் வாங்க தபுவுக்கு ஆசையாம்.

முடிக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாரே!

❒ 1905 பக்கக் குறிப்பை எழுதி வைத்து விட்டு அமெரிக்கர் தற்கொலை.

அவை பறக்காமல் இருக்க கயிறு கட்டிச் சுருக்கும் போட்டாரா?

❒ பாலூட்டும் தாய்மார்களுக்கு மத்திய அரசு ரூ. 4000 உதவி.

அதிகாரிகள் தொகையைப் பால்மாறாமல் வழங்கணும்.

❒ தேள் கொட்டினால் இதய ரத்தக் குழாய் அடைப்புகள் நீங்கிடுமாம்.

டாக்டர் கருந்தேள் கண்ணாயிரத்துக்கு இனி செம பிராக்டீஸ்தான்!



டமால்.. டுமீல்!

ஜே.எஸ்.ராகவன்

ஊர்ப்பாசம்

இலக்கியங்கள் சொன்ன எழிலெல்லாம் இன்னும் மிச்சம் இருப்பது கிராமத்தின் பக்கங்களில் மட்டும்தான் என்பது, புரட்டிப் பார்க்கும் போது புரிகிறது. குமரிமாவட்டத்தில் அமைந்துள்ள எனது கிராமத்தின் பெயர் பரக்குன்று. நாகர்கோவிலில் இருந்து 39 கிலோமீட்டர். கேரளமும் தமிழகமும் கைகுலுக்கிக் கொள்ளும் குளிர்த்தென்றல் இந்தக் கிராமத்தின் பூர்வீகச் சொத்து.

பரந்த குன்றுகளால் அமைந்த இடமானதால் இதற்கு இந்தப் பெயர் வந்ததாகப் பாட்டிமார் பெயர்க் காரணம் சொல்கிறார்கள். மத நல்லிணக்கத்தின் இதமான காற்று நிதமும் வீசிக்கொண்டிருக்கும் எனது கிராமத்தில் இரண்டு மத அடையாளங்கள் உண்டு. ஒன்று இந்துக்களின் வழிபாட்டு இடமான சாஸ்தான் கோயில். இங்கு அடர்ந்த ஆலமரமும், அழகிய சர்ப்பக் குளமும் அருகிலேயே அமைந்திருக்கும் இந்துக் கோயிலும் அழகியலின் வெளிப்பாடு. பாம்புகள் தொங்கி விளையாடும் ஆலமரத்தைப் பார்க்கையில் பால்யத்தில் மனத்துக்குள் பயம் ஓடித் திரியும்.

இன்னொன்று இயேசுவின் திரு இருதய ஆலயம். 1957ஆம் ஆண்டு ஜெர்மன் பாதிரியார் ஜேம்ஸ் தொம்மனால் கட்டப்பட்ட இந்தக் கோயில் இந்திய மத அடையாளங்களோடு கட்டப்பட்டிருப்பது வியப்பு. உள்ளே தூண்களெல்லாம் இந்துக் கோயில்களின் பிரதிபலிப்பு; கோபுரம் இஸ்லாமிய தொழுகைக் கூடத்தின் பிரதிபலிப்பு என, சர்வ மத ஒற்றுமையின் அடையாளமாய் நிமிர்ந்து நிற்பது இந்த ஆலயத்தின் தனிச் சிறப்பு. ஜேம்ஸ் தொம்மன் பக்கத்து ஊரில் கட்டிய ஆலயத்தில் இயேசு வேட்டி கட்டிக் கொண்டு நிற்கிறார் என்பது சுவாரஸ்ய செய்தி.

இந்துக்களின் ஆலய விழாக்களில் கிறிஸ்தவர்கள் கலந்து கொள்வதும், கிறிஸ்தவ மேடைகளில் இந்து தலைவர்கள் சமத்துவ உரை நிகழ்த்துவதுமெல்லாம் மணத்தை நனைக்கும் உறவின் வெளிப்பாடுகள்.

கூரை வீடுகள், ஓட்டு வீடுகள் என அணிவகுத்திருந்த கிராமத்தில் காங்கிரீட் வீடுகளெல்லாம் சமீபத்திய அறிமுகங்கள் தான். மலையாளக் கரையோரம் இருப்பதால் கேரள விழாக்களெல்லாம் இங்கே பிரசித்தம். ஓணத்துக்கு ஊஞ்சல் போடுவதும், ஓணக்கோடி உடுத்தி அத்தப்பூ வைப்பதும் இங்கே சர்வசாதாரணம்! நடந்தே மலையாள மண்ணுக்குப் போய்விடலாம் என்ப



வாசகர்களே! மண் மணம் மாறாத உங்கள் ஊர் பாசத்தை நெகிழ்வோடு 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'மென்று எழுதி அனுப்புங்க... உங்க ஃபோட்டோ மறந்திடாதீங்க.

தால், கலாசாரக் கைகுலுக்கல்களெல்லாம் நிகழ்ந்தே தீரும் என்பதே உண்மை.

நலமா என்பதை ''நல்லா இருக்கியா மக்களே'' என வெற்றிலை வாசத்துடன் விசாரிக்கும் திண்ணைப் பாட்டிகளின் அன்பில் பாசம் நிரம்பிக்கிடக்கிறது. கிராமத்தில் நேர் வகிடெடுத்துப் பாயும் சானல் (கால்வாய்) பால்ய காலத்து நீச்சல் நிலையம். வருடங்களின் புரட்டலில் அது வலுவிழந்து போனாலும் இன்னும் முழுமையாய் அழிந்து போகாதது ஒரு தற்காலிக ஆறுதல்.





குடை சரிசெய்ய வருபவர்களும், அம்மி கொத்த வருபவர்களும், பாத்திரத்தில் ஓட்டை அடைக்க வருபவர்களும், அவல் விற்க வருபவர்களெல்லாம் இங்கும் கதைகளாகிப் போய் விட்டார்கள். மலையிலிருந்து சங்கிலி இழுத்து வரும் பேய்களெல்லாம் இப்போது மின்சாரப் பூசாரியால் துரத்தப்பட்டிருக்கிறது.




சேவியர்

பொதுவுடைமையாய் இருந்த புறுத்திச் சக்கை (அன்னாசிப்பழம்), வரிக்கை சக்கை (பலா), பேரக்கை (கொய்யா), பப்பாளி எல்லாவற்றையும் இன்று ரப்பர் அழித்திருப்பது மனத்துக்குள் கனமாய் வந்து அமர்ந்துகொள்கிறது.



"நல்லா இருக்கியா மக்களே?"



ஒவ்வோர் ஆண்டும் நிகழும் மாற்றங்கள் விரைவில் கிராமம் தனது தனித் தன்மையை முற்றிலும் இழந்துவிடுமோ எனும் அச்சத்தைத் தராமல் இல்லை. இருந்தாலும் வெளியூர்ப் பறவைகளான நகர்ப்புற வாசிகளுக்குப் பரக்குன்று கிராமம் விடுமுறை வேடந்தாங்கலாய்த்தான் இருக்கிறது.


- சேவியர்

கனவு பல காட்டல்!

தொப்பி அணிந்த பிச்சைக்காரன்

இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு எழுதுதல் பற்றிச் சிந்தித்தவர் ழீன் பால் சார்த்தர். எழுதுதல் என்றால் என்ன, ஏன் எழுதுகிறோம், யாருக்காக எழுதுகிறோம் என்ற மூன்று கேள்விகளையும் ஆராய்கிறார் சார்த்தர். பிரெஞ்சு மொழியில் அவர் எழுப்பிய இக்கேள்விகள் 1950ல் ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம் உலக வாசகர்களுக்குக் கிடைத்தது. இந்த நூலில் 'தனது காலத்துக்கு எழுதுதல்' என்பதும் இணைப்பாக இருந்தது.

சார்த்தரின் நூல் தமிழில் இலக்கியத்தைப் பற்றிச் சிந்தித்தவர்களைப் பாதித்திருக்கிறது. க.நா. சுப்ரமணியம் தான் நடத்திவந்த 'இலக்கிய வட்டம்' என்ற கூட்டத்தில் அன்று பிரபலமாக இருந்த 14 எழுத்தாளர்களை அழைத்து 'எதற்காக எழுதுகிறேன்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிவரச் சொல்லிப் படிக்க வைத்தார். அதற்குப் பிறகு, இந்தக் கேள்வி எழுப்பப்படவே இல்லை. அடுத்த தலைமுறை எழுத்தாளர்களுக்கு இந்தக் கேள்வி, ஒரு வேளை அசௌகரியமாக இருந்திருக்குமோ என்னவோ?



ஞானக்கூத்தன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல படைப்பாளிகள் நாட்டின் விடுதலைக்காகவும் நசிந்துபோன தேசிய கலை இலக்கியங்களைப் புதுப்பிக்கவும்தான் எழுத வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். கவிதையிலும் அப்படித்தான். தொன்று தொட்டு இருந்துவந்த யாப்பு, கவிதைக்குப் பயன்படவில்லை என்று உணரத் தொடங்கியவர்கள் அதை வசனத்தில் எழுதிப் பார்த்தனர்.

வால்ட் விட்மனின் மகத்தான முயற்சி, உலக மொழிகள் எல்லாவற்றையும் ஆட்கொண்டது. 'வசன கவிதை' என்ற பெயர் எல்லா மொழிகளிலும் முழங்கத் தொடங்கியது. உலகின் மாபெரும் இலக்கிய விவாதமாக இது மாறியது.

தமிழிலும் பாரதியின் பிற்காலக் கவிதையை வசன கவிதை என்று பெயரிட்டுப் பதிப்பகத்தார் வெளியிட்டனர். அது மணிக்கொடியில் பங்கு பெற்ற ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், பின்பு க.நா. சுப்ரமணியம் இவர்களின் முயற்சியினால் தூண்டப் பெற்று வைக்கப்பட்ட பெயராக இருந்திருக்கலாம்.

2

ஒரு பக்கத்தால் தாங்க முடியாத சுமையை மற்றொரு பக்கத்துக்கு ஒருவர் மாற்றிக்கொள்வது போலத் தமிழ் மொழிக் கவிதையை

யாப்பிலிருந்து விடுவித்து வசன நடைக்கு மாற்றிக்கொண்டது. பாரதியார் வசன கவிதை பற்றி எதுவும் விரிவாகப் பேசவில்லை. ஆனால் அவர் காலத்தில் வசன கவிதை என்ற பெயர் இலக்கியப் படைப்பாளி களுக்கிடையில் புழங்கத் தொடங்கிவிட்டது.

அதை ஆங்கிலத்தில் எழுதிவந்த கே.எஸ். வேங்கடரமணியின் எழுத்தில் 1920ல் முதல்முதலில் சந்திக்கிறோம். கே.எஸ். வேங்கட ரமணியின் 'காகிதக் கப்பல்கள்' என்ற நூலில் இடம்பெறும் 'இந்தியப் பிச்சைக்காரர்கள்' என்ற கட்டுரையில் முதல் பகுதியாக வரும் 'தொப்பி அணிந்த பிச்சைக்காரன்'தான் வசன கவிதையைப் பேசுகிறது. இது ஒரு கவிதையாகத்தான் அமைந்திருக்கிறது. இவர் வசன கவிதை குறித்து சுருக்கமான தெளிவான விளக்கமும் தருகிறார்.



✱ சார்த்தர்



✱ க.நா.சுப்ரமணியம்

ஆனால் இந்தக் கெட்டிக்கார ஆள்
யாசகத்துக்கான தனது கோவை
இல்லாத முறையீடுகளை ஒழுங்கு
படுத்தி அன்றாட நடைமுறைக்
கேற்ற, சகித்துக்கொள்ளும்படியான
ராகம் போட்ட ஓர் உரைநடைக்
கவிதையாக்குகிறான்...

அற்புதமாக வர்ணித்திருக்கிறார் கே.எஸ்.வி. பிச்சைக்காரனைத் தொப்பி அணிந்தவனாகக் காட்டுவதும் ஓர் ஒதுக்குப்புற மனிதனின் வாழ்க்கையைச் சித்திரமாக்குவதும், கடைசி வரியைப் பரிமளிக்கச் செய்வதுமான கே.எஸ்.வி.யின் திறமை பிற்காலத் தமிழ்ப் படைப்பு களில் வெளிப்படவே இல்லை.

அங்கிருந்து நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். இன்றைய நவீன கவிதை பல முக்கிய பதிவுகளைச் செய்திருக்கிறது. அது என்ன?

(அடுத்த வாரம் பார்ப்போம்)



வாசகர் தலையங்கம்



நைசா ஒரு ஷாக்!

சீ.வசுமதி

ஒரு அரசோட... உண்மையான புகழும் சாதனையும் என்னன்னா சராசரி மனிதர்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்திப் பண்ணி நெருக்கடி இல்லாம, புலம்ப வைக்காம வெச்சுக்கிறதுதான்.

வெகுஜனத்தை அதிகம் பாதிக்கிற பிரச்னைகள் பல இருக்கு. அதில் ஒன்று இந்த மின்சாரம். மாதச் சம்பளத்து பட்ஜெட்டில் வீட்டு வாடகை, மளிகை, பால், சேவிங், கரண்ட் பில்... இப்படிப் பட்டியல் போடுவோம். அப்பப்போ அது அது பைசல் ஆனாதான் சரி. அடுத்த மாசம்னு தள்ளிப் போட்டா செலவாயிடும். கடனாயிடும். வாழ்க்கை பளுவாயிடும். இதுதான் நடைமுறை வாழ்க்கை.

கரண்ட் பில் மட்டும் இரண்டு மாதத்துக்கு ஒருமுறை ஏன்?

ஒரு குடும்பத்துக்கு மாதம் 330 யூனிட் ஆகுது. இதுவே இரண்டு மாதத்துக்கு 660 யூனிட். ஆனால் 600 யூனிட்டுக்கு மேலே போனால் கூடுதல் கட்டணம். ஏன் இந்த மறைமுக அபகரிப்பு? அந்தந்த மாதத்து பில்லை அப்பப்போ கட்டும் வசதி இருந்தா நாங்க ஏன் கூடுதலா கட்டணும்? எங்களுக்கான சலுகையை நாங்க ஏன் இழக்கணும்? மாதா மாதம் கட்டினா கட்டணம் குறைவு. மாதா மாதம் வேலை செய்ய ஊழியர் பற்றாக்குறையா? ஆடம்பர விழாவை நிறுத்திட்டு, புதுசா ஆள் எடுக்கலாம். பலருக்கு வேலைவாய்ப்பு கெடைச்ச மாதிரியும் இருக்கும். நடுத்தர குடும்பத்து பட்ஜெட் 'பணால்' ஆகாம ஏதோ கொஞ்சம் சாஃப்டா போன மாதிரியும் இருக்கும். அரசு இதைக் கவனிப்பது... தேர்தலுக்கு நல்லது.

வாசகர்களே...

உங்களைப் பாதித்த விஷயங்களை 'வாசகர் தலையங்கம்' பகுதியில், பாராட்டலாம்; குட்டலாம்; திட்டலாம்; உடனே எழுதுங்க!

ஆனந்தம்!



உயர்ந்த சந்தோஷத்தைத் தருவதாக நமக்குத் தோன்றுகிற நல்ல ஆசைகள் கூட உண்மையில் துன்பம் தருபவை தான். ஏனென்றால், எப்பேர்ப்பட்ட ஆசை யாயிருந்தாலும் அது ஒருவித அரிப்புத் தான். மனசில் அதிருப்தியிருந்து அத னால் ஏற்படுகிற அரிப்புத்தான் ஆசை, ஆசை என்பது. மனஸுக்கு எடுக்கிற தாகம்தான் ஆசை. ஆசையிருக்கிறதென் றால் மனஸ் என்று ஒன்று இருக்கிறது என்றே அர்த்தம். மனஸ் என்பது இருந்து விட்டால் உபத்ரவம்தான். மனஸ் ஆத் மாவுக்கு த்விதீயமான வஸ்து; அதனால் பயஹேதுவானது என்று பார்த்தோமே! இந்த மனஸ் என்கிற வஸ்து தான் அகண் டானந்தமான பரமாத்மா சிறுத்துக் குறுகிப் போய் ஜீவாத்மா என்று வேஷம் போட்டுக் கொள்ளும்போது இப்படி அதைச் சின்னதாகக் குறுக்க வைத்துக் கட்டுவது. தனி ஜீவன் கள், individual-கள் என்று தங்களை அவர் கள் தெரிந்து கொள்வதே தனித் தனி மனஸ்களைக் கொண்டுதான். ஆனதால் மனஸ் என்பது பரமாத்மாவுக்கு வேறேயாகத்தான் எப்போதும் இருக்க முடியும். ரொம்ப உயர்ந்த நிலையில் கூட அது பரமாத்மாவைத் தொட்டுக் கவிந்து கொண்டோ, அல்லது பரமாத்மாவின் சக்தி, கருணை முதலானவற்றை ஓரளவுக்குத் தனக் குள்ளும் நிரப்பிக் கொண்டோதான் இருக்க முடியுமே தவிர, அப்படியே அவனுடைய அகண்டா கார ஸ்வரூபத்தோடு ஒன்றாகி, அவனுடைய அகண்டானந்தத்தைத் தானும் அனுபவிக்க முடியாது. இந்த மனஸைப் பூராவும் அவனிடமே கரைத்து இல்லை யென்றாக்கிக் கொண்டால்தான் சாச் வதமான அகண்ட ஆனந்தம் கிடைக் கும்.

இந்த மனஸைப் பூராவும் அவனிடமே கரைத்து இல்லையென்றாக்கிக் கொண்டால்தான் சாச்வதமான அகண்ட ஆனந்தம் கிடைக்கும்.

அருள்வாக்கு

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

நட்சத்திரங்கள் சிரித்தன

"அப்பா..."

"அப்பா..."

"அப்பா....ஆ...ஆ..."

என்று மூன்று முறை விவேக் எழுப்பிய பின் கண்விழித்துப் பார்க்க முயற்சித்தார் பாலு. கடும் அசதி! தூக்கக் கலக்கத்தில் அவருக்குத் தலைகால் புரியவில்லை. தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது.

தலையை லேசாகத் திருப்பித் தன் மகன் விவேக்கைப் பார்த்தார். அந்தப் பார்வையினூடே பெருத்த சோகம்! முன் வழுக்கைத் தலையும், 'டொக்' விழுந்த கன்னமும், மூப்புத் தரும் முதிர்ச்சியும் சோகத்தைக் கூட்டிக் காண்பித்தன. பாலுவைப் பார்த்தால் 'எழுபத்தைந்து வயது முதியவர்' என்று ஊர்ஜிதமாகச் சொல்லலாம். ஆனால் அறுபத்தைந்து வயது தான் நடக்கிறது.

பாலு இமைகளை மேல்புறம் சில முறை தூக்கித் தூக்கித் தூக்கத்தை வலுக்கட்டாயமாகக் கலைத்துக் கொண்டிருந்தார்.

"அப்பா, எழுந்திருக்கிறீங்களா? மணி எட்டரை...டைம் ஆயிடுச்சு..." என்று உள்ளே வராமல் அறை வாசலிலேயே நின்ற வண்ணம் கேட்டான்.


"வர்றேன்..." என்றவிதமாக மண்டையை மிக மெதுவாக மேலும் கீழும் ஆட்டினார் பாலு.

பாலுவை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் முன்னதாகவே வீட்டை விட்டு வெளியேறி, அவருக்காக காரில் காத்திருந்தான் விவேக். அவன் முகம் வாடியிருந்தது. உள்ளத்தில் ஒருவிதக் குமுறல்... குற்ற உணர்ச்சி!

காரில் பின்பக்கமாக ஏறிய பாலு மௌனம் காத்தார். விவேக்கும். அட்லாண்டா டவுண்டவுனுக்குச் செல்ல குறைந்தது முப்பது நிமிடமாவது ஆகும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பு விவேக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது பாலுவுக்கு உயிரைக் கொல்லும் அளவுக்குத் தலைவலி வந்தது. மருத்துவரிடம் காண்பித்ததில் 25 வருடங்களுக்கு மேல் ஃபாக்டரியில் நைட் ஷிஃப்ட் பார்த்ததால் மூளையில் ஏதோ நரம்பு வலுவிழந்து விட்டதாகக் கூறினார். அவருக்கு நல்ல ஓய்வு தேவை என்றும், அவர் இனிமேல் நைட் ஷிஃப்ட் பார்க்கக் கூடாது என்றும் எச்சரித்தார். அப்புறம் அவனை இவனைப் பிடித்து மந்திரி வரை போய், ஜெனரல் ஷிஃப்ட்டில் கொஞ்ச வருடம் வேலை பார்த்துவிட்டு ஓய்வு பெற்றார்.





அந்தச் சமயத்தில், ''அப்பா, அடுத்த வருஷம் எனக்குப் படிப்பு முடிஞ்சுடும். உடனே நீங்க வி.ஆர்.எஸ். கொடுத்துடுறீங்க....குடும்பத்த இனிமே நான் பாத்துக்கறேன்பா...'' என்று வீராவேசமாக வசனம் பேசினான் விவேக். அந்த வசனம் இப்பொழுது அவன் மனத்தில் எதிரொலித்தது. இதுநாள் வரை பாலுவை அப்படித்தான் காப்பாற்றினான்.

ஆனால் இப்பொழுது போறாத காலம்! ப்ராஜக்ட் மேனேஜராக ஒரு பெரிய மென்பொருள் நிறுவனத்தில் அட்லாண்டாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சென்ற வருடம் அமெரிக்காவில் நடந்த பொருளாதார நெருக்கடியில் வேலை போய் விட்டது. வேலை தேடியும் சரிவர அமையவில்லை. ஆறு பேர் கொண்ட பெரிய குடும்பம். தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அட்லாண்டா டவுண்டவுனில் மூன்று நட்சத்திர ஹோட்டலில் இரவு நேர வரவேற்பாளர் வேலை காலி இருந்தது பற்றி படித்தான். அப்பாவை வற்புறுத்தாத குறையாக அந்த வேலைக்கு மனு போட வைத்தான். உடனே கிடைத்துவிட்டது! நாளைக்கு நூறு டாலர் சம்பளம். கடந்த ஒரு வாரமாக பாலு அந்த ஹோட்டலுக்கு வேலைக்குப் போகிறார். அவருக்கு மீண்டும் அந்த 'நைட் ஷிஃப்ட்' வந்து விட்டதே என்று பயம். மரண பயம்! ப்ராஜக்ட் மேனேஜராக வேலை

பார்த்த விவேக்குக்கு இந்த வேலையைப் பார்ப்பது என்பது கனவிலும் நடக்காத காரியம். மானப் பிரச்னை!

மாலை 6 மணிக்கு இரவு உணவை முடித்து விட்டு, 8.30-9 மணிவரை நன்றாகத் தூங்கிவிடுவார் பாலு. அப்பொழுது தான் இரவில் கொஞ்சம் தாக்குப் பிடிக்க முடியும். தொடர்ச்சியாக இரவு முழுவதும் வேலை இருக்காது என்றாலும் கண் அசரலாம் என்றால் அப்பொழுது தான் தொலைபேசி அழைக்கும், இல்லை வெளியே சென்றவர் சிலர் 1 மணிக்கும், 2 மணிக்கும் ஹோட்டலுக்கு வந்து கழுத்தை அறுப்பார்கள். அப்புறம் 'லிஃப்ட் ஏன் கீழ போகல? தண்ணி ஏன் வரலை?' போன்ற எரிச்சல்கள் வேறு. வெள்ளி, சனி என்றால் கேட்க வேண்டாம். அதிகாலை 4 மணி வரை ஆள் நடமாட்டம் இருக்கும். பாலுவால் நிம்மதியாகக் கண் அசர முடியாது. சரியாக இரவு 9.30 மணிக்கும், பிறகு காலை 6.30 மணிக்கும் அவரை காரில் அழைத்துச் செல்வான் விவேக்.

கார் 70 மைல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது. 5-10 நிமிடம் கழித்து மௌனம் கலைத்தான் விவேக்.

''அப்பா! உங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குனு புரியுது....'' என்று சொல்லி விட்டு, அப்பா ஏதாவது சொல்வாரா என்று பார்த்தான்.

பாலுவிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. இவனால் ஓட்டுனர் கண்ணாடியில் கூட அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. தைரியமில்லை! விவேக் தொடர்ந்தான்.

''தப்பா எடுத்துக்காதீங்கப்பா....இன்னும் ரெண்டு வாரத்துக்குள்ள எப்படியும் கண்டிப்பா வேலை கெடச்சுடும். ஆ ஆ ஆங்... அப்படி இல்லைன்னா நீங்க எல்லாரும் இந்தியா போய்டுங்க. நான் வேலை ஒன்னு வாங்கிட்டு உங்களுக்குச் சொல்லிவுடறேன். இதுக்கு மேல உங்களையும் கஷ்டப்படுத்த விரும்பல. நேத்து அம்மாட்ட கூட இதப்பத்தி சொல்லிக்கிட்டு இருந்தேன்.''



மீண்டும் ஒரு நீண்ட இடைவெளி விட்டான். பாலுவிடமிருந்து எந்தப் பதிலோ, யோசனையோ வரவில்லை.

அவனே தொடர்ந்தான்.

''ஏன்னா..... கொழந்தங்க படிப்பு ஸ்பாயில் ஆயிடக் கூடாதேன்னு பார்க்கறேன்...''

'அப்போ அப்பா உடம்பு ஸ்பாயில் ஆனா பரவால்லயா?' என்று அவன் மனதே கேட்டது. வெலவெலத்துப் போனவன், பிதற்ற ஆரம்பித்தான்.

''...நீங்க....நேத்துப் பக்கத்து வீட்டுப் பெரியவரிடம் பேசினப்போ... நான்

அப்படிச் சொல்ல வரலை... நான் சொல்றது ஒங்களுக்குப் புரியுதா?''

பிறகு சுதாரித்துக் கொண்டவன், ''மேக்ஸிமம் ஒரு மாசம் தான்... கண்டிப்பா கிடைச்சுடும்... அதுக்கு அப்புறம் நீங்க...''

விவேக்கின் இதயம் சற்று வேகமாகத் துடித்தது. பாலுவிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.



ஏன் அப்பா பதிலே பேசல? என்றிருந்தது. அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

சைக்கிள், கலர் டி.வி., டெக், ஆளுயர ஸ்பீக்கர், அப்புறம் பைக் என்று எப்பொழுதும் வயதுக்கு மீறிய பொருட்களைத் தான் கேட்பான் விவேக். பாலு எல்லாவற்றையும் வாங்கிக் கொடுப்பார், கொடுத்தார். இப்பொழுதும் அதே அடம், அதே மீறல்! தந்தைக்கு முப்பது வயதானால் என்ன அறுபது வயதானால் என்ன, தந்தையின் கடமை மகனின் மகளின் ஆசைகளை, தேவைகளைப் பூர்த்தி செய்வது தானே!

ஹோட்டல் வாசலில் கார் வந்து நின்றது. அவனுக்கு, 'ஏன் அப்பா பதிலே பேசல?' என்றிருந்தது. அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அப்பா ஏதும் பேசாமலே இருந்தார். அவனுக்கு லேசாக அடிவயிற்றைக் கலக்கியது. காரை நிறுத்திவிட்டு ஓட்டுனர் கண்ணாடி வழியே அப்பாவைப் பார்த்தான். காருக்குள் இருக்கும் எல்லா விளக்குகளையும் போட்டான். அப்பா வாய் திறந்திருந்தது. கண் மூடியிருந்தது.

''அப்பா...''

''அப்பா....ஆ...ஆ...''

அப்பா அசையவில்லை. கிடுகிடுவென காரை விட்டு இறங்கி அப்பா அமர்ந்திருக்கும் பின் இருக்கையின் கதவைத் திறந்து, அப்பாவை உலுக்கினான்.

'ம்...ம்...ம்...'

''அப்பா, ஹோட்டலுக்கு வந்தாச்சு...''

''அப்பா எப்போ தூங்கினாரு?''

கொஞ்ச நேரம் பாலுவுக்கு எதுவும் புரியவில்லை.

'போர்வை இருக்கா? ரொம்ப குளுருது!' என்று கார் இருக்கையில் காலைத் தூக்கி வைத்து, இரண்டு கைகளையும் தொடைக்கு இடுக்கில் வைத்துத் தற்காலிகமாகக் குளிர்காய ஆரம்பித்தார்.

''அப்பா.....ச்......இங்க பாருங்க.....ச்.... அப்பா''

'ம்....ம்....ம்'

''என்ன 9.30க்கே இப்படித் தூங்கறாரு!!??''

''அப்பா...'' என்று அவர் தோளில் தன் வலது கையை அழுத்தி வேகமாக உலுக்கினான்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, விவேக்கைப் பார்த்தார். வாயின் ஓரம் வழிந்தோடும் எச்சிலை 'உர்'ரென்று உறிந்தார். இடது கையைக் கொண்டு இடுப்பைச் சொறிந்தார். எதிரே ஹோட்டலைப் பார்த்துவிட்டு, மீண்டும் விவேக்கைப் பார்த்தார். விவேக்குக்கு என்னமோ போல் இருந்தது. விவேக்கிடம் எதுவும் பேசாமல் மெதுவாக காரை விட்டு இறங்கி ஹோட்டலை நோக்கி நடந்தார். விவேக் அவர் செல்வதையே நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

எதேச்சையாக ஹோட்டல் முகப்பின் பின்னே பரந்து விரிந்த கருத்த வானத்தில் அவன் பார்வை விழுந்தது. அங்கே நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டிருந்தன!

●



தலைவர் மறுசுழற்சி திட்டத்தில
பலே பேர்வழி!
என்ன சொல்றே?
தனக்கு விழற மாலையெல்லாம் பூமராங்
மாதிரி பூக்கடை பக்கமே வீசுறார் பாரு!
- அம்பை தேவா
தலைவர்

பூமராங் வாழ்க!

''என் மாமியார் ரொம்ப நல்ல வங்க.''

''அப்படியா? எங்க இருக்காங்க?''

''என் கல்யாணத்துக்கு முன்பே போய் சேர்ந்துட்டாங்க!''

- எஸ். பொருநை பாலு



''சமையல் பண்ணிட்டு பக்கத்து வீட்டு மாமிகிட்ட போய் காட்டிட்டு வர்றீயே ருசியா இருக்கான்னு கேட்டுட்டு வர்றீயா?''

''இல்லைங்க இதுக்கு என்ன பெயர் வைக்கலாம்ன்னு கேட்டு வர்றேன்.''

- பி. பாலாஜிகணேஷ்

''அவசரத்துக்குக் காய்கறி வாங்க நானே மார்க்கெட்டுக்குப் போனது தப்பா போச்சு...''

''ஏன்?''

''மார்க்கெட் போன நடிகைன்னு எல்லாரும் பேசிக்கறாங்க.''

- ஜெயந்திலை ஆர். கார்மேகம்

''டாக்டர், என் தலை ஆடிக்கிட்டே இருக்கு டாக்டர்?''

''மனைவி பக்கத்தில் இருக்கும் போது தானே - இதெல்லாம் சகஜம் தான்!''

- எம். அசோக்ராஜா

''அதைப் போல மெகா சீரியலைப் பார்க்கவே முடியாதா... எப்படி?''

''டைட்டில் சாங் நடுவுலேயே ரெண்டு தடவை ப்ரேக் விடறாங்கன்னா பாரேன்.''

- சாயம் வெ. ராஜாராமன்



காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தபேலா வாசித்து எல்லோரையும் அசத்தினான் ஏழு வயது கேசவ்! அநிருத் என்கிற என் பேரனோ மூன்று வயது நிரம்பாத நிலையில் எங்கள் உறவினர் வீட்டுத் திருமண வரவேற்பில் தபேலா வாசித்தான். மெல்லிசைக் குழுவினர் இருந்த இடத்துக்குத் தயங்கித் தயங்கிப் போன அவனுக்கு ஒரு தபேலாவையே கொடுத்து விட்டனர் இசைக் குழுவினர்! ஒரு முழுப்பாட்டுக்கும் அவன் தபேலா வாசிக்க அரங்கமே அசந்துபோய் விட்டது! அப்போது எடுத்த ஃபோட்டோ இது. எப்படிக் கலக்குறான் பாருங்க!

- எஸ். நாராயணன், சென்னை

ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/-

கலை உலகின் முதல்வர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு செவாலியே விருது வழங்கி பிரான்சு அரசு கௌரவித்தது. தமிழகக் கலை உலகம் நடத்திய செவாலியே விருதுக்கான விழா 1994ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது சிவாஜி மன்ற மாவட்டப் பொதுச்செயலாளராக நான் பணியாற்றினேன். அச்சமயம் சிவாஜி கணேசனுக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்தி நான் அவரிடம் ஆசி பெற்றபோது எடுத்தது இந்த அபூர்வமான படம். என் வாழ்நாளில் கிடைத்த புதையல் இது.

- திருப்பூர் ப.சிவகுமார் பிரபு




ஆஹா ஆல்பம்



நான், எனது மகள், மருமகன், பேரனுடன் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஒரு இந்தியத் தமிழர் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது நமது நாட்டியப் பேரொளி நடிகை பத்மினியைச் சந்திக்க நேர்ந்தது. அவருடன் அவரது பல படங்களை நான் ரசித்ததைச் சொன்னேன். அன்று எனது 60வது பிறந்த நாள் என்பதறிந்தும் என்னை வாழ்த்தியதுடன் அவர்களுடன் ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் சம்மதித்தார். கடந்த 10 ஆண்டுகளாக நான் அளவு கடந்த மகிழ்வுடன், நெகிழ்வுடன் போற்றிப் பாதுகாத்து வரும் நாட்டியப் பேரொளியின் நயமான புகைப்படம் இது.

- சுசீலா ஜெயராமன்,
சென்னை



இத்துடன் அனுப்பியிருக்கும் புகைப்படம் நான் என் பேரன் பேத்தியுடன் எடுத்துக்கொண்டது. நமக்கு எல்லாம் கொடுத்த தெய்வத்தை நன்றியுடன் நினைப்பதும், நமக்கு மனக் களைப்பு ஏற்படும் நேரத்தில் அமைதியும், சந்தோஷத்தையும் தரும் இப் புகைப்படத்தைப் பார்த்து மகிழ்வதும் என்னுடைய பழக்கம் மட்டுமல்ல, பாக்கியமும் கூடத்தான்.

- அச்சுத கிருஷ்ணமூர்த்தி, சென்னை

வாசகர்களே!

திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் ஐம்முன்னு எழுதி அனுப்புங்க...

கதவு திறந்தது ஏன்?

சமீபத்தில் நடிகர் ராதா ரவி காங்கிரஸில் சேரும் நோக்கத்துடன் ராகுலைச் சந்தித்தார். (அப்படியில்லை என்று அவர் மறுத்தது வேறு விஷயம்). ஆனால் அதிரடியாக அ.தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார்.



''காங்கிரஸ் இவரது விருப்பங்களுக்கு உடன்படவில்லை. உடனே அம்மாவுக்குக் கடிதம் எழுதி மன்னிப்பு கேட்டு கட்சியில் சேர விருப்பம் தெரிவித்தார். எஸ்.எஸ். சந்திரன் மறைந்த பின்னர் அதிரடியாகப் பேச ஆள் இல்லை. எனவே ராதா ரவி சேர்த்துக் கொள்ளப்பட்டார்'' என்கிறார் அ.தி.மு.க பிரமுகர் ஒருவர்.

சபாஷ்



கலைஞர் குடும்ப ஆதிக்கம் என்று எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை வைக்க, மிக ஆக்க பூர்வமான ஒரு பணியைச் செய்து 'சபாஷ்' சொல்ல வைக்கிறார் கனிமொழி. இதுவரை காரியாப்பட்டி, விருதுநகர், நாகர்கோவில், வேலூர், கடலூர், ஊட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அவர் நடத்திய எட்டு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 1,33,958 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறதாம். தம் செல்

அதிக ஒதுக்கீடு; அதிக பயன்பாடு



காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் பதினொரு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இந்தத் தொகுதிகளில் சாலைகள் போட, மேம்படுத்த, இருபத்தைந்து கோடி ரூபாய் நெடுஞ்சாலைத் துறையால் ஒதுக்கப்பட்டதாம். அதில் இருபது கோடியைத் தொழிலாளர் நல அமைச்சர் அன்பரசன் தமது ஆலந்தூர் தொகுதிக்கே ஒதுக்கிக் கொண்டு விட்டார் என்று மற்ற தொகுதி உறுப்பினர்களிடம் ஒரு குமுறல் இருக்கிறதாம். சாலைப் பணிகளை 'நன்றாக'ச் செய்யக்கூடிய ஒப்பந்தக்காரர்கள் - உடன்பிறப்புகள் அமைச்சர் தொகுதியில் இருப்பதால் இத்தனை தாராளமாம்.

கோயில் மணியோசை



தமிழகத்தில் உள்ள 33,000 கோயில்களில் அர்ச்சகர்கள் உட்பட ஒரு லட்சம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் நிர்வாகம் தொடர்பான தங்கள் கோரிக்கைகளுக்காக ஒருநாள் 'உள்ளிருப்பு' போராட்டம் நடத்தினார்கள். இதனால் பல கோயில்களில் பூஜை நடக்கவில்லை. இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத்தும் அவரது இயக்கத்தினரும் பல கோயில்களில் பூஜை நடத்தி,

வாக்கைப் பயன்படுத்தி, புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனங்களை முகாமுக்கு அழைத்து, தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தருகிறார். இது தவிர சுமாராகப் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று சகல தரப்பினருக்கும் வாய்ப்பு கிடைக்கிறதாம்.

கனிமொழி!

நிதி கொடுத்தால் வழி தெரியும்

சென்னையைச் சுற்றியுள்ள பல பொறியியல் கல்லூரிகளும் தனியார் பல்கலைக் கழகங்களும் பதவியில் இருக்கும் ஆளும் கட்சிப் பிரமுகர்களை நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதில் ஆர்வமாக இருக்கின்றன. ஆனால், தற்போது தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் 'நன்கொடை கொடுங்கள்' என்கிறார்களாம் ஆளும் கட்சிப் பிரமுகர்கள். சமீபத்தில் புறநகரில் இருக்கும் தனியார் பல்கலைக் கழகம் ஒரு கோடி ரூபாய் தேர்தல் நிதி கொடுத்து, ஒரு மூத்த ஆளும் கட்சிப் பிரமுகரை அழைத்ததாம். ''அந்தப் பல்கலைக் கழகம் விதிகளை மீறி ஏரி நிலத்திலேயே கட்டுமானங்களை எழுப்பியுள்ளது. இதுபோன்ற கல்வி நிறுவனங்களுக்குப் பதவியில் இருக்கும் ஆளும்கட்சி அரசியல் பிரதிநிதிகள் போகக்கூடாது'' என்கிறார் ஒரு நகராட்சி அதிகாரி.

விடுபட்டுப் போகாமல் நியமங்களை நிறைவு செய்தார்கள். பணியாளர்களின் கோரிக்கை மாலையிலேயே நிறைவேற்றப்பட்டது. 'கோயில்களில் பூஜை நடக்காவிட்டால் ஆள்கின்ற மன்னருக்கு ஆபத்து' என்று திருமூலர் சொல்லியிருக்கிறார். இந்தச் செய்தி தலைநகர தலைமைச் செயலகத்துக்குத் தக்க முறையில் எடுத்துச் சொல்லப்படவே மாலையிலேயே கோரிக்கைக்கு அடிபணிந்து விட்டது அரசு'' என்கிறார்கள் இந்து இயக்கங்களின் பிரமுகர்கள்.

பாலிடிக்ஸ் பஜார்

ராஜாவுக்கு செக்!

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தீவிர ஆய்வு நடத்தி அறிக்கை கொடுத்து இருக்கிறார் தலைமை தணிக்கை அதிகாரி (சி.ஏ.ஜி.) 1,70,000 கோடி அளவு அரசுக்கு எப்படி இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புட்டுப்புட்டு வைத்திருக்கிறாராம். வரும் பாராளுமன்றத் தொடரில் முதல் நாளிலேயே இந்த விவகாரத்தைக் கிளப்ப எதிர்க் கட்சிகள் முடிவு செய்து இருக்கின்றன. ''ராஜாவைக் கழற்றி விடுவதைத் தவிர காங்கிரஸுக்கு வேறு வழியில்லை. காங்கிரஸ் - தி.மு.க. பிளவு வருவதற்கு இதுவே தொடக்கமாக அமைந்துவிடும்'' என்கிறார் அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.



சஞ்சயன்

பேசிப் பார்க்கலாம் வா...!

நீயும் நானும்
பேசிக்கொண்டிருக்கலாம் வா!
நீ பசி மிகக் கொண்ட கொசுவாகவும்
நான் மாணைத் தின்று
மல்லாந்த மலைப்பாம்பாகவும்
இருக்கலாம்.

நான் பூசைக்கென விழுந்தும்
மிதிபட்டு நசுங்கிய பூவாகலாம்
குத்திக் குடல் பிதுக்கிய
திரிசூலமாக நீ இருக்கலாம்.

யாராக எதுவாக இருந்தாலும்
பேசிக்கொண்டிருக்கலாம் வா!

நீ சாபங்களையே தரும்
ரிஷியாகவும் - நான்
என்பலம் உணராத
அனுமனாகவும் இருப்பதை
பேசிப் பார்க்கலாம் வா!

- கலை இலக்கியா

கடற்கரை வானில்
இங்குமங்குமாய்
அலைந்து கொண்டிருந்த பலூன்கள்
தேடிக் கொண்டிருக்கிறது
கைத் தவறுதலாய்த் தங்களை
தொலைத்துவிட்ட குழந்தைகளை.

- எஸ்.நடராஜன்

ஒட்டடைகளைப் பத்திரப்படுத்தும்
என் அறைச் சிலந்தி
பல்லியின் சமிக்ஞை புரியாமல்
திகைத்து நின்றது.
உரக்க சிரித்த மரங்கள்
அவ்வப்போது வேடிக்கை பார்க்கின்றன
விமானங்களை...
அதன் நிசப்தங்களைக்
கூறுபோடும் சதியோடு
வந்தமர்கின்றன பறவைகள்.
பூதாகரமான பகற்பொழுது
கொஞ்சம் கொஞ்சமாக
மறைத்துக் கொள்கிறது
அடுத்து தன்னைப் புதுப்பித்துக்கொள்ள...

- மனுஷி

'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.




எனக்கு மிக அருகில்
இடைவிடாமல் முணுமுணுத்தபடியிருந்தாள் யாரோடோ
ஒரு சொல்லில் கண்களில் காதலிருந்தது.
மறு சொல்லொன்றில் வெட்கம்.
ஒவ்வொரு சொல்லிலும்
உதடுகள் பிரிந்த மென்புன்னகையும்
விழிகளில் அச்சவுணர்வுமாய்
பேசிக் கொண்டேயிருந்தாள் தன் அலைபேசியில்.
இறுதியாய் அவள்
பூப்போட்ட தன் கைக்குட்டையால்
கண்களைத் துடைத்தபடி
அங்கிருந்து நகரத் தொடங்கினாள்
எனக்கு இன்னும் அவ்விடத்தில்
கூடுதலாக வேலையிருந்தது!

- க.அம்சப்ரியா

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

"சமீபத்தில் திரையில் ஓடிக் கொண்டிருக்கும் படம் 'தங்கப் பாம்பு.' பல லட்சம் விலை போகும் (தங்கப்பாம்பு) மண்ணுளி பாம்பைப் பற்றி, பலரும் பலவிதமாகப் பேசி மக்களைக் குழப்பி வருகிறார்கள். மருத்துவ குணம் கொண்ட இந்தப் பாம்பைப் பற்றிப் படம் எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு நானும் பட வியாபாரியாக மாறினேன். மக்களின் அறியாமையைப் போக்கவே இப் படத் தயாரிப்புக்கு வந்தேன். அடுத்த படமும் மக்களை ஏமாற்றும் பிரச்னையான கலசம் பற்றி எடுக்கப் போகிறேன். படத்தின் பெயர் அபூர்வ கலசம் ஆயிரம் கோடி'' என்கிறார் தயாரிப்பாளர் விமல்ராஜ். தங்கப் பாம்பு படம் கிராமத்து மக்களைக் கவர்ந்தது நல்ல ரிசல்ட்டாம்.


('கோலிவுட் பெரியார்'னு பட்டம் கொடுத்தா வீரமணி கோவிச்சுப்பாரா?)



பயாஸ்கோப்

முரளி நடிக்க இருந்த கடைசிப் படம் 'விடியல் காரணம்'. இப்படம் அவர் இல்லாமல் போகவே மதுரை டு தேனி படத்தின் நாயகன் ஒப்பந்தமாகி உள்ளார். இதுகுறித்து இப்படத்தின் இயக்குநர் வசீகரன், ''முரளிக்காக உருவான கதை. அவரைப் போலவே மாநிறமான ஹீரோவைத் தேடிக் கொண்டிருந்தோம். கிடைச்சுட்டார். வளசை ராஜன் தயாரிக்கும் இப்படத்துக்கு மற்ற நடிகர்களின் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது'' என்கிறார்.

(அப்ளிகேஷன் போடறவங்க போடலாம். இதுவும் வேலை வாய்ப்புச் செய்திதான்)





அபிராமி மெகாத் தொடரில் முதலில் பால்ய திருமண விவகாரம்தான் கதைக் களமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் இப்போது அப்பாவி அபிராமி, கலெக்டர், கில்லர் என மூன்று ரோல்களில் நடித்து வருகிறார் கௌதமி. கதையை மாற்றியமைக்கச் சொன்னதில் முக்கியமான பங்கு 'தமிழக மன்னர்'தானாம்.

(தலைவா... சூடுபிடிச்சா சரி)



தவறு செய்பவர்களைத் திருத்த வேண்டிய இடம்தான் சிறைச்சாலை. ஆனால் அங்கேயே குற்றவாளிகள் உருவாகக் கூடாது என்ற கருத்தை வைத்து உருவாகும் படம் 'பாளை சிறைச்சாலை'. கே. பாலசந்தர் தயாரிப்பில் ஜி.சரவணா இயக்கும் இப்படத்தில் மெயின் வில்லியாகத் திருநங்கை வி.என்.ராணி நடிக்கிறார். இவர் திருச்சியில் பரதநாட்டியமும் இசை வகுப்பும் நடத்தி வருகிறார். எம்.ஏ.படித்துள்ள இவர், ''இப்படம் தனக்கு நல்ல பெயரை வாங்கித் தரும்'' என்கிறார்.

(அடுத்த சொர்ணக்கா ரெடி)



தொகுப்பு: விஜய்கோபால்

கடலூர்ல இருக்கும் ஒரு தலித் இளைஞனுக்கும், அங்கு பள்ளியில் படிக்கும் பிராமண பெண்ணுக்கும் நடக்கும் கதையாக 'திவ்யா மீது காதல்' திருதிருன்னு ஷூட்டிங்கில் வளருது. "இது என்னுடைய சொந்த படம். முதல் படம். இது உண்மைக் கதை. கதையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. பருத்தி வீரன் போல் இது ஒரு மாறுபட்ட களம். இதுல நானும் இரண்டு பாடல்கள் எழுதியிருக்கேன்" என்கிறார் இயக்குநர் மதன்.

(இன்னொரு டி.ஆர்.ரா?... அய்யோ சாமி!

மனிதர்களை மயக்கப் போகும் 'மந்திரப் புன்னகை'க் காரி மீனாக்ஷி... "இப்படம் எனக்கு மட்டுமல்ல; கோலிவுட்டுக்கே ஒரு திருப்புமுனையாக இருக்கும். இந்தப் படத்தின் வெற்றிக்காக வேறு எந்தப் படத்தையும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை" என்கிறார். அடுத்தடுத்து வரவிருக்கும் வெற்றிப் படங்களால் இப்போதுள்ளவர்களைத் தாண்டி முதல் இடம் வந்துவிடுவதுதான் என் கனவு என்கிறார்.

(அம்மணி... இது பகல் கனவு இல்லையே?!)



நடிப்பும் ஒரு வேலைதான்!

நாலாயிர



- பன்னிரு ஆ
- 4000 பாட
- ஒரு பக்கம்
- 1600 பக்க

எளிதில் படிக்க ப

இனிமை நிறைந்த பிரபந்தப் பாசுரங்களுக்கு எளிய உரை எழுதியவர் **டாக்டர் இரா.வ. கமலக்கண்ணன்**. தமிழாசிரியராகப் பணியாற்றியவர், தமிழ்ப் பல்கலைக்கழகம் தொகுத்த பேரகராதிக்கு, முதலாழ்வார் பாசுரங்களுக்கு சொல்லடைவு அமைத்துக் கொடுத்துள்ளார். திருப்பதி தேவஸ்தான மாத இதழான 'சப்தகிரி'யில் இவரது வைஷ்ணவம் பற்றியக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். இவர் படைத்த 'உலகப்பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது.

நூலாசிரியர், உரையாசிரியர், கட்டுரையாளர், தொகுப்பாசிரியர், சொற்பொழிவாளர் என, தான் ஈடுபடும் அனைத்துப் பணிகளிலும் வைஷ்ணவ உலகிற்கு, சிறப்பாக இன்றும் தொண்டு செய்துவருகின்றார்.

எமது இ
எழு
தனி
விரிவ

இதி
அவற்
வரலா
நெறி;
நோன்ட
சூத்தி
அமை
உவ
தை

முன்பதிவு செய்யத் தொடர்பு கொள்க :

✆ :99418 63542 / 90949 63125 / 93806 30192
2814 0347 / 2814 4995 / 2434 5582 / 4350 2995

இ-மெயில் : vartha@aol.in

26.11.2010 தேதிக்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே இந்நூல்கள் கிடைக்கும்!

முன்பதிவிற்கு முகவரி மட்டும் போதும்! முன்பணம் அவசியமில்லை!!

சிலுவை
சிலுவை
தபால்
முற்றிலும்

திவ்யப் பிரபந்தம்

ர்கள் அருளிய 24 நூல்கள்

❖ 4 தொகுதிகள்

ல்கள் எதிர்ப்பக்கம் தெளிவுரை

(15 செ.மீ. x 22 செ.மீ.)

ள் பதம் பிரித்துத் தரப்பட்டுள்ளன!!

விலை ரூ.1200

அருட்செல்வர்
டாக்டர் நா.மகாலிங்கம்
அவர்களின் ஆதரவுடன்
சலுகை விலையில்

ரூ.695

திப்பில், உரையாசிரியர்
முன்னுரையானது
ருதத்தக்க வகையில்
மக்கப் பெற்றுள்ளது.

தத்தின் சிறப்புக்கள்;
நளிய ஆழ்வார்களின்
ர் செயல்கள்; வைணவ
தர் பெருமை; பாவை
ாய் மொழியும் பிரம்ம
திவ்யப் பிரபந்தத்தில்
பழமொழிகள்; இசை;
போன்ற பல்வேறு
ரில் அரிய செய்திகள்
பெற்றுள்ளன.

இலவசம்

அஷ்டப் பிரபந்தம்

மூலமும் உரையும் 2 தொகுதிகளில்
1030 பக்கங்கள் (12 செ.மீ. x 18 செ.மீ.)
விலை ரூ. 500

அழகிய மணவாளதாசர் எனப்போற்றப் பெறும் பிள்ளைப் பெருமான் ஐயங்கார் இயற்றிய எட்டு நூல்களின் தொகுப்புதான் 'அஷ்டப் பிரபந்தம்'.

இந்நூலில் 'நாலாயிர திவ்யப் பிரபந்த'த்தின் பொருள் சிறப்பும், ஸ்ரீ நாதமுனிகள் உள்ளிட்ட குரு பரம்பரையைச் சார்ந்த வைஷ்ணவப் பெருமக்களின் அருள்செயல்கள் ஆங்காங்கே அமைந்திருப்பது கற்பவர்களுக்கு மிகுந்த மகிழ்வை விளைவிப்பதாகும்.

நூல் வேண்டுவோர், முன்பதிவு செய்க. பதிவு செய்வோர் அனைவருக்கும்
டிசம்பர் மாதம் 10ஆம் தேதியிலிருந்து நாலாயிர திவ்யப் பிரபந்தம்
4 தொகுதிகள் மற்றும் அஷ்டப்பிரபந்தம் 2 தொகுதிகள்,
ஆக 6 தொகுதிகளும் ஒரே பார்சலில் வி.பி.பி.யில் அனுப்பப்பெறும்.
தபால்காரரிடம் ரூ. 695 மட்டும் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

வர்த்தமானன் பதிப்பகம்
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராய நகர், சென்னை - 17.



வே.எழிலரசு

உன் மனசின் நேசத்தை...
ஒரு ரோஜாவிடம் சொல்...
அது தன் மென் இதழில்
வாசனையாக மலர்த்தி விடும்!

ஒரு மலையிடம் சொல்...
மௌனத் தொட்டிலால்
உன்னைத் தாலாட்டும்!

காற்றிடம் சொல்...
கவிதையின் சுவாசத்தில் வழியும்
அன்பு பரிசொன்றைத் தரக்கூடும்!

- ஆசு



'கடவுள்... வாழ்வின் மையத்திலிருப்பதான ஒரு வாழ்வையே வாழ்ந்தாக வேண்டும். அகந்தைக்கு இடம் கொடுத்துவிட்டால் கடவுள் நமது வாழ்வின் விளிம்புக்கு அல்லவோ நகர்த்தப்பட்டுவிடுவார்? அதன்பின் நமது வாழ்க்கைப் பயணத்தில் கடவுளின் இருப்பு?' உதயகுமார் தூக்கத்தை இழந்து சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அகந்தை வேண்டும்தான். தன் முனைப்பைத் தூண்டி இலக்கை அடைவதற்கான உந்துசக்தியைத் தருகின்ற அகந்தை. கொண்ட கொள்கையை இழந்துவிடாத மன உறுதியைக் காப்பாற்றுகின்ற அகந்தை வேண்டும்தான். அதில் சந்தேகமில்லை. ஆனால், 'நான்தான் எல்லாமும்', 'என்னால்தான் நீ' என்ற எண்ணங்கள் வெறுக்கத்தக்க அகந்தை அல்லவோ? அஃதல்லவோ என் இதயத்தில் இத்தனை நாள் பதுங்கியிருந்து இன்று வெளிப்பட்டுவிட்டது.

ஆனந்தைப் பார்த்து நான் அப்படிப் பேசியது எத்துணை பெரும் தவறு? அதுவும் நண்பர்கள்

காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை

காதல் கேம்பஸ்

முன்னிலையில். சே! பாவம் அவன் முகம் என்னமாய் வாடிவிட்டது? அவனது பிஞ்சு மனம் என்ன பாடு பட்டிருக்கும்? அவனது சுயமரியாதையைக் காயப்படுத் தக்கூடிய சொற்களை வீசிவிட்டேனே! அடுத்த வேளை உணவுக்கே சிரமப்படும் ஏழ்மையான குடும்பத்தில் அவன் பிறந்திருக்கலாம். ஆனாலும் ஊரை ஏய்த்துப் பிழைக்காத, உழைக்கும் வர்க் கத்தைச் சேர்ந்த குடும்ப



மல்லவா அது? 'வறுமை யில் செம்மை' என்ற இலக் கணத்தின் இலக்கியம் அல்லவா ஆனந்தின் குடும்பம். நான் உதவாமல் இருந் திருந்தால் ஆனந்த் சென்னை வர முடியாமல் போயி ருக்கலாம்.

ஆனால், முன்னேற்றம் என்பதைக் காணாமல் போயிருப்பான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவன் உள்ளே கனன்று கொண்டிருக்கும் அக்னிக்குஞ்சு அவனை சும்மா இருக்கவிடுமா? தழல் சிறகுகளில் அவன் ஆரோகணிக்க, செஞ்சுடர் புகழ்வானில் அவனை உலாவவிடாதா என்ன? இயல்பான அறிவும் தீவிர உழைப்புத் தன்மையும் கொண்ட அவன் எங்கிருந்தாலும் முன்னேறத்தான் செய்வான். அவன் முன்னேற்றத்துக்கு நானும் காரணமாயிருப்பதற்கான ஒரு வாய்ப்பை அருளியதற்காக நானல்லவோ இயற்கையின் பெருங் கருணைக்கு நன்றி சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு என்ன ஒரு அகம்பாவம் பிடித்த சொற்களை உதிர்த்து விட்டேன். உதயகுமார் தன்

கன்னத்தில் தானே ஓங்கி அறைந்து கொண்டதை இருட்டு மட்டுமே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

விடுதியில் இரவு உணவருந்த மெஸ்ஸுக்கு வந்த உதயகுமாரிடம் ''பாஸ் கங்கிராட்ஸ்'' என்றான் சிவா. உதயகுமார் முகத்தைக் கடுப்பாக வைத்துக்கொண்டு ''எதுக்கு?'' என்றான்.

''தென்றல் அமைப்புக்கு உயிர் கொடுத்ததுக்கு!''

சிவாவைப் பார்த்து முறைத்த உதயகுமாரிடம், ''பாஸ் நான் கிண்டலுக்காகச் சொல்லலை. உண்மையைத்தான் சொல்றேன். இன்னிக்கு நடந்த கவியரங்கம் மட்டும் 'ஸ்மூத்தா' நடந்திருந்தா அதுக்கு ஆயுள் மூணு வாரம் தான். ஆனா, இப்ப மூணு வருஷம்... ஏன் முப்பது வருஷத்துக்குக் கூட மறக்க முடியாத கவியரங்கமா மாறிடிச்சு அது.''

''என்ன சொல்ற?''





உதயகுமார் குழப்பத்துடன் சிவாவை கவனிக்க ஆரம்பித்தான்.

''ஆமாம் பாஸ் எப்பவுமே ஒரு ஃபங்ஷன்னா ஏதாவது கலாட்டா நடக்கணும். அப்பத்தான் கலகலப்பா இருக்கும். நாம என்ன ராணுவ அணிவகுப்பா நடத்தினோம். எல்லாம் அட்டவணைப்படி நடக்கறதுக்கு. கவியரங்கம் பாஸ்... மேடையில் அகநானூறுன்னா... கூட்டத்துல புறநானூறு அவ்வளவுதான் வுடு பாஸ்...''

உதயகுமார் மனத்தில் இருந்த கவலை விலகத் தொடங்கியது.

''நம்ம ஸ்டூடண்ட் லைஃப்ல இதெல்லாம் சகஜம்தானே பாஸ். கலாட்டா இல்லாம ஒரு ஃபங்க்ஷன் நடந்துட்டா அப்புறம் நம்ம வயசுக்கு என்ன மரியாதை?''

மிகப்பெரிய அவமானம் என்றும் தடைக்கல் என்றும் கருதிய நிகழ்வின் மீது இப்படியும் ஒரு பார்வை இருப்பதை அறிந்து உதயகுமார் ஆச்சர்யப்பட்டான். அதைக் கேட்கவும் செய்தான்.

''அப்ப யாருமே கலாட்டாவைப் பெரிசா எடுத்துக்கலையா?''

''ஹாஸ்டல் முழுக்கக் கவியரங்கத்தைப் பத்திதான் பேச்சு பாஸ். அதுவும் அந்த ஃபர்ஸ்ட் இயர் பையன்... அவன் பேரு...''

''எட்வின்...''

''உம். ராக்கெட் எட்வின். சும்மா கலக்கிட்டான் பாஸ்.''

''அகிலா பக்கத்துல உக்கார்ந்து இருந்ததே, அந்த சேட்டுப் பொண்ணு...''

''யாரு நிஷாவா?''

''ஆங். நிஷா அவ கால்ல தங்கக் கொலுசை மாட்டிக்கிட்டு முன் வரிசையில குறுக்கும் நெடுக்கும் நடந்தப்ப, அவ காலைப் பாத்துக்கிட்டே டைமிங்கா சொன்

னான் பாரு... 'சிணுங்குதடி உந்தன் கொலுசு... சிதறுதடி எந்தன் மனசு'ன்னு சிம்ப்ளி சூப்பர்ப். நீ வேணா பாரு பாஸ். நாளைக்கு நிஷா காலேஜ் காரிடார்ல நடந்து வரும்போது, நம்ம பசங்க ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு தூண் பின்னால இருந்தும், ''சிணுங்குதடி உந்தன் கொலுசு. சிதறுதடி எந்தன் மனசு'ன்னு குரல் கொடுக்கப் போறானுங்க பாரு.''

உதயகுமாருக்கு மனம் தெளிவடைந்தது. 'கவியரங்கத்தில் கவிதை படித்தவர்களுக்கு நான் பாராட்டும் சொல்லவில்லை. நன்றியும் சொல்லவில்லையே. மாணவர் தலைவர் என்ற முறையில் நான் என் கடமையிலிருந்து தவறிவிட்டேனா?' என்று எண்ணமிட்டான்.



''வரலாறு காணாத வெற்றி-னு ஏன் நம்ம தலைவர் சொல்றார்?''

''இந்த முறை டெபாசிட் திரும்பி கிடைச்சிட்டதாம்!''

– கோவை நா.கி. பிரசாத்

''சிவா, எட்வின் ரூம் மூணாவது மாடி தானே?''

''பாஸ் பசங்க எங்க இருப்பானுங்கனு எனக்குத் தெரியும். வாங்க போவலாம்.''

தட்டைக் கழுவி வைத்துவிட்டுப் புறப்பட்டார்கள்.

பெல்ஸ் சாலையின் திருப்பத்தில் இருந்த சின்ன சந்திலிருந்த மசாலா பால் கடையின் உள்ளே ஆனந்த், மசாலா பாலை ஊதி ஊதிக் குடிக்க, பாதி தம்ளரில் மேசை மீது வைத்துவிட்டு சிகரெட்டைக் கொளுத்திய கதிர், ''தோழர் உன் கவிதையைக் கொண்டாடறதுக்குத்தான் நான் வீட்டுக்குக் கூட போகாம, உன் ரூம்லய தங்க போறேன்!'' என்றான்.

''சொர்க்கங்கள் பெண்ணில்தானடா என் அருமை மச்சான் தூக்கங்கள் எல்லாம் வீணடா'' - என்று கவித்துவ ஓசையோடு சொன்ன எட்வினிடம்... அடுத்த வரி? அடுத்த வரி? என்று கேட்டு சிகரெட்டை ஆழ்ந்து இழுத்தான் கதிர்.

''உல்லாசப் பாதையில் சல்லாப போதையில் தள்ளாடும் முல்லையே சந்தோஷத் தொல்லையே'' என்று மீண்டும் ராகம் இழுக்க, கதிர் ''வாரே! வாரே!'' என்றான்.

''மச்சான் இந்த மசாலா பாலைவிட உன் பாட்டு வரியில மசாலா தூக்கலா இருக்குடா'' எனச் சொல்லி திரும்பி, ''மாஸ்டர் கொஞ்சம் மலாய் போடுங்க'' என்று தம்ளரை நீட்டினான்.

அப்பொழுது சிவாவுடன் கடைக்குள் நுழைந்த உதயகுமாரைப் பார்த்து ஆனந்த் எழுந்திருக்க முயல, அவனை அமரச் சொல்லிவிட்டு, எட்வினின் கையைப் பற்றிக் குலுக்கி, ''வாழ்த்துக்கள் எட்வின். கவிதை நல்லா இருந்தது.''

எட்வின் உதயகுமாரிடம் ''தலைவா பாராட்டையெல்லாம் என் குருவுக்குச்

சாக்லேட் பாய் சித்தார்த்தின் புதுப்படம் 'பாவா'. பிரபுதேவாவின் உதவி இயக்குநர் ராம் பாபு இயக்கும் இத்தெலுங்கு படத்தின் மீதுதான் கோலிவுட் பார்வை விழுந்திருக்காம். ஏற்கெனவே சித்தார்த் நடித்த 'பொம்மரிலு' தான் 'சந்தோஷ் சுப்ரமணியம்'. அதனால பாவா வெற்றி பெற நம்ம 'ஜெயம்' பிரார்த் திக்கிறாராம். எதுக்கு ? தமிழில் ரீமேக் செய்து ஜெயிக்கத்தான்!

- சசி



சொல்லுங்க.''

ஆனந்த் ''சொல்லவேண்டாம்'' என்று காட்டிய சமிக்ஞையைப் பொருட்படுத் தாமல், எட்வின் ஆனந்தின் தோள்களின்மேல் கைகளைப் போட்டு அணைத்து, ''எழுதுனது சாட்சாத் இந்த சிவபெருமான். நான் மண்ட பத்துல நின்னு புலம்பன நாகேஷ்'' என்றான்.

''தருமி'' என்று அவனைத் திருத்தினான் கதிர்.

உதயகுமாருக்கு உள்ளுக்குள் சினத்தின் ஊற்றுக்குமிழ் பூத்தது. அதை வெளிப் படுத்தும் தோரணையாக ''என்ன சொல்ற?'' என்று சற்று உரக்க கேட்டான்.

''தலைவா அந்த நிஷா என்னை எப்பவுமே ஒரு புழுவைப் பாக்கறது போல பாக்குறா. என் கிளாஸ்மேட் விந்தியா என்னை காலி டப்பான்னு கிண்டல் பண்றா... நானும் சரக்குள்ள ஆசாமிதான்னு காட்ட ஆசைப்பட்டேன். ஆனால் சொந்த சரக்கு இல்ல. அதனால நம்ம குருகிட்ட...''

எட்வின் ஆனந்தின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டான்.

''குரு நீ என் மானத்தைக் காப் பாத்திட்ட...''

''குரு... நீ எனக்கு மகா குரு'' - என்று சொற்களோடு இணைந்து மிதந்தான். மேசையின் மேல் இருந்த சிகரெட் பெட்டி யையும், கதிரின் விரலிடுக்கில் தெரிந்த கங்குலையும் சந்தேகத்தோடு நோக்கிய உதயகுமாருக்கு, கோபத்தில் நரம்புகள் புடைத்தன.

ஒரு சூறாவளியை சூல் கொண்ட சூன்ய பெருவெளியின் நிதானத்தோடு ஆனந்தைப் பார்த்துக் கேட்டான்.

''ஆனந்த்... நீ எழுதுன கவிதையை, ஏன் நீ வாசிக்காம இன்னொருத்தனை விட்டு வாசிக்க வெச்ச?''

ஆனந்த் தயக்கத்தோடும் அச்சத்தோடும், ''எனக்கு சபையில வாசிக்கிற தைரியம் இன்னும் வரலை?''

சூறாவளியாய்ச் சொற்கள் உதயகுமாரிட மிருந்து தெறித்தன.

''முட்டாள்... இதுக்காகவாடா உன்னை சென்னைக்குக் கூட்டிட்டு வந்தேன். இதுக் காகவாடா உனக்குச் சாப்பாடு போட்டுச் செலவு பண்ணிப் படிக்க வெக்கறன். திறமைங்கறது நெருப்பு மாதிரிடா... கூச்சம்ங்கறது முக்காடு மாதிரி. எந்த முக்கா டையும் நெருப்பு எரிச்சுடும். எரிக்கணும்... ஆனா நீ? நீ பெத்த புள்ளைக்கு எவன் கிட்டயோ இனிஷியல் கேக்கற?''

உதயகுமார் ஆத்திரத்தோடு மேசையை ஓங்கி அறைய, உதயகுமாரும், சிவாவும் குடிப்பதற்கென்று மாஸ்டர் கொண்டு வந்து வைத்த பால் தம்ளர்கள் கவிழ்ந்து மேசை முழுதும் பால் வழிந்தது.

(தொடரும்)

கல்வெட்டுகள்

அமரர் கல்கி

எப்படி எழுதக்கூடாது?

தொட்டிலில் கிடந்த குழந்தை பசி பொறுக்காமல் அழுது கொண்டிருந்தது. அம்மா அதற்குப் பால் கொடுக்க அவசரமாக வந்தாள். அந்தச் சமயத்தில் வாசலில் பிச்சைக்காரன் ''அம்மா! பிச்சை'' என்று கத்தினான். தாயார் அதைப் பொருட்படுத்தாமல் குழந்தையை எடுத்தாள். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு, ''அம்மா! உனக்குக் கொஞ்சங்கூட புத்தியில்லை. வாசலில் பிச்சைக்காரனைக் காக்க வைத்துவிட்டு எனக்கு என்ன அவசரம்? போய் முதலில் பிச்சை போட்டுவிட்டு வா!'' என்றது.

தாயார், ''இதேதடி அம்மா, இந்த வம்புக்காரக் குழந்தை!'' என்று சொல்லிக் கொண்டே போய்ப் பிச்சை போட்டுவிட்டு வந்தாள்.

''முன் கோபத்துக்கு அப்பாவையே கொண்டிருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே குழந்தையை எடுத்தாள்.

''முன் கோபத்துக்கு மட்டுந்தான்; நல்ல வேளையாக சட்ட ஞானத்துக்கு இல்லை!'' என்றது குழந்தை.

இதைக் கேட்டுக்கொண்டே உள்ளே வந்த முனிசிப் வேங்கட்ராமய்யர், ''வாய்த் துடுக்கைப் பார். என்னைவிட உனக்குச் சட்ட ஞானம் அதிகமோ?'' என்று கேட்டார்.

''இன்று நீங்கள் எழுதிவிட்டு வந்த தீர்ப்பு சுத்தப் பிசகு'' என்றது குழந்தை.


''கிடையாது!'' என்றார் அப்பா.

''அப்பீல் கோர்ட்டில் நானே போய் வாதாடி உங்கள் தீர்ப்பைத் தொலைக்கிறேன்; பார்க்கிறீர்களா?'' என்றது குழந்தை.


இந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் ஸ்ரீ.வி.கிருஷ்ணசாமி ஐயர் என்ற பெயருடன் பிரபல வக்கீலாகவும் ஹைகோர்ட் ஜட்ஜாகவும் நிர்வாக - சபை அங்கத்தினராகவும் புகழ் பெற்று விளங்கியது.

படித்தவர்கள் எல்லாம் மூக்கிலே விரல் வைத்துத் திணறும்படி செய்யும் மேற்படி சம்பவமானது, 'ஸ்ரீ.வி.கிருஷ்ணசாமி ஐயர்' என்ற பெயருடன் வெளியாகியிருக்கும் அவரது வாழ்க்கைச் சரித்திரப் புத்தகத்தில் இல்லவே இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறோம். அந்தப் புத்தகத்தைப் படித்ததின் பயனாக ஏற்பட்ட நமது சொந்தக் கற்பனைதான். 'வாழ்க்கைச் சரித்திரம் எப்படி எழுதக்கூடாது' என்பதற்கு உதாரணமாக மேற்கண்டதைக் கொள்ளவும்.

- 'ஒரு சிறந்த வாழ்க்கை' என்ற தலைப்பில் கல்கி எழுதிய மதிப்புரை



மை லைப்ரரி!



மேடையில் பேசற ஒருத்தரு, நெறைய புத்தகங்கள் படிச்சே ஆகணும்னு சொல்லுவாங்க. திருச்சியில் நகைச்சுவை மன்றம் தொடங்கி, பரவலா நான் மேடையில் பேசினப்ப, அது எத்தனை நிஜம்னு உணர்ந்தேன். ஆறாம் வகுப்பிலிருந்து புத்தகங்கள் வாசிக்கத் தொடங்கினேன். அப்ப எல்லாம் ரேடியோ தவிர வேறெதுவும் கிடையாது. அதனால புத்தகம் ஒண்ணுதான் இன்னொரு பொழுது போக்கு. செம்பனார்கோயில் அருகே வல்லம் கிராமத்திலுள்ள எங்க வீட்டுக்கு மட்டும் தான் ஒரு ரூபா ராணிமுத்து நாவல் மாசம் தவறாம வரும். அதுல தமிழ்வாணன் எழுதிய 'பத்து நாட்கள்' ஒரு பரபரப்பான மர்ம நாவல். அந்தக் கிராமத்துல படிக்கணும்னு நெனைக்கறவங்க எங்க வூட்டுக்கு வந்துதான் புத்தகம் இரவல் வாங்கிட்டுப் போவாங்க.

நான் வெளி நூலகங்களில் படித்து அறிந்ததைவிட 'மை லைப்ரரி'யில் படித்து அறிந்தவைகள்தான் அதிகம்.

என் அப்பா, பொருளாதார ரீதியா எதுவும் எனக்காகச் சேர்க்கவில்லை என்றாலும், அறிவுக்கு ஆதாரமான புத்தகங்களை நிறைய சேர்த்திருக்கிறார்.

எங்கள் ஊரில் ஒரு தனியார் நூலகம். பராமரிப்பதற்கும் படிப்பதற்கும் யாரும் வராததால், அது மூடப்பட்டுவிட்டது.

அந்த நூலகத்திலிருந்த அத்தனை புத்தகங்களையும் பணம் கொடுத்து வாங்கி எங்கப்பா 'மை லைப்ரரி'யில் வைத்திருக்கிறார்.



நான் மருத்துவம் பற்றிய புத்தகங்களை அதிகமாகப் படிப்பேன். என் அப்பா, வாழ்வியல் குறித்த கட்டுரைகள் அதிகம் படிப்பார்.

எங்க வீட்டு மனையின் மொத்த பரப்பளவு 250 சதுர அடிதான். இந்தச் சிறிய வீட்டில் ஒரு கிளை நூலகத்தைப் போல ஏராளமான புத்தகங்கள் உண்டு.


எப்படி? மனமிருந்தால் மார்க்கமுண்டு.

- நா.பூவரசி,
வியாசர்பாடி

வாசகர்களே!
உங்கள் வீட்டு நூலகத்தைப் பற்றியும் அதன் சிறப்பைப் பற்றியும் உங்களைக் கவர்ந்த நூல் குறித்த அனுபவங்களை ஃபோட்டோவுடன் எழுதி 'மை லைப்ரரி' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.
பிரசுரமாகும் அனுபவத்துக்குப் பரிசு உண்டு.

நான் படிச்சு முடிச்சு வேலை நிமித்தமா திருச்சி வந்து செட்டில் ஆனப்புறம், என்னோட புத்தக வாசிப்புப் பார்வையே மாறிப்போச்சு. இப்போ சுமார் ஆயிரம் புத்தகங்கள் என்னிடமிருக்கு. அத்தனையும் மானுட வாழ்வியல் அறிவுக் களஞ்சியங்கள். மாடி அறையில் எனக்கென அமைந்திருக்கும் அந்தச் சிறு நூலகம், எனக்கான போதிமரம்!

- சிவகுருநாதன்,
திருச்சி



பூஜையறையைவிடப் பெரிசு!

புதிய பகுதி

பூஜை அறையைவிடப் பெரியது எனது புத்தக அலமாரி. கதை, கவிதை, கட்டுரை, ஆன்மிகம், சமயம், மொழி, விவசாயம் அறிவியல் என அனைத்துப் புத்தகங்களும், குறும்படம், ஆவணப் படம் ஆகிய குறுந்தகடுகளும் இதில் அடக்கம்.

பெரும்பகுதி ஓய்வு நேரம் கழிவது புத்தகங்களோடுதான். வருமானத்தின் ஒரு பகுதி புத்தகங்களுக்காகச் செலவிடுகிறேன். புத்தகங்களை என்னிடம் வாங்கிப் படிக்கவே ஒரு நண்பர்கள் வட்டம் உண்டு.

படிப்பதும், மற்றவர்களுக்குப் படிக்கக் கொடுப்பதிலும் மட்டற்ற மகிழ்ச்சி.

கவிதை, சிறுகதை, விவசாயம் சம்பந்தமான புத்தகங்களைத் தேடிக் கண்டுபிடித்து, வாங்கிப் படித்துப் பாதுகாப்பதில் ஆர்வம் அதிகம். சில சமயம் நண்பர்கள் என்னிடம் வாங்கிப் படிக்கும் புத்தகங்கள் திரும்ப வராதபோதிலும், யாரேனும் (அட நண்பர்கள் தான்!) தெரியாமல் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய்விடும் போதும் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கும்.

- வானவன், மாத்தூர்



07.11.2010 முதல்

மேஷம்: வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்து காணப்படும். விருந்தினர் வருகை மனத்துக்கு சந்தோஷத்தை அளிக்கும். வம்பு வழக்கு முடிவுக்கு வரும். வீடு / மனை வாங்க சிறந்த தருணம். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும்.

ரிஷபம்: மன உளைச்சல் நீங்கும். இல்லற வாழ்வில் இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். உறவினர்கள் மூலம் நற்பலன் ஏற்படும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வேலைவாய்ப்புத் தேடி வரும். ராகு / கேது / சனி / குருவை வழிபட சங்கடங்கள் விலகும்.

மிதுனம்: மிகவும் உல்லாசமான வாரம். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் பன்மடங்கு பெருகும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். கல்வி வளம் மேன்மை பெறும். கடன் தொல்லை தீரும். திருமண முயற்சி கைகூடும். வீடு மாற்றம் உண்டாகும். சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு விளக்கு ஏற்றி வழிபடுங்கள்.

கடகம்: பண வருவாய் பெருகும். உற்றார் உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். மனப் பிரம்மை தீரும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். வராத நிலுவைகள் வந்து சேரும். வாகன யோகம் உண்டு. குருவை வழிபட நற்பலன் பெருகும்.

சிம்மம்: பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் உஷார். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். பணக் கஷ்டம் இருக்காது. வாக்கு வன்மை மேலோங்கும். நீண்ட தூரப் பிரயாணம் தேடி வரும். ராகு / கேதுவை வழிபட நற்பலன் உண்டாகும்.



கன்னி: சற்று வெளிச்சமான சூழ்நிலைக்கு வந்திருக்கிறீர்கள். கஷ்டங்களின் பிடியிலிருந்து படிப்படியாக விலகுவீர்கள். வராத நிலுவைகள் வசூலாகும். வீடு மாற்றம் ஏற்படும். வேலைப் பளு குறையும். கணவன் - மனைவி உறவு நற்பலன் அளிக்கும். ராகு /

13.11.2010 வரை

தஞ்சை பரத்வாஜ்

கேது / குருவை வழிபட நற்பலன் உண்டாகும்.

துலாம்: வாகன யோகம் உண்டு. கடன் பிரச்னை தீரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். நீண்ட தூரப் பிரயாணம் தேடி வரும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சனி பகவானை வழிபட சங்கடங்கள் விலகும்.

விருச்சிகம்: உடல் நிலையில் போதிய கவனம் தேவை. உணவுப் பழக்க வழக்கங்களைச் சரிவர கடைப்பிடிப்பது நல்லது. யாரிடமும் அதிகப் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள வேண்டாம். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளைச் சரி பார்த்துக் கொள்வது நல்லது. ராகு / கேது / குருவை வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.



தனுசு: சுபகாரியப் பேச்சுவார்த்தை கைகூடும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வெளிநாட்டி லிருந்து நல்ல தகவல் வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். கடன் சுமை விலகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் உண்டாகும்.

மகரம்: வெற்றிகள் குவியும் வாரம். மனத் துக்குப் பிடித்த சம்பவம் நடக்கும். ஆடை அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். புதிய வீடு / மனை வாங்குவீர்கள். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோக உயர்வு ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும்.

கும்பம்: பூர்வீக வழியில் இருந்து வந்த பிரச்னை கள் தீரும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். கூட்டாளிகள் விட்டு விலக நேரிடும். வீடு மாற்றம் ஏற்படும். வம்பு வழக்கு முடிவுக்கு வரும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். சுபகாரியம் கைகூடும். சனி பகவானை வழிபட நற்பலன் உண்டாகும்.

மீனம்: நீண்டதூரப் பிரயாணம் தேடி வரும். கடன் பிரச்னை தீரும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வீடு / மனை வழியில் ஆதாயம் கிட்டும். மன உளைச்சல் விலகும். ராகு / கேது / சனியை வழிபட நன்மை உண்டாகும்.

நடக்கும்!



கல்கி விஸிட்!

பொள்ளாச்சி வால்பாறை தேசிய நெடுஞ்சாலையில் நா.மூ.சுங்கத்தில் வால்பாறை மலைத்தொடரின் ஏலக்காய் வாசத்தைப் பூசிக் கொண்டபடி அழகாய் தலையசைத்து வர வேற்கும் தென்னையின் பசுமைக்குள் பளிச்சென்று சிரிக்கிறது **ஸ்ரீராமு கலை அறிவியல் கல்லூரி**. மலையக மற்றும் ஏழை விவசாயிகளின் வாரிசுகளின் எதிர்காலத்தைச் செதுக்கும் சேவையில் பந்தா இல்லாமல் பயணிக்கும் இக் கல்லூரிக்குள் கால் வைத்தால் அடடா அது ஒரு திறமை சுரங்கம்! அதிலிருந்து...



ஏழ்மை !

கண்ணில்லாதவர்கள்
கையேந்துகின்ற பொழுது
நாமெல்லாம் குருடர்கள்.

- **எஸ். சுகன்யா,** I B.Com.










ராமராஜ்யம் செதுக்கும் ஸ்ரீராமு!





'ஆல் ரவுண்டர்' ரேவதி

● ''கிளி ஏண்டா பச்சையா இருக்கு?''

''அது உயிரோட இருக்கும் போது எப்படிடா வேகும்?''

● ''3 வருஷம் முடிச்சுட்டு என்ன பண்ணப்போற?''

''அரியரை முடிப்பேன்.''

● ''இன்று பஸ்ல உன்னைப் போலவே ஒரு பெண்ணைப் பார்த்தேன்.''

''அப்புறம் என்ன பண்ணீங்க.''

''உடனே பஸ்ஸை விட்டு இறங்கிட்டேன்.''

- V. **கருணாகரன்** B.Sc C.A *(Maths)*

''இரு காதலர்கள் நெடுந்தூரம் ஓடிப் போகின்றனர். அங்கு சென்று ஓர் இடத்தில் அமர்கின்றனர். அப்பொழுது ஆண் மேல் மூச்சு வாங்குகிறான். பெண் என்ன மூச்சு வாங்குவாள்?''

'''feமேல்' மூச்சு வாங்குவாள்.''

- எஸ்.லாவண்யா, I B.Com (C.A)







இது கறுப்பு வெள்ளைப் படம்தான். ஆனால் ஏழ்மைக்குப் பின்னால் இருக்கும் பாசம் கலர்ஃபுல்தானே!

- சௌபாக்கியம் I B.Com





''டாக்டர் இந்த மருத்துவமனையில் எல்லா வசதியும் இருக்கா?''

''மின்மயானத்துக்குக்கூட ஏற்பாடு செய்யுறோம்னா பாத்துக்கங்களேன்!''

''எங்களுக்குப் பொண்ணு புடிச்சிருந்தாதான் கையை நனைப்போம்.''

''நீங்க பொண்ணு புடிச்சிருக்குன்னு சொன்னாதான் அடுப்பையே பற்ற வைப்போம்.''

- தி.பிரமினா I B.Com (C.A)

"நான் 'வயலெங்கும் கான்கிரீட் காடுகள்'
என்ற நூல் எழுதி கல்லூரிக்குள்
இயற்கைச் சிந்தனையை
இயல்பாய் நட்டுவைக்க. எங்க
ஆசிரியர்கள்தான் ஆதார விதை!"

- க.சுப்ரமணியம்





பளு தூக்குதலில்
இரண்டு தங்கப்பதக்கம்...



படிப்பில மட்டுமல்ல.
ஒரு கிராமத்தையே
சுத்தம் செஞ்சி தகதகன்னு
மாத்திடுவதிலும்
பலே கில்லாடி!

பிறப்பு

இரு குழந்தை
பிறக்கிறது
ஒரே பிரசவத்தில்
தாயும், சேயும்.

என். சம்பத்குமார்,
III B.Sc CS

நிகழ்ச்சி
ஒருங்கிணைப்பாளர்கள்



மஞ்சுளா தேவி



ரோஸ்லின் சுரேஷ்

பூடான் மாணவர்களும்
எங்க ஸ்டூடண்ட்ஸ்தான்!



"1996ஆம் ஆண்டு B.B.M., B.Com., என்ற இரண்டு பிரிவுகளில் 41 மாணவர்களையும் 9 விரிவுரையாளர்களையும் கொண்டு ரெட்டியாரூரில் தொடங்கப்பட்டதுதான் இக்கல்லூரியாகும். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற ஆடவர்-மகளிர் கல்லூரி இது.

B.C.S. B.Sc (Comp.Sci.), B.Com CA, B.Sc Mathematics CA, B.Sc Physics, BCA போன்ற பட்டப்படிப்புகள் மட்டுமின்றி M.Com., M.Sc. (C.S) M.Sc ஆகிய பட்ட மேற்படிப்புகளும், M.Phil (Commerce) என்ற ஆராய்ச்சிப் படிப்பும் இங்கு உண்டு. பொள்ளாச்சிப் பகுதியிலேயே முதன்முதலில் NAAC வழங்கும் அங்கீகாரத்தையும், ISO 9001:2008 என்ற தகுதியையும் பெற்ற முதல் கல்லூரியாகும். இது 893 மாணவர்கள், 50 பேராசிரியர்கள், 26 அலுவலக ஊழியர்கள் கொண்ட கல்விக் குடும்பமாய்ச் செயலாற்றுகிறது."

"கல்லூரி தொடங்கப்பட்ட நாள் முதல் நன்கொடை மற்றும் வைப்புத்தொகை எதுவும் வசூலிக்காமல் குறைவான கல்விக் கட்டணத்துடன் கல்விச் சலுகைகளோடு வேண்டிய வசதிகளைச் செய்து இருப்பதால், அயல்நாட்டு மாணவர்களும் (இலங்கை மற்றும் பூடான்) எமது கல்லூரியைத் தேர்வு செய்து விரும்பிப் பயிலும் வண்ணம் அமைந்திருப்பதே இக்கல்லூரியின் சிறப்பு."

- இயக்குனர் **டாக்டர். ஆர். நித்தியானந்தம்**





"உழைப்பு, உண்மை, உயர்வு என்ற தாரக மந்திரத்துக்கு உரியவரும் ரெட்டியாரூர் விவசாயியுமான இராமசாமியின் நேரடிப் பார்வையின் கீழ் உருவாக்கப்பட்டது இக்கல்லூரி. கல்வியோடு, பண்பாடு, சேவை செய்யும் ஆர்வம், தன்னம்பிக்கை மற்றும் நாட்டுப்பற்றையும் சேர்த்து இக் கல்லூரியில் போதிக்கப்படுகிறது. ஏழாயிரம் நூல்கள், 100 மாத வார சஞ்சிகைகள், 10 தமிழ், ஆங்கில தினசரிகளை உள்ளடக்கிய கணினி மைய நூலகம் இருப்பது இக் கல்லூரியின் விசேஷம்."

- செயலாளர் **எஸ். இராமசாமி**



"நிகழ்காலம் சிறப்பாக இருக்க... உடல் நலனை மேம்படுத்த விரும்பும் மாணவர்களுக்காக Gym. எதிர்காலத்தை ஒளிமயமாக்க... இணையதள வசதியுடன் கூடிய 150 கணினிகளைக் கொண்ட கணினி ஆய்வகம். இதுமட்டுமில்லாமல் அன்னை முத்துலெட்சுமி பெயரில் 100 மாணவ மாணவியரை உள்ளடக்கிய மகளிர் விடுதி என்று வருடந்தோறும் புதுப் புது திட்டமும் வந்துகிட்டேயிருக்கு."

- முதல்வர் **ந.ஒன்னமாரண்ணன்**

செய்தி. சித்திரம்: ஆர்.பாலா

கார்த்தியின் சேவை காங்கிரஸுக்குத் தேவை!

வாசு

சமீபத்தில் திருமாவளவன் காங்கிரஸைக் குறித்து கடும் விமர்சனங்களை வைத்தபோது, பல சீனியர் தலைகளே விழித்துக்கொண்டு நின்றபோது, ''கூட்டணியில் இருந்து கொண்டே இதுபோன்று பேசும் திருமாவளவன் ராஜினாமா செய்ய வேண்டும்'' என்று பதிலடி கொடுத்தார் கார்த்தி.



கே.எஸ்.அழகிரி



தனபால் ராஜ்

''காங்கிரஸ் பேரியக்கத்தின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு வரும்போது, உடனுக்குடன் பதில் சொல்லும் கார்த்தியைப் போன்ற இளைஞர்கள்தான் இன்று காங்கிரஸுக்குத் தேவை'' என்கிறார் அவருடன் நெருங்கிப் பழகும் பாராளுமன்ற உறுப்பினர் கே.எஸ். அழகிரி. ''தந்தையைப் போன்றே சுறுசுறுப்பு, நேரம் தவறாமை, விழிப்புணர்வு, புத்திகூர்மை' என்று பல நல்ல அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறார், கார்த்தி. பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் நிறைய படிப்பு, தேடுதல் என்று இறங்கிவிடுகிறார். பிரச்னைகளைக் கண்டு பயந்து ஒதுங்கிவிடாமல் துணிச்சலோடு எதிர்கொண்டு களம் காணத் தயங்காதவர்'' என்கிறார்.





''அந்தக் கொடிய காரியத்தைச் செய்தவனை உடனே பிடித்துச் சுட்டுத்தள்ள வேண்டும்''

ப.சிதம்பரத்தோடு நெருங்கிப் பழகி அவரது பாதையை ஒட்டி அரசியல் செய்பவர் பிரபல வழக்கறிஞர் தனபால் ராஜ். ''ராஜீவ் கொலை செய்யப்பட்டபோது நாங்கள் காரைக்குடியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தோம். அந்தச் செய்தி வந்தவுடன் சிதம்பரம் துடிதுடித்துப் போய் சோகமாக அமர்ந்து விட்டார். 20 வயது இளைஞனான கார்த்தி ஆவேசத்துடன் அறையில், 'அந்தக் கொடிய காரியத்தைச் செய்தவனை உடனே பிடித்துச் சுட்டுத் தள்ள வேண்டும்' என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் புலம்பியவாறு, ஓர் இடத்தில் உட்காராமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். இந்தியாவை 21ஆம் நூற்றாண்டுக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையில் செயல்பட்ட ராஜீவ், கார்த்தியின் ஆதர்ச தலைவர்'' என்கிறார் தனபால் ராஜ். ○

பி.கண்ணன், பழைய மாம்பலம்

ஒரே நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண் திருமணம் செய்து கொள்ளலாமா? சில நட்சத்திரங்களுக்கு விதிவிலக்கு உள்ளதாகச் சொல்கின்றனர். தங்கள் கருத்து என்ன?

ஒரே நட்சத்திர ஆண் - பெண் திருமணம் செய்து கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். 27 நட்சத்திரங்களில் 7 நட்சத்திரங்களுக்கு மட்டும் விதிவிலக்கு உண்டு என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நடைமுறையில் ஒரே நட்சத்திரத் தம்பதிகளின் வாழ்க்கை சிறப்பாக இல்லை.



ஆங்கிலத் தேதிக்குப் பலன் இல்லை!



ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

ஆர். ரவீந்திரன், மைசூர்

நான் 26.08.80 அன்று பிறந்தேன். எனது எண் எட்டு என்பதால் நான் சனியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவன் என்கின்றனர். இதனால் பாதிப்புகள் ஏதேனும் உண்டா?

இல்லை. நீங்கள் பிறந்த தமிழ்த் தேதி 10. ஆங்கிலத் தேதி எட்டுக்கும் சனிக்கும் என்ன தொடர்பு என்று எனக்குத் தெரியவில்லை! ஆங்கிலத் தேதியை இந்தியாவில் நடைமுறைப்படுத்தி 200 ஆண்டுகள் ஆகி இருக்கும். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நமது கோயில்களில் நவக்கிரக வழிபாடு உள்ளது. ஆங்கிலத் தேதிக்கு ஏற்ப நவக்கிரகங்கள் பலன் கொடுக்கும் என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள். அது பொய்.

தா.இளங்கோ, சென்னை-15

கழுத்தில் ருத்ராட்சம் அணிந்து கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் என்ன பயன்?

கழுத்திலோ அல்லது கைகளிலோ ருத்ராட்சம் அணிந்துகொள்வதால் பல

ன்மைகள் ஏற்படும். உடல் ஆரோக் யெத்துக்கும் அது நல்லது. ருத்ராட் சம் யார் வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம். குழந் தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆண், பெண் பாகு பாடின்றி, பிரம்மச்சாரி, குடும் பத்தார் என அனைவரும் அணிந்து கொள்ளலாம். இரவு நேரங்களில் கழட்டி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ருத்ராட்சம் அணிந்து கொண்டால் சுத்த வைச உணவு மட்டுமே உட்கொள்ள வேண்டும். நான்வெஜிடேரியன் சாப்பிடக் கூடாது என் பதைத் தவிர வேறு எந்த நியதியும் கிடையாது. இரண்டு முக ருத்ராட்சம் அணிந்துகொண்டால் மிகவும் நல்லது. ●



உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



எங்கள் வீட்டில் பூஜை அறையில், 35 ஆண்டுகளாக, ஒரு பலகையில் 'ஹிருதய கமலம்' கோலம் போட்டு, அதன்மேல் மற்றொரு பலகையிலும் (சிறிய முக்காலி போன்றது) ஹிருதய கமலம் கோலம் போட்டு, அதன் மீது குத்துவிளக்கை ஏற்றி வருகிறேன். இதைச் சுற்றி விதவிதமான கோலங்கள் போடுவேன். ஆனால், நடுவில் ஹிருதய கமலம்தான் இருக்கும்.


எங்கள் குடும்பத்தினர் வீட்டைவிட்டு வேலையாக எங்கு சென்றாலும், 'ஜய ஸ்ரீகிருஷ்ண' என்று சொல்லித்தான் செல்வோம். எங்களது 3 வயது பேரன்களும் சொல்வார்கள். ஃபோனில் பேசி முடிக்கும்போதும், இதையே சொல்வோம். ஹிருதய கமலம் கோலமும் கிருஷ்ண மந்திரமும் எங்களோடு இரண்டற கலந்த இனிய சென்டிமெண்ட்!

- மைதிலி கிரி, கோயமுத்தூர்

சென்டிமெண்ட்

பாண்டிச்சேரி சென்றிருந்தபோது, அன்னை மீராவின் இரண்டு கண்கள் மட்டும் உள்ள ஃபோட்டோ ஒன்றை வாங்கி, வீட்டில் மாட்டியிருக்கிறேன். காலையில் எழுந்தவுடன் அந்த இரண்டு கண்களையும் உற்று பார்த்த பிறகுதான் மற்ற வேலைகள். அந்தக் கண்களைப் பார்த்தால், அன்று முழுவதும் நல்லதாகவே நடக்கும். அந்தத் தெய்விகப் பார்வை நம்முடைய நியாயமான தேவைகளை அளிக்கும் என்பது என் சென்டிமெண்ட்.

- த. சேதுராமன், சென்னை



எங்கள் வீட்டில் ஒவ்வொரு வருடமும் சித்திரை முதல் நாள் ஒரு பைசாகூட செலவு செய்ய மாட்டோம். அப்படிச் செலவு செய்தால் வருடம் பூராவும் செலவாகிக் கொண்டே இருக்கும் எனப் பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் வீட்டுக்குத் தேவையான பால், காய்கறி, இலை, ஊதுபத்தி, சூடம் போன்ற பொருட்களை முதல்நாளே வாங்கி வைத்து விடுவோம். யாருக்கும் டிப்ஸ்கூடத் தரமாட்டோம். வீட்டில் உள்ளவர்களுக்கு மட்டும் பணம் வைத்துக் கொடுப்பார்கள். பீரோ, இரும்புப் பெட்டி ஆகியவற்றில் பணம் வைத்துப் பூட்டுவோம். டிக்கெட் வாங்கினால் செலவு செய்ய நேரும் என்பதால் பஸ் பிரயாணம், சினிமா ஆகியவற்றைத் தவிர்த்து விடுவோம்.

- டி.ஜவஹர் மூர்த்தி, சாலியமங்கலம்





3 பொருள் அர்த்தம்!

எங்கள் வீட்டில் ஒரு பெண் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும்போது முறுக்கு, பொருள்விளங்கா உருண்டை, அதிரசம் என்று மூன்று பலகாரங்கள் கொடுத்து அதற்கான அர்த்தத்தையும் சொல்லிக் கொடுத்து அனுப்புவார்கள். புதிதாக மணப்பெண் வந்ததும், புகுந்த வீட்டினர் முறுக்கிக்கொண்டு பேசாமல் இருப்பார்கள். அதனைக் கண்டு புதுமணப்பெண் பொருள் விளங்காதது மாதிரி பேசாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் வாழ்க்கை அதிரசம் மாதிரி இனிக்கும் என்பதுதான் இதன் பொருள்.

இந்தப் பலகாரங்களைக் குடத்தில் வைத்து மூடி விடுவார்கள். அதன் பொருள் வீட்டில் நடக்கும் விஷயங்களை வெளியில் சொல்லாமல் நாலு சுவருக்குள் மூடி விட வேண்டும் என்பது இதன் பொருள்.

- எஸ். நிரஞ்சனி, மௌலிவாக்கம்

வாசகர்களே!

என்ன? உங்களோட சென்டிமெண்ட்! குடும்ப நம்பிக்கைகள் எழுதுங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

இ பக்கங்கள்




வரலாற்றுச் சிறப்பு மி
இரு தீர்ப்புகள் இந்த வா
அடுத்தடுத்து வந்திருக்கின்ற
வேலியே பயிரை மேய்வ
என்பது ஓர் அநீதி பற்றி
அதிர்ச்சியை வெளிப்படுத்த
முன்னோர்கள் உருவாக்கி
சொலவடை. அப்படிப் பயி
மேய்கிற வேலிகள், தண்
னையில்லாமல் தப்பிக்க மு
யாது என்பதை நிரூபிப்பன
இந்த இரண்டு தீர்ப்புகள்.

ரீட்டா மேரி என்ற பெயர் நம் சமூகத்தினாலும் சிறை
துறையாலும் வஞ்சிக்கப்பட்ட அத்தனை பெண்களுக்கும் அடை
யாளமாகிவிட்ட ஒரு பெயர். ஈரோட்டில் வசித்து வந்த 18 வயது
பெண் ரீட்டா மேரி, அக்காவுடன் ஏற்பட்ட மனத்தாங்கலினா
வீட்டை விட்டு வெளியே வந்தபோது, அவருக்கு உதவுவதாக
சொல்லி ஏமாற்றி அவரை ஆத்தூர் விபசார விடுதிக்குச் சில
விற்றனர். அங்கிருந்து திண்டிவனம் விடுதிக்கு அவர் விற்கப்பட்டா
அங்கே வாடிக்கையாளர் சிலரிடம் தம் அவலக் கதையை
சொல்லி ரீட்டா மேரி உதவி கேட்டார். அவர்கள் ரீட்டாவை விடு
யிலிருந்து விடுவித்து அழைத்துப் போனபோது, விபசாரத் தரகர்க
துரத்தி வழிமறித்து ரீட்டா மேரியைப் போலிஸிடம் ஒப்படைத்தார்கள்.
காவல் துறையோ ரீட்டா மேரிக்கு நியாயம் வழங்காமல் அவ
விபசாரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டி செஞ்சி சப் - ஜெயிலி
அடைத்தது.

சிறையில் இருந்த வார்டர்கள் சிலர் ரீட்டா மேரியைப் பாலியல்
வன்முறை செய்தனர். நீதிமன்றத்துக்கு மோசமான உடல்நிலையில்
நடக்க முடியாமல் இழுத்துவரப்பட்ட ரீட்டா மேரியிடம் ஒரு வழ
கறிஞர் சந்தேகப்பட்டு விசாரித்ததில் உண்மைகள் வெளியாகின
மனித உரிமை அமைப்புகள் ரீட்டாவுக்கு ஆதரவாகக் களம் இறங்கிய
தையடுத்து சிறை வார்டர்கள் மீது வழக்குப் பதிவாகியது. திண்டி
வனம் விரைவு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து வார்டர்களில்
நால்வர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி ஒவ்வொருவருக்கும்
பத்தாண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இதை எதிர்த்து
வார்டர்கள் மனு செய்தார்கள்.

அதை விசாரித்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சுதந்திரம்,
சந்தேகத்தின் பலனை இன்னும் ஒருவருக்கு அளித்து விடுவித்த அதே
சமயத்தில் மீதி மூவருக்கும் பத்தாண்டுச் சிறைத் தண்டனையை
உறுதி செய்திருக்கிறார். சிறைக்குள் நடைபெற்ற பாலியல்
வன்முறையை நிரூபிக்க, பாதிக்கப்பட்டவரின் சாட்சியமே போது



ஞாநி

காவல் துறை கற்குமா?

மானது; பெண்ணின் உடலில் காயம் இல்லை என்பதாலோ, அவர் எதிர்த்துப் போராடியதற்கு அடையாளங்கள் இல்லை என்பதாலோ அவர் சம்மதித்தார் என்று ஆகிவிடாது என்றும் நீதிபதி கூறியிருக்கிறார். எதிர்க்கும் சூழ்நிலையே இல்லாத இடத்தில் ஒருவர் எப்படி எதிர்த்துப் போராடியிருக்க முடியும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

ரீட்டா மேரி வழக்கில் ஓர் அநீதிக்கு நியாயம் கிடைக்க ஒன்பதாண்டுகள் ஆகி விட்டன. ரீட்டா மேரியை விபசாரத்துக்கு விற்றவர்கள், வழிமறித்து போலிஸிடம் ஒப் படைத்த விபசாரத் தரகர்கள் செய்த அநீதி களுக்கு நடவடிக்கைகள் எங்கே? காவல் துறையின் அறிமுகமும் ஒத்துழைப்பும் இல்லாமல் இவர்கள் எதையும் செய்திருக்க முடியாது. கடைசியாக ரீட்டாவுக்குக் கொடுமை செய்தவர்களுக்கு மட்டுமே இப்போது தண்டனை கிடைத்துள்ளது. ஆரம்பம் முதல் கொடுமை செய்தவர்களின் வலைப்பின்னலை அறுக்காத வரையில், மேலும் மேலும் பல ரீட்டாக்கள் பலியாவது தொடரும்.

இன்னொரு வழக்கில் கேரளாவில் காவல் துறையின் உச்சமான பதவியில் இருந்தவர், 40 ஆண்டுகள் முன்பு செய்த குற்றத்துக்கு இப்போது தண்டனை கிடைத் திருக்கிறது. கேரள மக்களிடையே 'நக்சல் பாரி வர்கீஸ்' என்ற பெயர் பெரும் எழுச்சி யை ஏற்படுத்தும் பெயர். குறிப்பாக ஆதி வாசி மக்களிடையே அவர், அவர்களுக்காகத் தம் உயிரையே அர்ப்பணித்த ஒரு காவல் தேவதை.

சரியாக 40 வருடங்களுக்கு முன்னால் 1970 பிப்ரவரி 18 அன்று வயநாடு மலைப் பகுதியில் போலிஸுடன் நடந்த 'மோதலில்' நக்சல்பாரி வர்கீஸ் சுட்டுக் கொல்லப்பட்ட தாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. வர்கீஸை போலிஸ் கடும் சித்திரவதைகள் செய்து கொன்றதாக வதந்திகள் இருந்தன. ஆனால் யாராலும் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. போலிசார் மட்டும் என்கவுண்ட்டர் என்றே சொல்லிக் கொண்டி ருந்தார்கள்; ஒரு போலிஸ்காரரைத் தவிர!

அவர்தான் வர்கீஸை சுட்டுக் கொன்ற ராமச்சந்திரன் நாயர். அப்போது அவர்கள் இருவருக்கும் ஒரே வயது - 27. வர்கீஸ் தங்கியிருந்த கிராம வீட்டில் அவரைத்



தந்திரமாகப் பூட்டி வைத்த ஓர் உளவாளி தகவல் சொன்னதும், போய் கைது செய்த வர்களில் ராமச்சந்திரனும் ஒருவர். வர்கீஸிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை. எதிர்க்கவும் இல்லை. மத்திய போலிஸ் பிரிவைச் சேர்ந்த ராமச்சந்திரனும் சகாக்களும் வர்கீஸைக் கேரள மாநில காவலர்களிடம் ஒப்படைத்தனர். மாவட்டத் துணைக் காவல் தலைவராக இருந்த லட்சுமணா ஸ்பாட்டுக்கு வந்தார். வர்கீஸை மலைப்பாறையில் உட்காரவைத்து, சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டார். யார் சுடத் தயார் என்று கேட்டார். கை தூக்காதவர் ராமச்சந்திரன். 'அப்படியானால் நீதான் அவனைச் சுட வேண்டும்' என்று ராமச்சந்திரனுக்கு லட்சுமணா உத்தரவிட்டார்.

கைகள் கட்டப்பட்டிருந்த வர்கீஸுக்குச் சற்று முன்னர்தான் சில கவளம் சோறு ஊட்டியவர் ராமச்சந்திரன். கடைசியாக ஒரு பிடியை வலிக்கவும் வாயில் பொருத்தியவர் அவரேதான். இப்போது அவரே சுட்டுக் கொல்லவேண்டியதாயிற்று. என்னைக் கொல்வதற்கு முன்னால் நான் புரட்சிகர கோஷம் எழுப்ப அனுமதியுங்கள் என்பது தான் வர்கீஸின் கடைசி விருப்பம். மேலதிகாரியின் உத்தரவுப்படி நிராயுதபாணியான வர்கீஸை சுட்டுக் கொன்றார் ராமச்சந்திரன்.

இந்த உறுத்தலுடனே அவர் அடுத்த இருபத்தைந்தாண்டுகள் வாழ்ந்து வந்தார். வர்கீஸ் மோதலில் இறக்கவில்லை; சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற தகவல் நக்சல்பாரி இயக்கத் தோழர்களிடையே பரவியபடி இருந்தது. ராமச்சந்திரனைத் தேடிக் கண்டு பிடித்தார் ஒரு மலையாளப் பத்திரிகைத் தோழர். கடும் மன உளைச்சலில் இருந்த ராமச்சந்திரன் எல்லா விவரங்களையும் பகிரங்கப்படுத்தினார். கேரளா அதிர்ந்தது. என் மீது வழக்குப் போடட்டும். என்னைத் தண்டிக்கட்டும். ஆனால் என்னைக் கொலை காரனாக்கிய என் மேலதிகாரிகள் என் இருபுறமும் என் சக கைதிகளாக ஒரே



கொட்டடியில் இருக்கவேண்டும் என்பது தான் என் கடைசி ஆசை என்று சொன்னா ராமச்சந்திரன்.

அவர் மீது கேரள மாநில அரசு தொடுத்த வழக்கு, பின்னர் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. ராமச்சந்திரன் முதல் குற்ற வாளியாகவும் லட்சுமணா, இதர உயர் அதிகாரிகள் பிற குற்றவாளிகளாகவும் பதிவு செய்யப்பட்டனர். லட்சுமணா கேரள மாநில ஐ.ஜி. பதவி வரை சென்று ஓய்வு பெற்றி ருந்தார். நீதிமன்றத்திலும் ராமச்சந்திரன் எல்லா உண்மைகளையும் சொன்னார்.

வழக்கின் தீர்ப்பு இந்த வாரம்தான் வந்திருக்கிறது. ராமச்சந்திரன் 2006லேயே இறந்துவிட்டார். லட்சுமணாவுக்கு ஆயுள் தண்டனை விதித்திருக்கிறார் சிறப்பு சி.பி.ஐ நீதிமன்ற நீதிபதி விஜயகுமார். வர்கீஸைச் கொல்லும்போது ராமச்சந்திரனுடன் கூட இருந்த இன்னொரு கான்ஸ்டபிள் ஹனீஃபா,

இந்த வார பூச்செண்டு!

சிறுநீரக நோய் உள்ள சுமார் 25 ஆயிரம் ஏழைகளுக்கு இலவச ரத்த மாற்று சிகிச்சை (டயாலிசிஸ்) அளிக்க ஏற்பாடு செய்திருக்கும் சென்னை மாநகராட்சிக்கு இ.வா.பூ

எழுபது வயதாகி நடமாடமு[illegible]யாத நிலையிலும் நீதிபதி அனு[illegible] சிறப்பு பிரதிநிதியிடம் வாக்குமூலம் கொடுத்தார். ராமச்சந்திரன் சொன்னதெல்லாம் உண்மை என்று ஹனீஃபா உறுதிப்படுத்தினார்.

“எப்படிப்பட்ட குற்றவாளியானாலும் சரி - பயங்கரவாதி, நக்சல்பாரி, தீவிரவாதியானாலும், அவர்களைப் பிடித்ததும் நீதிமன்றம் முன்பு ஒப்படைக்கவேண்டிய போலிஸே அவர்களைக் கொலை செய்யும் குற்றத்தை எத்தனை காலம் ஆனாலும் அழித்துவிட முடியாது. அரசியல் சட்டமே முதன்மையானது. எல்லாமே சட்டப்படிதான் நடைபெற வேண்டும். எப்படிப்பட்ட குற்றவாளியானாலும் சரி, அவரது குற்றத்தைப்

இந்த வார நகைச்சுவை!

பெரியார், அண்ணா தந்த திராவிடக் கொள்கைகளைக் காப்பாற்றுவதற்காகத்தான் தேர்தலில் வெற்றி பெற விரும்புகிறோமே தவிர நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல.

- கலைஞர் கருணாநிதி



புலன் விசாரிக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களே அவருக்குத் தண்டனை வழங்கிவிட முடியாது'' என்று நீதிபதி தெள்ளத்தெளிவாக போலிஸின் எல்லையை வரையறுத்திருக்கிறார்.

ராமச்சந்திரன் போல மனசாட்சியின் உறுத்தல்கள் இருக்கும் மனிதர்கள்தான் ஒவ்வொரு துறையையும் சீர்படுத்த உதவுகிறார்கள். ''நான் வாழ்ந்தேன் என்பதற்கான சாட்சி'' என்ற தலைப்பில் ராமச்சந்திரன் தம் போலிஸ் வாழ்க்கை பற்றி எழுதி

இந்த வாரத் திட்டு!

எழுத்தாளர் அருந்ததி ராயின் காஷ்மீர் பற்றிய கருத்துக்காக அவர் வீட்டு முன்னால் கூடி ரகளை செய்ததற்காக பி.ஜே.பி மகளிர் அணிக்கு இ.வா.தி. கருத்துக்கு பதில் கருத்து சொல்வது மட்டுமே நியாயமானது.



யிருக்கும் சுயசரிதை, இன்னொரு சத்திய சோதனை நூல். (குளச்சல் யூசப் மொழிபெயர்ப்பில் தமிழில் மதுரை மக்கள் கண்காணிப்பகம் வெளியிட்டிருக்கிறது.)

வர்கீஸ் ஒடுக்கப்பட்ட ஆதிவாசிகளின் சம உரிமைகளுக்காக உழைத்தவர். அவரும் அவர் சகாக்களும் நடத்திய போராட்டங்களில் துளியும் சுயநலம் இல்லை. வன்முறை தீர்வு அல்லதான். ஆனால் தங்கள் குடும்பம் பல நூற்றாண்டுகளுக்குப் பணக்காரர்களாக வாழ்வதற்காக அகிம்சை வழியில் ஆட்சியைப் பிடித்துக் கொண்டு மக்கள் பணத்தை ஒவ்வொரு வழியிலும் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதும், மக்களுக்கு எதிரான இன்னொரு விதமான வன்முறைதான் என்பதை நாம் உணரவேண்டும்.

காவல்துறை நேர்மையாக நடந்து கொண்டால், அரசின் மீதி எல்லாத் துறைகளும் ஒழுங்குக்கு வந்துவிடும். காவல் துறை தானும் நேர்மையில்லாமல், நேர்மையற்ற அரசியல்வாதிகளுடன் கை கோத்துக் கொள்ளும்போது ரீட்டா மேரிகள் பாதிக்கப்படுகிறார்கள். வர்கீஸ்கள் உருவாகிறார்கள். காவல் துறைக்குத் தேவையான முக்கியப் பாடங்களை இந்த இரு தீர்ப்புகள் அளித்திருக்கின்றன. காவல் துறை இதிலிருந்து கற்குமா?

இது என்னோட ஆல்பம்



நானும்... நானும்...



வேரும்... விழுதும்...



ஹிந்தி
கத்துக்கிட்டு
வரட்டுமா ஜி!



நீ கூட மந்திரியாகலாம்!
இந்திரா காந்தி
மாதிரி கொஞ்சம் சிரி...



தமிழ்நாட்டிலும்
கூட்டணி கட்சி
வேணும்னு சொன்னாங்கப்பா!



"இந்தியன் மட்டுமல்ல... ஆத்திகனும்கூட. பழநி தண்டாயுத பாணியின் பரம பக்தன் நான்."



அரசியலும் விளையாட்டும் வேறுவேறு அல்ல!



45 வயசுக்கு உட்பட்டவங்கதான் வேணும்!



பாகம்–2

தீராத விளையாட்டு விட்டலன்



கடவுளுக்கு ஓர் கடிதம்!

ஆலயத்திலிருந்து வெளியே வந்த போது கமலாபாயிடம் பலவித மாற்றங்கள். உள்ளத்தில் மட்டுமல்ல, வேறொன்றிலும் கூட. குன்றுமணித் தங்கம்கூட இல்லாமல் ஆலயத்துக்குள் நுழைந்த கமலாபாயின் உடலில், ஆலயத்திலிருந்து திரும்பும்போது பலவித நகைகள் மின்னிக் கொண்டிருந்தன.

''துக்காராமோடு, கமலாவும் முழுமையாகப் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டால், அவர்கள் குடும்பம் நடக்க வேண்டாமா? அந்தப் பொறுப்பு நமக்கும் உண்டே. அதுதான் இந்த நகைகளை அளித்தேன்'' என்று ருக்மிணியிடம் விளக்கிக்கொண்டிருந்தான் விட்டலன். துக்காராம் அளித்த புடைவையோடு இருந்த ருக்மிணிதேவியும் 'சரியாகத்தான் செய்தீர்கள்' என்பதுபோல் ஆமோதித்தாள்.

''விட்டலனின் பெருமையைப் புரிந்து கொண்டேன். உங்கள் அருமையையும் அறிந்து கொண்டேன்'' என்றவாறு தன்னைப் பணிந்து நின்ற மனைவியைப் பார்த்ததும் துக்காராம் ஒரு கணம் மகிழ்ந்தார். ஆனால் அடுத்த கணமே மனைவியின் தோற்றத்தைப் பார்த்த அவர் திடுக்கிட்டார். என்ன இது இவள் இத்தனை நகைகளுடன் காட்சியளிக்கிறாள்? துக்காராம் வேறுமாதிரி நினைத்துக் கொண்டார். ''விட்டலன் உனக்கு தரிசனம் கொடுத்தானா? வேண்டிய வரத்தைக் கேள் என்றானா? நீயும் மூடத்தனமாக நிறைய நகைகள் வேண்டும் என்று கேட்டாயா? நல்லறிவு கொடு, முக்தி கொடு என்றெல்லாம் கேட்காமல் இப்படிச் செயல்பட்டுவிட்டாயே'' என்று புலம்பித் தள்ளினார்.

''என்னைத் தவறாக நினைக்க வேண்டாம். உங்களை வணங்கி வழிபட்டாலே அது முக்தி கிடைப்பதற்கான வழிதான். விட்டலனையே உயிர் மூச்சாக நினைக்கும் உங்களுக்குப் பணி செய்யும் பாக்கியத்தை இறைவன் எனக்கு அளித்திருக்க, நான் எதற்காக வரம் என்று தனியாக ஒன்றைக் கேட்க வேண்டும்?'' என்று அவள் கூற, துக்காராம் வியந்துபோனார். பின்,

நடந்ததை கமலாபாய் தொகுத்துரைக்க துக்காராமின் உடல் சிலிர்த்தது.

ஒரு முறை துக்காராமின் உடல் நிலை குன்றியிருந்தது. அந்த முறை ஆடி அமாவாசையன்று பண்டரிபுரத்துக்குச் செல்ல முடியாதே என்ற ஏக்கம் துக்காராமிடம் நிறைந்து வழிந்தது. தன் நிலையை ஒரு கடிதமாக எழுதி பண்டரிபுரத்துக்கு - விட்டலனுக்கு - அனுப்பினார். பதிலுக்கு வந்தது ஓலையல்ல. கருடன். ஆம், தனது வாகனமான கருடனை அனுப்பி அதில் ஏறி பண்டரிபுரத்துக்கு வருமாறு கூறினார் விட்டலன். என்ன ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பு!

ஆனால் இறைவன் அமரும் கருட வாகனத்தில், தான் அமர்ந்து செல்ல துக்காராமுக்கு மனம் வரவில்லை. பண்டரிபுரத்தில் உற்சவம் நடந்து முடிந்த பிறகு தனக்கு வந்து தரிசனம் அளிக்குமாறு விட்டலனை வேண்டிக் கொண்டார்.

இதனிடையே துக்காராமை அடிக்கடி மன்னர் சிவாஜி சந்தித்தார். இதன் மூலம் தனக்கு அமைதி கிட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

துக்காராம் சுவாமிகள் இப்போதும்கூட பக்தர்களின் கனவில் வந்து அவர்களின் துயரை நீக்கும் விந்தைகளைப் புரிந்து வருகிறார் என்பது நம்பிக்கை!

இந்திராணி நதிக்கரையில் உள்ளது கதா ஆலயம். அங்கு சென்றபோது அமைதி குடிகொண்டிருந்தது. அதன் சுவரில் துக்காராம் எழுதிய அபங்கங்கள் காணப்பட்டன.

சட்டென ஜருகண்டி இப்படிச் சொன்னான்.

''ஸ்வாமி துக்காராமின் அபங்கங்களில் நிறைய உவமானங்கள் தென்படுகின்றன'' என்றான் ஜருகண்டி.

''உண்மைதான்'' என்ற ராமநாதன் அங்கு சுவரில் காணப்பட்ட ஓர் அபங்கத்தை அனுபவித்துப் பாடினார். காதுகளில் அந்த அமுதம் விழுந்தபோதே அதன் பொருளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் தோன்றியது. அதை உணர்ந்து கொண்டவராய் அந்த அபங்கத்தை விளக்கினார் அவர்.



''யாராவது எறும்பின் வீட்டுக்குச் சென்று தூது சொன்னார்களா? வெல்லத்தைக் கண்டு அதுவே ஓடிவந்து எடுத்துக் கொள்கிறது. யாசகன் வருவான் என்று பிச்சை இடுபவன் காத்துக்கொண்டிருக்கிறானா? உணவும் தண்ணீரும் எங்களைச் சாப்பிடு என்று விண்ணப்பம் செய்கிறதா? பசியும் தாகமும் கொண்டவன்

தானாகவே அவற்றை நாடிச் செல்கிறான். வியாதியால் பாதிக்கப்பட்டவன் தானாகவேதான் வைத்தியரின் வீட்டுக்கு விரைந்து செல்கிறான். அதேபோல நம்முடைய சுகத்துக்காக விட்டலனின் நாமம் மற்றும் சரித்திரத்தின்மீது, யாரும் கூறாமலேயே, கவனம் செலுத்த வேண்டும்.''

''இந்த இடத்துக்கு ஒரு தனி மகிமை உண்டு. துக்காராமின் அபங்கங்களின் பெருமையை விட்டலன் உலகுக்கு உணர்த்திய இடம் இது. நதிக்கரையில் உள்ள இந்த ஆலயப் பின்னணியில் நதியும் தொடர்புகொண்ட ஒரு சம்பவம் உண்டு'' என்று தொடங்கினார் ராமநாதன்.



யாருடைய பெருமை பரவினாலும் அவருக்கு எதிரிகளும் தோன்ற ஆரம்பித்துவிடுவார்களே. துக்காராமுக்கும் பகைவர்கள் உருவாயினர். 'துக்காராமின் பாடல்கள் கர்ம மார்க்கத்தை இழிவுபடுத்துகின்றன. அவை பக்தி மார்க்கத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கின்றன. யாகம் வேண்டாம், அபிஷேகம் வேண்டாம் என்று கூறும் இவர் விட்டலனின் நாமத்தை இசைத்தாலே போதுமானது என்கிறார். இது நமக்கு எதிரானது' என்று கருதினார்கள். அவர்கள் ஒரு சதிவேலையில் ஈடுபட்டார்கள். துக்காராமின் நூல்களை எல்லாம் திருடிச்சென்று நதியில் வீசினார்கள். அகந்தையுடன் தாங்கள் செய்த செயலை துக்காராமிடம் வெளிப்படையாகவே அறிவித்தார்கள். ''பத்து நாட்களாவது உங்களது நூல்கள் நனையாமலேயே இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் கூறிய கருத்துக்கள் உண்மையானவை என்பதை ஒத்துக் கொள்வோம்'' என்றனர்.

துக்காராமுக்குப் பெரும் சோகம் உண்டானது. ''விட்டலா, நான் பாடிய பாடல்கள் உன்மீதுதான். என்னை இயக்கியவனும் நீதான். அதுவும் நாமதேவரின் விருப்பம் நிறைவேற வேண்டும் என்பதற்காகவும் என்னை அபங்கங்கள் படைக்க நீ உத்தரவிட்டாய். ஆக நான் எழுதிய நூல்களைக் காக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது அல்ல; உன்னுடையதுதான்'' என்று விட்டலன் சன்னிதிக்குச் சென்று கதறினார். பின்பு அங்கேயே தொடர்ந்து அமர்ந்து விட்டல நாமத்தை ஜெபிக்கத் தொடங்கினார்.

துக்காராமின் நூல்களை நதியில் வீசிய வேதியர்களுக்கு வியப்பும் அதிர்ச்சியும் காத்திருந்தது. நதியில் வீசி பதிமூன்று நாட்களாகி



யும் துக்காராமின் நூல்கள் சிறிதும் நனையவில்லை. அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. துக்காராமிடம் ஓடிச் சென்றனர். மன்னிப்பு கேட்டனர்.

'பாண்டுரங்கா, பண்டரி நாதா, எல்லையில்லாதது உன் கருணை. இந்த எளியவனுக்காக எத்தனை எத்தனை அற்புதங்கள் செய்துவிட்டாய்.' இப்படி எண்ணியபோதே துக்காராமின் மெய்சிலிர்த்தது. ஆனந்தப் பரவசத்துடன் விட்டலன் சன்னிதிக்குள் நுழைந்தார். விட்டலன் திருவுருவத்தை பக்தி பொங்க அணைத்துக் கொண்டார். அடுத்த நிமிடம் துக்காராமின் வாழ்வில்

அதுவரை நடைபெற்ற அதிசயங்களையெல்லாம் விஞ்சும்படியான அற்புதம் நடந்தேறியது.

அன்ன வாகனத்தோடு கூடிய ஒரு மண்ட பம் மேலிருந்து பறந்து துக்காராமை அடைந்தது. துக்காராம் அதில் அமர்ந்தார். அந்த மண்டபம் வைகுண்டத்தை நோக்கிப் பறந்தது. இதைப் பார்த்த எல்லோருமே கைகூப்பி, கண்களில் நீர் பெருக ஆனந்தப் பரவசம் அடைந்தனர். ஆக பூத உடலுடனேயே மகான் துக்காராம் வைகுண்டத்தை அடைந்தார். யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்?

ராமநாதன் பரவசம் குறையாமலேயே தொடர்ந்தார். ''விட்டல பக்தர்கள் பலரும் இன்றளவுக்கும் அடைந்து வருவதாகக் கூறும் அனுபவம் ஒன்று உண்டு. அவர்களின் கனவில் துக்காராம் சுவாமிகள் தோன்றி அவர்களின் பலவிதத் துன்பங்களுக்குத் தீர்வு கூறுகிறாராம்.''

ஜருகண்டியின் முகமும் பிரகாசித்தது. ''நீங்கள் கூறி முடித்த மகான் துக்காராமின் கதையைக் கேட்கும்போதே இனிக்கிறது'' என்றான்.

''ஒருவிதத்தில் பார்த்தால் துக்காராமின் கதை முடிந்துவிட்டதாகக் கூற முடியாது. அதன் தொடர்ச்சியும் ஒன்று உண்டு.

துக்காராம் மஹாராஜ், தனது அன்புக்குரிய சீடரான நிளோபாவுக்கு உபதேசம் அளிப்பதாக வாக்களித்திருந்தார். ஆனால் நிளோபா தேஹுவிலிருந்து வெளியூர் போயிருந்த போது, துக்காராம் உடலோடு வைகுண்டம் சென்றுவிட்டார்.

திரும்பி வந்து விஷயமறிந்தவுடன் நிளோபா மிகவும் பதைபதைத்தார். குருவின் பிரிவைத் தாங்கமாட்டாமல், 42 தினங்கள் இந்திராணி நதிக்கரையில் உணவின்றி தியானத்தில் ஈடுபட்டார். அவரை சமாதானப்படுத்த, பாண்டுரங்கன் அவர் முன் தோன்றினான். அப்போது நிளோபா ''யேதே துஜாலாகீ'' என்று தொடங்கும் அபங்கம் ஒன்றைப் பாடினார். அதன் பொருள் இதுதான்.

அந்த அபங்கத்தின் பொருளை ராமநாதன் விளக்கிய போது அதிர்ச்சி உண்டானது.

அபங்க அமுதம்

குமுதினீ காய ஜாணே பரிமள
ப்ரமர ஸகள போ கி தஸே
தை ஸே துஜடாவே நாஹீ துஜே நாம
ஆ ஹீசதே ப்ரேம ஸுக ஜாணோ
மாதே த்ருண பாளா துதா சீ கோடீ
ஜ்யாசீ நயே ஜோடீ த்யாஸீ காமா
துகா ம்ஹணே முக்தாபள சிபீ போடீ
நாஹீ த்யாசீ பேடீ போக தியே

- பக்த துக்காராம்

'அல்லி மலருக்கு அதன் வாசனையைப் பற்றி என்ன தெரியும்? அந்த வாசனையை வண்டுகள் அல்லவா அனுபவிக்கின்றன! தாய்ப்பசு புல்லைத் தின்று அளிக்கும் பாலின் சுவையைக் கன்றுக் குட்டிதான் அனுபவிக்கின்றது. தாய்க்குத் தெரிவதில்லை. சிப்பியின் வயிற்றில் முத்து இருந்தாலும் அந்த முத்தை, பிறர்தான் பயன்படுத்திக் கொள்கின்றனர். விட்டலா, உன்னுடைய நாமத்தின் பெருமை உனக்குத் தெரியாது. அதன் சுகத்தை நான்தான் அறிவேன்.'

தன் நிலையை ஒரு கடிதமாக எழுதி பண்டலிபுரத்துக்கு, விட்டலனுக்கு எழுதி அனுப்பினார் பதிலுக்கு வந்தது ஓலையல்ல, கருடன்.

யாத்திரை தொடரும்

மை டியர் கார்த்தி!

என் உயிரினும் மேலான அன்பு கார்த்திக்கு ஸ்ரீநிதி எழுதும் கடிதம்.

'கல்கி' மூலமாக எண்ணங்களைச் சொல்லிக் கொள்வது வித்தியாசமான அனுபவம்தான். நாம் காதலித்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். அப்போது கூட நாம் கடிதம் எழுதிக் கொண்டதில்லை. நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பிய பின் ஆறே மாதத்தில் திருமணம் நடந்து விட்டது. நமது இருவர் குடும்பமும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் கட்டிக் காப்பாற்றும் குடும்பமாக இருந்தாலும் முற்போக்கான கருத்துகளுக்கும், செயல்களுக்கும் அனுமதி உண்டு என்பது நம் இருவருக்குமே மகிழ்ச்சி அளிக்கும் விஷயம்.



நீங்கள் ஒரு தொழில் முனைவர், அரசியல்வாதி, விளையாட்டு வீரர் - ஆர்வலர். இந்த மூன்றிலும் நீங்கள் பளிச்சிட உங்களுக்கு மிக மிக ஒத்துழைப்பதிலும், அனுசரணையாக இருப்பதிலும் நான் அடையும் சந்தோஷத்துக்கு அளவில்லை. வெளி உலகில் கணவர், எவ்வளவு பெரிய சாதனையாளர் - மக்கள் அன்பைப் பெற்றவராக இருந்தாலும் வீட்டுக்குள் நுழைந்த பிறகு குடும்பம் வெளிப்படுத்தும் அன்பும், மகிழ்ச்சியும் தான் முழு மனநிறைவையும் கொடுக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. மேலும் நான் செய்த பாக்கியம், எனக்கு மாமனார், மாமியார் வடிவத்தில் அப்பா - அம்மா கிடைத்திருக்கிறார்கள். என் தந்தையார் இறந்த பிறகு என் தாயார் தனி மரமான நிலையில் அவரையும் நம் குடும்பத்தில் ஒருவராகப் பாவித்து, பாசத்தையும் நேசத்தையும் காட்டுகிறோமே... நான் மிகவும் கொடுத்து வைத்தவள்.



"இந்த டாக்டர் அம்மா சொல்வதை நீங்கள் கொஞ்சம் கேட்கவேண்டும்."

நம் மகள் அதிதியுடன் நீங்கள் அதிக நேரம் செலவிடும் வகையில் உங்கள் பிஸி ஷெட்யூல்டை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். இதைக்கூட உங்கள் ஹெல்த்தின் மீது கொண்டிருக்கும் அக்கறையால் தான் சொல்கிறேன். நீங்கள் டென்னிஸ் விளையாடி உடம்பைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறீர்கள் என்பது தெரியும். இருந்தும் பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் உடல் நலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும் (இந்த டாக்டரம்மா சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும்)...ம்.. அப்புறம்... சாப்பிடும்போது அவசர அவசரமாகச் சாப்பிட வேண்டாம். பொறுமையாக மென்று, ரசித்து, ருசித்து சாப்பிடவேண்டும். கைப்பேசியில் பேசிக் கொண்டே அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு போவதைத் தவிர்க்கவும்... ப்ளீஸ்...

நீங்கள் எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெற பிரார்த்திக்கிறேன்.

உங்கள் உயிருக்குயிரான,
ஸ்ரீநிதி கார்த்தி சிதம்பரம்

எழுத்து தவம்


நூல் அறிமுகம்

அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் எனும் 64 சிவ வடிவங்களும் தத்துவ விளக்கங்களும்; விலை: ரூ.250/- ஆசிரியர்: இரா.இராமகிருட்டிணன். வெளியீடு: நர்மதா பதிப்பகம், 10, நாணா தெரு, பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை-600017.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபிரான், ரூபாரூபமான லிங்கத் திரு மேனியுடன் ஆலயம்தோறும் தரிசனம் அருள்வார். ஆனாலும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவர் பல வடிவங்களில் வெளிப்பட்டுள்ளார்.

தாருகாவன முனிவர்களின் அகந்தையைக் குறைக்கும் பொருட்டு மேற்கொண்ட பிட்சாடனர் கோலம்; தட்சன் நடத்திய வேள்வியின்போது வெளிப்பட்ட வீரபத்திரர் திருக்கோலம்; தன்னையே சரணடைந்த மார்க்கண்டேயனைக் காப்பாற்ற மேற்கொண்ட காலாந்தகர் என்கிற கால சம்ஹாரர் வடிவம்; சங்க இலக்கியங்கள் 'ஆலமர்ச் செல்வன்' என்று கொண்டாடும் ஞானவடிவான தட்சிணாமூர்த்தி திருக்கோலம்... இப்படி சிவபிரான் மேற்கொண்ட வடிவங்களின் எண்ணிக்கை அறுபத்து நான்கு என்று பேசும் 'சிவ பராக்ரமம்'. இவற்றை 'மாகேஸ்வர வடிவங்கள்' என்றும் சொல்வார்கள்.

இந்த அறுபத்து நான்கு வடிவங்கள் என்னென்ன; அவை எப்போது வெளிப்பட்டன; அதற்கான காரணங்கள்; அதைப் பற்றிய புராணச் செய்திகள்; அந்த வடிவங்களால் உணர்த்தப்படும் தத்துவங்கள்... என்று விரிவாகப் பேசுகிறது இந்த நூல்.



இவற்றை வெறும் செய்திகளாக மட்டும் கொடுக்காமல், இந்தத் திரு வடிவங்களை எந்தெந்தத் தலங்களில் தரிசிக்கலாம் என்றும் விவரிக்கிறார் ஆசிரியர். குழந்தைச் செல்வம் பெற சோமாஸ்கந்தரை வழிபடுவது, திருமணம் கைகூட கல்யாண சுந்தரர் திருவடிவில் வழிபடுவது, அச்சம் விலக பைரவர் வழிபாடு... என்று விவரிக்கும் பாங்கு சிறப்பானது. வெறுமையாய் ஆலய தரிசனம் செய்யாமல், காரணங்களையும் அது சொல்லும் உட்பொருளையும் புரிந்து கொண்டால்தான் வழிபாடு முழுமையடையும். அந்த வகையில், ஆசிரியர் செய்துள்ளது, பலரும் பயனடைவதற்கான எழுத்து தவம்!

- ராகவன்

காலை எழுந்தவுடன் சிரிப்பு!

மந்திரத்தாலேயே மந்திரியாயிடலாம்!

இருட்ட ஆரம்பிச்சுடுச்சு. ஒரு காட்டுக்குள்ளே போய்க்கிட்டு இருக்காங்க - ரெண்டு நம்பூதிரிங்களும். தம்பி நம்பூதிரி கொஞ்சம் பயந்தவன். தேவி பாகவதம் புக்கை நெஞ்சோட சேர்த்து அணைச்சுக்கிட்டே வர்றான். அண்ணன் தைரியசாலி. கொஞ்சம் சபல புத்தி உள்ளவன். மனுஷ வாடை பாத்துட்டா துஷ்ட விலங்கு சும்மா விடாது. ம்...ம்... என்ன பண்றது? காடு - கும்மிருட்டு - பேய்களின் நடமாட்டமும் இருக்கும். எப்படியும் இந்தக் காட்டைத் தாண்டினாத்தான் பூஜை நடக்கும். ஊருக்குப் போக முடியும்.

கொஞ்ச தூரத்தில் ஒரு சின்னஞ்சிறு வீடு. விளக்கு மின்னியபடி. பசி மயக்கம், பய நடுக்கம், நடந்த களைப்பு எப்படியோ... இன்று இரவு அந்த வீட்டில் தங்கி விடிந்ததும் பயணத்தைத் தொடங்கலாம்னு அந்த வீட்டை நெருங்கிக் கதவைத் தட்டுறாங்க. ரெண்டு அழகான பெண்கள். கதவைத் திறந்து விஷயத்தைக் கேட்குறாங்க. சாமியார்களுக்கு உதவுறது எங்க பாக்யம்னு அவங்கள அனுமதிச்சு தங்க வெச்சு உணவு பரிமாறும்போது அண்ணனுக்கு அந்தப் பெண் மேல சபலம் வருது. அதை அவகிட்ட சொல்றான் அண்ணன். அவளும் ''உங்களமாதிரிதான் நானும் என் தங்கையும். கடவுள் சேவையில் இருக்கோம். உங்கள கட்டிக்க சம்மதம். அதேபோல் என் தங்கையை உன் தம்பி கட்டிக்கணும்''னு நிபந்தனை விதிச்சா. எப்படியோ தம்பிய சமாதானம் செஞ்சு ஓ.கே. வாங்கிடுறான். கல்யாணத்துக்குள்ளே அல்லது கல்யாணம் செய்யாமலே அவளை



அனுபவிக்க விரும்பி அவ ரூமுக்குப் போறான் பெரிய நம்பூதிரி.

தேவி பாகவத புக்கை விடாம பிடிச்சிருக்கும் தம்பிய நோக்கி வலிய வந்து ஆசையைத் தூண்டுறா தங்கச்சி. 'அந்தப் புக்கை தூக்கிப் போட்டு என்னோட சந்தோஷத்தை நீ அள்ளிக்கோன்'னு சொல்றா. அப்போதுதான் தம்பிக்குப் புரியுது அடடா இவ பொண்ணு இல்லேன்னு. அதுக்

ள்ளே அண்ணன் அறையில அலறல் சப்தம் கட்குது. அண்ணன் குரல்தான் அது. ஐயோ அண் ணனைக் காப்பாத்த போகலாம்னு நெனைக்கும் பாதே தங்கச்சி மோகினியா மாறி நிக்கிறா. கையில சாமி புக் இருக்கிறதால அவளால அவனை நெருங்க முடியல. இவனும் அதை டாம நெஞ்சோடு அழுத்தியபடி அணைச்சிருக்க பாழுது விடியத் தொடங்குது. தங்கச்சி மாகினிக்குக் கோபம் வந்து சபிச் டுறா. வெளிச்சம் வந்து

"ரம்யா மேல பொறாமையும் பருமையும் சேர்ந்து வந்தது. அவளின் இந்தத் திடம்தான் லைஃபை தித்திக்க வைக்குது."

பார்த்த பிறகு ஒரு மரத்து மேல சாய்ந் தபடி புக்கை அணைச்சுக்கிட்டு தம்பி இருக் றான். எதிரே அண்ணனின் வெறும் எலும்புத் துண்டுகள் மட்டும். ஸ்திரிகளிடமும் பெண் சுகத்திலும் இறை நம்பிக்கை யிலும் பயணத்திலும் இலக்கை அடை யறதுலேயும் நாம விழிப்பா இருக்க வேண்டியதை மறைமுகமா சொல்லும் இந்தக் கதையை என் பாட்டி சொன் னாங்க. அதுலேர்ந்து இருட்டுனா எனக்கு பயம். ஆனா இந்த பில்லி, சூன்யம், செய்வினை மேல எனக்கு நம்பிக்கை இல்லை. நல்ல மனிதனை நோய் தாக்காது. பாஸிட்டிவ் எனர்ஜி உள்ளவனைச் சாத்தான் அண்டாது. எனக்கு யாரோ சூன்யம், ஏவல்,



வெச்சுட்டாங்க போலிருக்கு'-ன்னு புலம்புறவங்கள பார்த்தா பாவமா இருக்கும். அப்படின்னா கோடீஸ்வரன் மந்திரத்தாலேயே மந்திரியாயிடலாம், எலெக்ஷனில் நிக்காம பணத்தைக் கொட்டி யாகம் நடத்தி, சூன்யம் வெச்சி... ஒரு நாட்டோட ஆட்சிய கலைச்சிட முடியாதா என்ன? மனம் திடமா இருந்தா எதையும் அடைந்திடும் மார்க்கம் உண்டு.

எர்ணாகுளம் ஷூட்டிங். ஒரு ஹோட்டலில் ஐ.வி. சசியோட படம். ரம்யா கிருஷ்ணன், ரோகிணி, நானும் இப்படத்துல. இருட்டு. ஐ.வி. முகமூடி போட்டுக்கிட்டு ரம்யாகிருஷ்ணனை எழுப்பணும். ரம்யா அலறலை ரம்யமா ரசிக்கணும்னு ரோகிணியும் நானும் ஒளிஞ்சிருந்து பார்த்துக்கிட்டு இருக்கோம். ரூம்ல ஒரே ஒரு நீல ஜீரோ வாட்ஸ் மட்டும்தான். இருட்டுல முகமூடியில ஐ.வி. சசியைப் பார்க்கவே கொடூரமா இருந்தது. ரம்யா நல்ல தூக்கத்தில் இருந்தாள். ஐ.வி. சசி அவள் காலைச் சுரண்ட விழிச்சுப் பார்த்த ரம்யா ஓ.......!ன்னு அலறி ஹோட்டலே அல்லோலப்பட்டு ஷூட்டிங் கேன்சல் ஆகி, பயத்தில் அவளுக்குக் காய்ச்சல் வந்தது. எனக்கு ஒரே குஷி. இப்படியெல்லாம் எழுத ஆசை தான். ஆனா அவளோ விழிச்சுப் பார்த்து 'என்ன'ன்னு கேட்டு 'எப்போ உள்ளே வந்தீங்க. இந்த முகம் நல்லாயில்லே'ன்னு சொல்லிட்டு திரும்பவும் தூங்க ஆரம்பிச்சுட்டாள். சசி நொந்து நூடுல்ஸ் ஆயிட்டார். அப்போது தான் ரம்யா மேல பொறாமையும் பெருமையும் சேர்ந்து வந்தது. இந்தத் திடம்தான் லைஃபை தித்திக்க வைக்கும். இந்த மாதிரி ஸ்ட்ராங்கான பேச்சுதான் வாழ்வின் ஸ்டேரிங்னு புரிஞ்சது.


* ஐ.வி. சசி



பீஜம்-னா உயிர். பீஜாட்சரம்னா உயிர் உள்ள சொற்கள்னு அர்த்தம். நம்ம சொற்கள் கூட உயிர் உள்ளதா இருக்கணும். நாம பேர் வைக்கும்போது கூட டக்கு, டொக்குன்னு ஷாட்டா ஸ்வீட்டா வைக்காம.... அர்த்தம் உள்ள மந்திரம் மாதிரி வைக்கணும். அப்போதுதான் அது நம் வாழ்க்கைக்கு மந்திரமா மாறும்... எப்படி? சொல்றேன்.

(தொடரும்)

ஊர்வசி போட்டி சில்க் சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

நவம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **10.12.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:

கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,

ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

......................பின்கோடு:......................

தொலைபேசி : ....


இ-மெயில் : ....

நவம்பர் - 14

பாஸிட்டிவ் எண்ணம் உள்ளவரை ------ அண்டாது

விடையை டிக் செய்யவும்

- ☐ கடவுள்
- ☐ தேவதை
- ☐ சாத்தான்
- ☐ பில்லி, சூன்யம்



உச்சம் தொட்ட உதாரணம்!

என்று தெரிய வில்லை!

- கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

பளிச் பரிகாரம் பளிச் சென்றே விளங்குகிறது. நம்பாதவர்களைப் பற்றிக் கவலை இல்லை. நம்புவோர்க்கு இந்தத் தொடர் ஒரு வரப்பிரசாதம்.

- எம். மிக்கேல்ராஜ், சாத்தூர்

சூர்யா பற்றிய தகவல்கள் அவர் ரசிகர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்குமே விருந்தளித்தன.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

புராணப் படங்களுக்கு இசையமைக்க ஏ.ஆர்.ரஹ்மான் தயாரானாலும், புராணப்படம் எடுக்க யார் தயாராவார்கள்

டாக்டர் சுதா சேஷய்யனின் 'வாரம் ஒரு மந்திரம்' தொடர் ஆரம்பமே மனத்தைத் தொட்டது.

- ஆர்.பி.ஜெயச்சந்திரன் பூனாம்பாளையம்

கல்கியை முப்பதாண்டுகளாக வாசிக்கிறேன். கல்கியின் மாற்றம் மகிழ்ச்சியளிக்கிறது.

- ப. கீர்த்தி, பாபநாசம்

சிலர் வாய் முகூர்த்தம் பலிக்கும் என்பதற்கு ரஜினி, வெங்கடேஷ் பட்டுக்கு

சொன்ன வார்த்தைகளே சாட்சி.

- சி.வெங்கடராமணன், சென்னை

இலை போட்டாச்சு! வெங்கடேஷ் பட் படைக்கும் சூப்பர் விருந்தை உண்ணத் தயாராயிட்டோம்! (அதாங்க ருசிச்சு வாசிக்க...)

- என். பாலகிருஷ்ணன், மதுரை

வாசகர் பகுதிகளை நிறுத்திவிட்டீர்களே, 'கல்கி'யில் இடப் பற்றாக்குறையா? அல்லது வாசகர்களிடம் சரக்குத் தீர்ந்துவிட்டதா?

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

தீபாவளிச் சிறப்பிதழாகவும், சூர்யா ஸ்பெஷல் எனவும் கல்கி இரட்டை சந்தோஷத்தை அளித்தது. சூர்யா பற்றிய அத்தனை செய்திகளும் அருமை. தனது கடின உழைப்பால், நேர்மையால் சூர்யா இன்று உச்சம் தொட்டிருக்கிறார்.

- எஸ். ஜெயகாந்தன்,
புன்செய்ப்புளியம்பட்டி

கூலைஞருக்கு சூப்பராக தங்கபாலு காவடி தூக்குகிறார். மதுரையில் தி.மு.க.வினர் இந்திராகாந்தி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதை மறந்துவிட்டாரா!

- மல்லிகா அன்பழகன், சென்னை

ரமேஷ் ஜாவரின் ஓவியங்களைப் பார்த்துக் கண்கள் குளிர்ச்சியடைந்தது.

- பா. அச்சுதன், வயலூர்

தலை முதல் கால் வரை கல்கி, சூர்யா புகழ் பாடினாலும் அலுக்கவில்லை காரணம். சிரித்த முகமும், ஸ்நேகப் பார்வையும் அபார நடிப்புத் திறமையும் கொண்டவர் சூர்யா.

- ஷ்யாமலா ரங்கநாதன், சென்னை

ஊர்வசியைத் துடுக்குப் பெண்ணாகவும், காமெடி நடிகையாகவும் பார்த்த நமக்கு அவர் எழுதிவரும் தொடரைப் படித்தபின் அவர் நல்ல இலக்கியவாதியாகவும் அறிய முடிந்தது.

- வரத. சண்முக சுந்தர வடிவேலு,
வாழப்பாடி

ஒரு துறையில் உச்சக் கட்டத்தை எட்டுவதற்கு எப்படிப்பட்ட உழைப்பு, தியாகம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்பதற்கு அப்பாவுக்குத் தப்பாத பிள்ளையாக வளர்ந்திருக்கிறார் சூர்யா!

- அ. அப்துல் காதர், மேற்குத் தாம்பரம்

என்னுடைய வளர்ச்சிக்கு அண்ணனின் வழிகாட்டுதலே முக்கியக் காரணம் என்று தன்னடக்கத்துடன் கூறிய நடிகர் கார்த்தியைப் பாராட்டலாம்.

- நித்திலா செல்வராஜ், கோவை

வே.எழிலரசுவின் 'காதல் கேம்பஸ்' தொடர் எக்ஸ்பிரஸ் வேகத்தில் போகுது. கவிதையில் தொடங்கி, காதல் பூசி, இலக்கியம் மிளிர, ஒரு சினிமா மாதிரி சென்னை மாணவர்களைப் படம்பிடிக்கும் ஓர் எழுத்து ஷூட்டிங் அது. பாராட்டுக்கள்.

- கலைவாணி, வேலூர்

ஏழை மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கிட அரசு முன்வருகையில் அதில் ஜாதியென்ன, மதமென்ன? முற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் என்ற பேதம்தான் ஏன்? ஏழை என்பது மட்டுமே அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதே தாமரை(பி.ஜே.பி.)யின் லட்சியம்.

- கி. சர்வோத்தமன், சென்னை.

ஆர்.எஸ்.எஸ். குறித்த தராசு பதிலிலிருந்து மாறுபடுகிறோம். ஆர்.எஸ்.எஸ். தேசபக்தியையும் தேசியப் பண்பாட்டையும் முன்வைக்கும் ஓர் இயக்கம். நம் தேசத்தின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மதிக்கும் இயக்கம்.

- அரவிந்தன் நீலகண்டன்,

தி.மு.க. சாதனை மக்களுக்கு வேதனை!

வி.பி.கலைராஜன்

இன்று அ.இ.அ.தி.மு.க.வில் உயிர்த் துடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருப்பது, 'இளைஞர்கள் - இளம் பெண்கள் பாசறை' அமைப்பு. ''ஒரு கோடிக்கும் அதிகமான தொண்டர்கள் உள்ள அ.தி.மு.க.வில் பாசறை உறுப்பினர்கள் மட்டும் முப்பது லட்சத்துக்கும் மேல்'' என்கிறார் இதன் மாநிலச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான வி.பி. கலைராஜன்.

''2001-06ல் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது மாணவர்களுக்கு இலவச சீருடை, புத்தகங்கள், சைக்கிள் ஆகியவற்றை வழங்கியது! அப்போது மாணவர்களாக இருந்தவர்கள் அம்மாவின் (ஜெயலலிதா) தலைமையேற்று இன்று கழகப் பாசறையில் இணைகிறார்கள். அம்மா பேசும் கூட்டங்களில் ஆர்வத்துடனும் எழுச்சியுடனும் கலந்து கொள்கிறார்கள்'' என்றார் கலைராஜன்.

'திரளும் கூட்டமெல்லாம் வோட்டாகாது' என்கிறாரே கருணாநிதி?

''அது கருணாநிதியின் அனுபவம். அவருக்குக் கூடும் கூட்டம் வோட்டு போடாது. ஆனால், அ.இ.அ.தி.மு.க. தொடக்க காலம் முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கும், புரட்சித் தலைவி அம்மாவுக்கும் கூடும் கூட்டம் அத்தனையும் வோட்டாகும் என்பது வரலாறு. மேலும் கோவை, திருச்சி, மதுரை ஆகிய கூட்டங்கள் திரட்டப்பட்டவை அல்ல; கருணாநிதியின் ஆட்சியை இந்த முறை துரத்திவிட வேண்டும் என்ற வெறியில் திரண்டு வந்தவை. தவிர தி.மு.க.வைப் போல கொள்ளையடித்து வைத்த பணத்தில் கோடிக்கணக்கில் செலவழித்துக் கூட்டம் கூட்டும் வசதி எங்களுக்கு இல்லை. கருணாநிதிக்குப் பயம் வந்துவிட்டது.''

அவருக்கு ஏன் பயம் வர வேண்டும்? 'எங்கள் சாதனைகளைப் பார்த்து மக்கள் மீண்டும் தேர்ந்தெடுப்பார்கள்' என்று சொல்கிறாரே?

''தி.மு.க. சாதனை, மக்களுக்கு வேதனை. கடத்துவதற்கென்றே ஒரு ரூபாய் அரிசி, கேபிள் கனெக்ஷன் கொடுத்து குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ள இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி, மணல் கடத்தல், கிரானைட் கடத்தல், கட்டப் பஞ்சாயத்து, ரவுடி ராஜ்யம் என்று வேதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். காப்பீட்டுத் திட்டத்தில் மத்திய அரசு பங்களிப்பு இருக்கிறது. அதிலும் கமிஷன் விளையாடுகிறது. கான்கிரீட் வீடுகள் ஏமாற்று வேலை. இன்றைக்குக் கட்டுமானப் பொருட்கள் ராக்கெட் வேகத்தில் விலை ஏறிக்கொண்டே போகும் நிலையில் 75000க்கு ஒரு டாய்லெட்கூட கட்ட முடியாது. இலவச மோட்டார் மற்றொரு ஏமாற்று வேலை. 19 லட்சம் மோட்டார் கொடுக்க, வரும் தேர்தலுக்குள் இவரால் முடியுமா? தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற அரசு கஜானாவைக் காலி செய்கிறார். தமிழக நிதி நிலைமை மிக மிக மோசமாக இருக்கிறது. காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு... என்று தமிழகத்துக்கு வளம் சேர்த்த ஆறுகளை அண்டை மாநிலங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார் கருணாநிதி. விண்ணை முட்டும் விலைவாசியால் மக்கள் மூச்சுத் திணறுகிறார்கள்.''

நிறைய முதலீடுகள், புதிய தொழிற்சாலை,



தமிழகத்துக்கு வளம் சேர்த்த ஆறுகளை அண்டை மாநிலங்களுக்குத் தாரை வார்த்து கொடுத்துவிட்டார் கருணாநிதி.

வேலை வாய்ப்பு என்று நிறைய சாதனைகள் நடந்திருப்பதாக தி.மு.க.வினர் கூறுகிறார்களே?

''உண்மை என்ன தெரியுமா? தமிழகத்தில் அடிப்படைக் கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் அப்படியே அவர்கள் சொல்வதுபோல ஏதேனும் வளர்ச்சி இருக்குமானால் அது தனிப்பட்டவர்களின் முயற்சியாக இருக்குமே தவிர அதில் கருணாநிதியின் நிர்வாகப் பங்களிப்பு பூஜ்யம்தான். எந்த ஒரு விஷயத்திலும் தன் குடும்ப நலனைப் பிரதானமாக வைத்துச் செயல்படும் கருணாநிதியை மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.''

தமிழகம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் அமைதிப் பூங்காவாமே?

''இது நல்ல வேடிக்கை. இங்கே பகலிலேகூட பெண்கள் நடமாட முடியவில்லை. குழந்தைகளைப் பெற்றோர் பள்ளிக்கு அனுப்பவே பயப்படுகிறார்கள். காரணம் கடத்தல். கடந்த ஒரு வருடத்தில் மட்டும் சென்னையில் 29 கடத்தல் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இங்கே தி.மு.க.வினரே சமூக விரோதக் கும்பலாக மாறி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது போதாதென்று கருணாநிதியின் குடும்ப அராஜகம் இன்று திரைப்படத் துறை உட்பட பல துறைகளைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. ஸ்பெக்ட்ரம் ஊழல் நாற்றம் நாட்டையே நாறடித்து விட்டது. இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.''

இடைத் தேர்தல் வெற்றிகள் தி.மு.க. மீது மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதைத்தானே காட்டுகிறது?

''அவை வெற்றியல்ல; ஜனநாயகத்தைக் கொலை செய்து பிடுங்கிய செயல். ஆனால், அதுபோன்று மீண்டும் பணம் மற்றும் அராஜகத்தால் பொதுத் தேர்தலில் வெற்றி பெறலாம் என்று தி.மு.க. கனவு கண்டால் அது நிச்சயம் பலிக்காது. மக்கள் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்துவிட்டார்கள். நிச்சயமாக 2011ல் அ.தி.மு.க. ஆட்சியில் அமரும்.''

- ப்ரியன்


படம்: **ராஜன்**

டைனிங் & பிஸினஸ் டேபிள்!

வர்றவங்களை நான் அன்னிக்கு அசத்தியே ஆகணும். என் காதுல அதுக்கு முந்தின நாள் நந்தன் நீல்கேணி பேசின வார்த்தைகள் ஓடிக்கிட்டே இருந்துச்சு. கெஸ்ட்டுகள் கிளம்பிட்டாங்கன்னு இன்ஃபோசிஸ் லேருந்து ஃபோன் வந்துடுச்சு. ஒருமுறை உள்ளே போய் கிச்சனைப் பாக்கறேன். எங்க ஆளுங்க எல்லாம் அட்டென்ஷன்ல நிக்காத குறைதான்.

''நான் நந்தன் பேசறேன். நாளைக்குப் பதினைந்து பேரைக் கூட்டிக்கிட்டு வரேன். அமெரிக்க கம்பெனிக்காரங்க, பெரிய ஆர்டர் ஒண்ணைப் பத்திப் பேசறதுக்காக வந்திருக்காங்க. நீங்க அங்க இருக்கணும். ஆர்டர் எடுக்கணும். என்ன பண்ணுவீங்களோ, ஏது பண்ணுவீங்களோ, நீங்களே முடிவு பண்ணிக்குங்க. ஆனா, எனக்கு ஆர்டர் வரணும். மேக் ஷ்யூர் ஐ கெட் இட்.''

நந்தன் நீல்கேணி பத்தி நான் சொல்லி உங்களுக்குத் தெரியணும்னு இல்ல. உலகமே ஆச்சர்யமா பாக்கற இன்ஃபோசிஸ் தலைவரா இருந்தவரு. இப்போ இந்தியா முழுக்க அடையாள அட்டை கொடுக்க தில்லி போயிட்டாரு. ரொம்ப ஃபார்மலான மனுஷன். அவருக்கு சர்வ் பண்றதெல்லாம் ஒரு கலை.



✱ நந்தன்-ரோகிணி தம்பதி

உலகம் முழுக்க பல முறை சுத்தினவரு. டேபிள் க்ளாத்தை அவர் மடியில எடுத்துப் போட்டுக்கிற விதமா இருக்கட்டும், ஸ்பூனையும் ஃபோர்க்கையும் அமர்க்களமா பிடிக்கற ஸ்டைல் ஆகட்டும், டைனிங் டேபிளையே பிசினஸ் டேபிளாக மாத்தற விதமாகட்டும், பார்க்கப் பார்க்க ஆச்சர்யமா இருக்கும்.

நந்தன் வந்துட்டாரு. கூடவே ஃபாரினர்ஸ். எல்லோரும் சேர்கள்ல உட்கார்ந்துட்டாங்க. நந்தன் என்னை அவங்களுக்கு அறிமுகப்படுத்தினாரு. நான் சுத்தி ஒரு முறை பார்த்துக்கிட்டேன். ஒவ்வொருத்தருடைய டேஸ்ட்டும் எப்படி இருக்கும்னு என்னுள்ள இருக்கிற ஷெஃப் கணக்குப் போட்டுட்டான்.

''இங்கே யாராவது வெஜிடேரியன் இருக்கீங்களா?''



"இதை இதுவரைக்கும் ரெண்டே ரெண்டு பேருக்குத் தான் பரிமாறி இருக்கோம்."



மௌனம். இல்லை என்று தலையாட்டல்.

"சீ ஃபுட் சாப்பிடாதவங்க?"

மீண்டும் மௌனம். இல்லை.

"குட். இன்னிக்கு நாங்க உங்களுக்கு 4 கோர்ஸ் மீல்ஸ் தரப் போறோம். அதுவும் சௌத் இண்டியன் ஸ்டைல்ல... இதை இதுவரைக்கும் ரெண்டே ரெண்டு பேருக்குத்தான் பரிமாறியிருக்கோம். மைசூர் மகாராஜா நரசிம்ம ராஜ உடையார், அடுத்தது தாய்லாந்து பிரைம் மினிஸ்டர். மூணாவதா, உங்களுக்கு..."

அடுத்தடுத்து ஸ்டார்ட்டர், மெயின் கோர்ஸ், டெஸர்ட் என்று தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் ஸ்பெஷாலிட்டி ஐட்டங்களை அடுக்கத் தொடங்கிட்டோம். எல்லாமே பளபளக்கற வெள்ளித் தட்டுல. எதை எப்படிச் சாப்பிடணும்னு தெரியாம திணறிப் போய்ட்டாங்க. நந்தன் மட்டும் என்னை ஓரக் கண்ணால பார்த்துக்கிட்டே லேசா சிரிக்கறாரு. என் கைமணம் அவருக்குத் தெரியும்.

முடிஞ்சுது. எல்லோரும் உற்சாகமா கிளம்பிட்டாங்க. மறுநாள் நந்தன் பேசறாரு. "வொண்டர்ஃபுல். நீ பெரிய ஆளா வருவப்பா. ஆர்டர் இஸ் த்ரூ." ஆர்டர் கிடைச்ச உற்சாகம் அவர் குரல்ல. அந்த வருஷம்தான் இன்ஃபோசிஸ் ஒரு பில்லியன் டாலர் கம்பெனியா ஆச்சு. அணிலோட சேவை மாதிரி, அதுல என் கைப்பக்கு வத்துக்கும் ஒரு சின்ன பங்கு உண்டுதானே?

நந்தன் ரொம்ப கம்மியா சாப்பிடுவார். அவர் வொய்ஃப் ரோகிணியும் அதிகம் சாப்பிட மாட்டாங்க. கரெக்டா சாப்பிடுவாங்க. கொங்கிணிகள். அதனால அவங்களுக்குக் கடல் உணவுகள் ரொம்ப புடிக்கும். லாப்ஸ்டர் புடிக்கும்.

ஒரு முறை விக்கிபீடியா சேர்மன் ஜிம்மி வேல்ஸுக்கும் கூட ஒரு ஐம்பது பேருக்கும், நந்தன் வீட்டுல டின்னர். நாங்க அவர் வீட்டுக்குப் போய் கேட்டரிங் செய்யப் போனோம். அதையும் புதுமையா செய்யணும்னு சொல்லிட்டார் நந்தன். போகும்போதே திட்டத்



* ஜிம்மி வேல்ஸ்

தோட போனோம்.

ஃபைன் டைனிங் சில்வர் சர்வீஸ் - இது தான் ஐடியா. அதாவது ஐம்பது பேருக்கும் ஒரே நேரத்துல சர்வ் பண்ணணும். அதுவும் ஃபோர் கோர்ஸ் சௌத் இந்தியன் மீல்ஸை ஒரே சமயத்துல ஐம்பது பேருக்கும் சர்வ் பண்ணணும். அப்படின்னா, இருபத்தஞ்சு வெயிட்டர்கள் வேணும். ஒரேமாதிரி டேபிளுக்குப் போகணும். ஒரே விதமான ஐட்டங்களைத் தட்டுகள்ல எடுத்து வைக்கணும். பெரிய படையோட அங்கே போனேன்.



* மாண்டேக் சிங் அலுவாலியா

பொதுவா இந்த ஃபைன் டைனிங்கை ஃபிரான்சுல செய்வாங்க. அதுக்கு ஃப்ரெஞ்சு சில்வர் சர்வீஸுன்னே பேரு. நான் முதல்முறையா அதையே சௌத் இந்தியன் உணவுகளுக்குச் செஞ்சேன். ஒரு துளி பிசகு இல்லை. ஒரு துளி தடுமாற்றம் இல்லை. ஒரு துளி குறை இல்லை. நந்தனும் ரோகிணியும் மட்டுமில்லை; ஜிம்மி வேல்ஸ் அசந்துட்டாரு.

அதேபோல, மாண்டேக் சிங் அலுவாலியா. அவர் பஞ்சாபி. நார்த் இந்தியன் சிக்கன் டேஸ்ட்டுதான் அவருக்குத் தெரியும். நந்தன் வீட்டுல சௌத் இந்தியன் சிக்கன் டேஸ்ட்டை அவருக்குக் காண்பிச்சேன். ரொம்ப சந்தோஷம் அவருக்கு.

நந்தன் அதிகம் பேசமாட்டார். சாப்பாட்டு டேஸ்ட் பத்தியும் சொல்ல மாட்டார். அவருடைய முகபாவங்களை வைத்தே நான் புரிஞ்சுப்பேன். பல நாடுகள்ல பலவிதமான உணவுகளைப் பார்த்தவர். அவருக்கு ஒரு டேஸ்ட் உண்டு. இன்ன ஐட்டம் இன்ன டேஸ்ட்டுலதான் இருக்க முடியும்கறது அவருக்குத் தெரியும். டேஸ்ட்டுல வித்தியாசம் தெரிஞ்சா முகம் காட்டிக் கொடுத்துடும்.

ஆனால், இன்னிவரைக்கும் அவரோட முகம் மாறினதில்ல.

இவர மாதிரியே மத்தவங்களும் இருக்கமாட்டாங்க இல்ல. அனில் கும்ப்ளே, வெங்கடேஷ் பிரசாத், ஸ்ரீநாத் எல்லாம் ரொம்ப வித்தியாசமானவங்க. அவங்க டேஸ்ட் எப்படி இருக்கும் தெரியுமா?

(அடுத்த வாரம்)

உப்பு புளி தோசை

தேவையானவை: (பச்சரிசி - 250 கி, உளுந்து 100 கி, சிவப்பு மிளகாய் - 50 கி, முழு தனியா - 50 கி, ஜீரா - 50 கி, பெருங்காயம் - 20 கி, கறிவேப்பிலை - 10 கி, வெல்லம் - 100 கி, புளி - 50 கி, தேங்காய்த் துருவல் - 100 கி, உப்பு - சுவைக்கேற்ப, தேங்காய் எண்ணெய் - தோசை சுட.)(அளவுகள் கிராமில்)

அரிசியையும் உளுந்தையும் தண்ணீரில் 2 மணிநேரம் ஊற வைக்கவும். மேலே குறிப்பிட்ட அனைத்தையும் அரிசியோடும் உளுந்தோடும் சேர்த்து, தண்ணீர் விட்டு அரைத்து மாவு பதத்தில் எடுத்துக் கொள்ளவும். 2-3 மணிநேரம் புளிக்க விடுங்கள். பின்னர் மெல்லிய தோசையாக தேங்காய் எண்ணெய் விட்டு வார்க்கவும். தட்சிண கர்நாடக ஸ்பெஷல் தோசை இது.



பூதக் கண்ணாடி

பிரம்மாண்டங்களின் காலம்

திரை விலகி ஒளி விழுந்ததும் தெரியும் பிரம்மாண்டத்தின் பிரமிப்பு அகல கொஞ்ச நேரம் ஆகிறது. மேடை முழுவதையுமே ஆக்கிரமிக்கும் பெரிய வீடு. விசாலமான கூடம், முற்றம், சமையல் அறை முகப்பு, மாடி அறைக்குப் படிகள், வலது பக்கம் படுக்கை அறை (விசையைத் தட்டினால் மின்விசிறி சுழல்கிறது!) நேர் எதிரே வாயிற்கதவு, அதன் பின் தெரியும் வேலியும் செடிகளும். இடி, மின்னல், வீட்டின் நடுமுற்றத்தில் சடசட வென்று மழை பெய்யும் அழகு என்று வியப்படைய வைக்கிறது அரங்க அமைப்பு.

சிரத்தாவின் 'தனுஷ்கோடி' நாடகத்தின் ஆரம்பக் காட்சி இது. 1964ல் ஏற்பட்ட பெரிய புயல் மழையில் தனுஷ்கோடி, வெள்ளத்தில் மூழ்கி அழிந்துபோனது. அந்தச் சூழலின் ஓர் இழையைப் பின்னணியாக்கி, வங்கி அதிகாரி ஒருவர், தன் அறிக்கையால் பாதிக்கப்பட்ட ஒரு ஊழியனால், தன் வீட்டில் சிறை பிடிக்கப் பட்டு மரணத்தின் விளிம்பிலிருந்து தப்பிக்கும் கதையைச் சொல்கிறது நாடகம்.

ஆரம்பக் காட்சியை விட அதிக பிரம்மாண்டத்துடன் மிளிர் கிறது நாடகத்தின் இறுதிக் காட்சி. ராட்சத அலை அடித்து அந்த வீடும் (ஊரும்) மூழ்கிப்போவது ஆச்சர்யம். பல்வேறு நாடகக் குழுக்களில் இருந்து நடிகர்களையும், தொழில்நுட் பக் கலைஞர்களையும் திரட்டி ஒருங்கிணைத்து வித்தியாசமான நாடகங்களை நடத்த முனைந்திருக்கிறது சிரத்தா.

சாதாரண வசனங்களையும் தம் உச்சரிப்பால் மெருகேற்றுகிறார் காத்தாடி ராமமூர்த்தி. உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் சுந்தர்ராஜனும், தெளிவான வசன உச்சரிப்புடன் பாலாஜியும் போலிஸாய் வரும் கிரீஷும் பாராட்டுக்குரியவர்கள்.

உயிரிழப்பும் பொருட்சேதமுமாய் சரித்திரத்தில் பெரிய வடு வாகப் பதிந்துபோன சோக மயமான நிகழ்வின் பின்புலத்தில் நடக்கும் நாடகம் என்பதால், அதன் கதையமைப்பு குறித்த எதிர்ப் பார்ப்புகள் மிக அதிகம். இந்த நாடகம் இன்னும் பெரிய கதைக் களத்தில், செறிவான பாத்திரப் படைப்புடன் மறு புனரமைப்பு செய்தால் இன்னும் சிறக்கும். ஒரு பிரம்மாண்டமான சூழலை மேடையில் ஏற்படுத்த மேற்கொண்டு இருக்கும் முயற்சியும் அசாத்திய உழைப்பும் பாராட்டுதலுக்குரியன.

- ஆனந்த் ராகவ்



பேங்க்

ஜெயக்குமாரி, தியாகதுருவம்

எஸ்.டி.பி.திட்டத்தைக் கொஞ்சம் விளக்குங்களேன்?

டி.பாலசுந்தரம்: எஸ்.டி.பி. திட்டம் என்பது சற்று வித்தியாசமானது. உங்களிடம் ஒரு லட்ச ரூபாய் இருக்கின்றது. மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்ய நினைக்கின்றீர்கள். ஆனால் சந்தை இறங்க வாய்ப்புள்ளது என்று நினைக்கின்றீர்கள். இறங்கும்போது முதலீடு செய்யலாம் என்று தோன்றுகிறது. என்றைக்குச் சந்தை இறங்கும் என்று உங்களுக்குத் தெரியாததால் உங்கள் பணத்தை பிக்சட் டெப்பாசிட்டாக பேங்கில் போடவும் முடியாது. சேவிங்ஸ் பேங்க் கணக்கில் பணத்தை வைத்திருந்தால் மிகக் குறைவான வட்டியே கிடைக்கும். இந்தச் சூழ்நிலையில் மியூச்சுவல் ஃபண்டுகள் உங்களுக்கு உதவும் வகையில் கொடுக்கின்ற திட்டம் தான் சிஸ்டமேட்டிக் டிரான்ஸ்பர் ப்ளான். உங்கள் பணத்தை ஒரு மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் லிக்யுட் ஃபண்டில் (கடன் பத்திரம் மற்றும் பணச்சந்தையில் முதலீடுகள் செய்யும் ஃபண்ட்) போட்டுவிட்டு அதே மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம் நடத்தும் மற்றொரு பங்குச் சந்தையைச் சார்ந்த ஃபண்ட் திட்டத்தில் மாதாந்திரமாக 10,000 ரூபாய் டிரான்ஸ்பர் செய்து முதலீடு செய்து கொள்ளுமாறு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து விட்டீர்கள் என்றால், லிக்யுட் ஃபண்டில் இருந்து ஈக்யுட்டி ஃபண்டுக்கு மாதாந்திரமாக முதலீட்டை மாற்றிவிடுவார்கள். நீங்கள் எதிர்பார்த்ததைப்போல் சந்தை இறங்கினால் அதனால் வரும் பயனை நீங்கள் அனுபவிக்கலாம். லிக்யுட் ஃபண்ட்களின் ரிட்டர்ன் வங்கிகளின் எஸ்.பி. கணக்கு வட்டி விகிதத்தைவிட அதிகமாக வந்தால் உங்களுக்கு லாபம் தானே.

எஸ்.டபிள்யூ.பி. என்பது சிஸ்டமேட்டிக் வித்ட்ராயல் ப்ளான் என்பதாகும். ஒரு ஃபண்டில் ஒரு பத்தாயிரம் ரூபாய் முதலீடு செய்து 1000 யூனிட்களை வாங்கி வைத்திருக்கின்றீர்கள். அந்த 1000 யூனிட்டின் மதிப்பு 20,000 ரூபாயாக உயர்ந்திருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அந்த ஃபண்டின் யூனிட்களை விற்றுவிட்டு வெளியே வர நினைக்கின்றீர்கள். அதே நேரத்தில் எதிர்வரும் காலத்தில் சந்தை ஏறும் என்றும் நினைக்கின்றீர்கள். உங்கள் மியூச்சுவல் ஃபண்டுக்கு நீங்கள் மாதாந்திரம் 100 யூனிட்களை விற்றுவிடச் சொல்லி இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கலாம். மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம் ஒவ்வொரு மாதமும் 100 யூனிட்களை விற்று பணத்தை உங்களுக்குக் கொடுக்கும். இடைப்பட்ட காலத்தில் சந்தை ஏற்றத்தைச் சந்தித்தால் அதன் பலனை உங்கள் யூனிட்டின் விற்பனை விலையில் நீங்கள் அடையலாம். எப்படி முதலீடுகள் செய்யும்போது மாதாந்திரமாக முதலீடு செய்ய முடிகின்றதோ அதேபோல் பணத்தை முதலீட்டிலிருந்து வெளியே எடுக்கும் போதும் மாதாந்திரமாக வெளியே எடுக்க இந்தத் திட்டம் உதவுகின்றது.

✽ டி.பாலசுந்தரம்




சுந்தரி, பெரம்பூர்

என்னுடைய தந்தை ஓர் உயில் எழுதிவிட்டுக் காலமானார். அந்த உயில் எனது அண்ணனிடமிருக்கிறது. ஆனால் உயில்படி சொத்தைப் பிரித்துக் கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார். என் பங்கு சொத்தினை நான் பெறுவதற்கு வழி என்ன?

மூலதனம், சட்டம், நுகர்வோர் பாதுகாப்பு சம்பந்தமான கேள்விகளை 'கொஸ்டின் பேங்க்
செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர்

அப்பாவின் உயிலை வரவழைப்பது எப்படி?



இ.ராமலிங்கம்:

சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள சொத்துக்களை உயில் அடிப்படையில் பெற நீதி மன்றத்தில் அந்த உயிலைத் தாக்கல் செய்து அதன் நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் சொத்தை விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது. நீதி மன்றத்தில் உயிலினைத் தாக்கல் செய்து நிரூபிக்க வேண்டும் என்று உங்கள் அண்ணனை நீங்கள் வற்புறுத்தலாம். 'பேச்சு வார்த்தைக்குச் சரிப்பட்டு வரவில்லை என்றால், வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பி, உயிலின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரலாம். அதற்கும் சரிப்படவில்லை என்றால் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்து உயிலினை நீதி மன்றத்துக்குக் கொண்டு வரச் செய்யலாம். அதன் பின் உயிலின் நம்பகத் தன்மையை நிரூபிக்க நீங்களே நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்ற ஆணை கிடைத்த பின்னர், உங்கள் பங்கு சொத்தை நீங்கள் அனுபவிக்கலாம்.



* இ.ராமலிங்கம்

முத்தாளம்மன், திருச்சி

தெரிந்த ஒருவருக்கு நான் கடன் கொடுத்தேன். இப்போது கேட்டால் திரும்பத் தர மறுக்கிறார். கடன் தொகையைத் திரும்பப் பெற முடியுமா?

நீங்கள் கடன் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு ரிட் (Writ)மூலமோ அல்லது நுகர்வோர் தீர்ப்பாயம் மூலமோ வழக்கு தாக்கல் செய்ய முடியாது. கடன் தொகையைத் திரும்பப்பெற உரிமையியல் நீதி மன்றத்தில் மட்டுமே நீங்கள் மனுத் தாக்கல் செய்ய முடியும்.

...று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.
...யவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

நண்பன் நல்லா அமைஞ்சா ஜெயிச்சுடலாம்!

ஸ்ரீநி



"என்னுடன் ப்ரி ஸ்கூலிலிருந்து, டான்பாஸ்கோவில் ப்ளஸ் 2 முடிக்கும் வரை ஒன்றாகப் பயின்றவர் ராஜேஷ். பக்கத்து வீடு. பள்ளித் தோழன். அவரை என் அலுவலகத்திலேயே துணையாக வைத்துக்கொண்டிருக்கிறேன். அரசியல், தொழில், வேலையாக மாதத்தில் பாதி நாட்கள் நான் வெளிநாடு, வெளியூர் என்று கிளம்பும்போது சென்னையில் வேலைகளைப் பார்த்துக் கொள்பவர் ராஜேஷ்தான்.

அடுத்து சுருத் மேத்தா! லண்டனில் சொலிசிட்டராகப் பணியாற்றுகிறார். நான் 1993-95ல் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றபோது நெருக்கமானவர் மேத்தா. அவருடைய நோட்ஸை வாங்கித்தான் நான் காப்பி செய்து கொள்வேன். இந்த இரு நண்பர்களால்தான் என் அரசியல் வாழ்வில் வெற்றி தொடர்கிறது."

அறிவுரை குறைவா சொல்லும் அப்பா!

"நானும் அப்பாவும் தோளில் கை போட்டுக் கொண்டு பாசத்தை வெளிப்படுத்தும் ரகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல; formal ஆகத்தான் இருப்போம்.

எந்த ஒரு விஷயத்திலும் அவசரப்பட்டு முடிவெடுக்க மாட்டார் அப்பா. தீர விசாரித்து, பின்னரே முடிவு செய்வார். அவர் அளவுக்கு எனக்கு Eye for details இல்லாதது ஒரு பலவீனம்தான். அவருக்குப் புரிந்தது மற்றவருக்குப் புரியவில்லை என்றால் கோபம் வந்துவிடும். தவிர புள்ளி விவரங்களை எந்தத் துண்டு சீட்டும் இல்லாமலேயே பேசுவது வியப்பாக இருக்கும். அவர் எனக்குச் சொல்லும் அறிவுரைகள் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், பல விஷயங்களில் அவர் நடந்துகொள்ளும் முறை, எடுக்கும் முடிவுகள் ஆகியவை எனக்குச் சொல்லித் தரும் பாடங்களாக அமையும்."



★ கல்விக் கடன், வேலை மற்றும் பல்வேறு உதவிகள் கேட்டு கார்த்தியை அன்றாடம் மாநிலம் முழுவதும் இருந்து காங்கிரஸ் இளைஞர்கள் சந்திக்கிறார்கள். இவர்களைச் சந்திக்க வசதியாகத் தனது வர்த்தக அலுவலகம் இருக்கும் கட்டடத்திலேயே ஒரு தளத்தில் தமது அரசியல் அலுவலகத்தை வைத்திருக்கிறார்.

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.

